அளவில்லா அருளாளனும் நிகரில்லா அன்புபடையோனுமாகிய
அல்லாகுவின் (இறைவன்) திருப்பெயரால்.

# மனிதா..! நீ உன்னை தெரிந்து கொண்டாயா?

நான் நீ என்றெல்லாம் கூறுவது இன்று பார்கின்றஇந்த உடம்பையல்ல! அன்றி ஆத்மாவை (உள்ளம்,) தான் அதற்கு பயணம் செய்வதற்கான பேருந்து தான் உடல். அது தாய் தந்தை இருவரின் விந்து துளிகளால் சேர்த்தமைத்து அனைத்தும் படைத்தவன் விரிவுபடுத்திய மண்குடம் தான் அது. மனிதரில் முதல்வனை (ஆதம்) படைத்த பொழுதே படைத்தவன் ஓர் ஆத்மாவில் இருந்து உலகின் இறுதி நாள் வரை உள்ள அனைத்து மனிதர்களையும்(ஆத்மாவு) சொர்கத்தில் படைத்தான். சூரத் அன்னிசா:1 ன் விளக்கம் பார்க்கவும். சூரத் அஃராஃப்:172, 173 ல் கூறியவாறு ஆதம் மக்களின் முதுகில் இருந்து உலகின் இறுதி நாள்வரை உள்ள அவர்களின் முழு மக்கள் பரம்பரைகளை வெளியேற்றி அவர்கள் ஒவ்வொருவருடனும் நானல்லவா உங்களுடைய எஜமானான நாதன்? எனபடைத்தவன் கேட்க அவர்கள் ஒவ்வொருவரும் கூறினார்கள்; ஆம்.நாதா நாங்கள் அதற்க்கு சாட்சியழிக்கின்றோம்..அதாவது மனிதனுக்கு தேவையான அனைத்து சட்டத்திட்டங்களும் வழங்கும் ஓர் அதிகாரி அவர்களின் எஜமானான படைத்தவன் மட்டுமே என்றஒப்பந்தத்தினால் அனைத்து மனிதர்களை ஏற்று கொள்ளுமாறு ஆக்கினார். பிறகு அனைவரையும் உயிரிழக்க வைத்து ஆதமின் முதுகில் திரும்பவும் திருப்பி அனுப்பட்டது.

சூரத் அஸ்சம்ஸ்:1-6- ல் பொதுவாக ஆறு நிகழ்ச்சிகளை (சூரியனும் அதன் வெப்ப மிக்க ஒளியும், அதை துடர்ந்து வருகின்றஅழகான நிலவும் அழகான ஒளியும்,பகலின் தெளிவார்ந்த ஒளி தென்படலும், இரவின் இருள் மூடலும் மேற் கூரையாக அமைத்த ஆகாயமும் ஒட்டகபட்சியின் முட்டையின் உருவம் போல் அமைத்த பூமியும்) ஆணையிட்டுக் கொண்டு 7-10 இறைவன் கூறுகின்றான். ஆத்மாவை அவன் ஒருங்கிணைத்து ஒவ்வொரு உள்ளங்களுக்கும்(ஆத்மாவு) அதன் நன்மை வழியும் தீமை வழியும் நாம் வழங்கியுள்ளோம். அப்பொழுது யார் தனது ஆத்மாவை சுத்தம் செய்தது (தெரிந்துகொண்டான்) அவர்கள் வெற்றி பெற்றனர். யார் அதை அசுத்தப்படுத்தினரோ (தெரிந்து கொள்ளாதது) அவர்கள் தோல்வியடைந்தனர். அதாவது “நான்” என்று கூறுவது ஆத்மாவ் என்றும் அது படைத்தவனின் ரூஹின் பிரிவென்று உணர்ந்து நானில்லை அவன் மட்டும் என்ற எண்ணத்தில் நிலை கொள்பவர் எவரோ அவர்கள் வெற்றிபெற்றனர் என்று சாரம் அப்படிப்பட்டவர்கள் மட்டுமே படைத்தவனுடன் ஆரம்பத்தில் செய்த ஒப்பந்தத்திற்கேற்ப வாழ்பவர்.அர்ரஹ்மான் :1-4 சூராவில் அருளாளனான இறைவன் குர் ஆன் கற்றுக் கொடுத்தான். மனிதனை படைத்தான் அதன் விளக்கவும் (கருத்து, பயன்) கற்றுக்கொடுத்தான் என கூறியிருக்கின்றான் .

இங்கு “குர்ஆன் கற்றுக்கொடுத்தான்” என்று கூறியதன் கருத்து சொர்க்கத்தில் வைத்து அனைத்து மனிதருக்கும் நன்மையென்னவென்றும் தீமை என்னவென்றும் புரிகின்றகுர்ஆனின் உள்ளம் (பொருள்) கற்றுக்கொடுத்ததாகும். அதன் பிறகு தான் மனிதனின் உடலை பூமியில் உருவாக்கினான். பிறகுஅவனுக்கு குர்ஆனின் கருத்தையும் கற்றுக்கொடுக்கப்பட்டது. நன்மைசெய்பவனாகவோ இல்லை தீமைசெய்பவனாகவோ செயல்படும் முழு உரிமையையும் வழங்கினான் என்று இன்சான்:3, பலத்:10 என்றசூராவில் கூறப்பட்டிருக்கிறது.

உடம்பு

ஹிஜ்ர்:26, அர்ரஹ்மான்:14 என்றவசனங்களில் கூறியவாறு கொட்டினால் ஒசை எழுப்புகின்ற, ஒட்டுகின்றவாடை வீசுகின்றகருப்பு சேற்று மண்ணால் குயவர் பானை செய்வது போல் படைத்தவன் ஆதமின் உடலை உருவாக்கினான். அதன் பிறகு அதை உருவப்படுத்தினான். ஹிஜ்ர்:29, சுவாத்:72 என்றவசனங்களில் கூறியவாறு இறைவனின் ரூஹ் (உயிர்+உள்ளம்) அதில் ஊட்டினான். அன்னிசா:1-ல் அவனில் இருந்து அவன் துணையை படைத்தான் என்று கூறுவதற்கு பதிலாக “அவளில் இருந்து அவளின் துணையை படைத்தான்” என கூறியதில் இருந்து ஆதமின் ஆத்மாவிலிருந்து தான் அதனுடைய துணையான அவ்வாவின் (ஏவாள்) ஆத்மாவை படைத்தான் என புரிந்து கொள்ளலாம். (ஆண், பெண் இருவருடைய ஆத்மாவையும், பெண்ணின் உடலையும் பெண் உறுப்பாகவும், ஆணின் உடலை ஆண் உறுப்பாகவும் குர்ஆன் அறிமுகபடுத்துகின்றது.) ஈசா (ஏசு)வை போலவே அவ்வா (ஏவாள்) வின் உடல் “உருவாகு” என்ற சொல் மூலம் உருவானது. தந்தையும், தாயும் இல்லாமல் இறைவன் படைப்பிற்கு எடுத்துகாட்டுதான் ஆதமும், அவ்வாவும். ஆனால் தந்தையில்லாமல் படைத்ததிற்கு சான்று ஈசா (ஏசு).ஈசா தாய்பேறினால் உருவானதென்றால் அவ்வா (ஏவாள்) தாய்பேறில்லாமல் உருவானாளென்ற வித்தியாசம் இருக்கிறது. தந்தையும், தாயும் ஒன்றிணைய வைத்து படைத்ததற்க்கு எடுத்துக்காட்டு தான் நாம் அனைவரும்.

சூரத் ஹிஜ்ர்: 27 ல் கூறியவாறு மனிதர்களை படைப்பதற்கு முன் நெருப்புலையிருந்து உடல் படைத்த ஜின் (அசூரர்கள்) தான் பூமியின் அல்லாகுவின் (இறைவன்) சேவையாளர்கள். அவர்கள் சேவை புரியமல் பூமியில் சேதம் விளைவிக்கும் தீயவர்களாக மாறியபொழுது இப்லீஸின் தலைமையில் (மலக்குகள்,) அவர்களை முற்றிலுமாக அழித்து விட்டார்கள். ஜின்குலத்தில் இருந்த இப்லீஸ் அவ்வேளையில் இறைமறுப்போன் அல்ல. பிறகு தான் பூமியில் சேவை புரிய மனிதர்களை சொர்க்கத்தில் படைத்தது. அனைத்தும் படைத்தவனிடம் இருந்து அனைத்தும் மனிதனுக்கு செயலாற்றுமாறு வழங்கினான் என ஜாசியர்: 13 ஆம் சூராவில் கூறியதன் பொருள் அளவற்றஅருளாளனான இறைவனின் நீதி துறையும், மெய் ஞானம் நிறைந்த குர்ஆனின் கருத்தும் மனிதனுக்கு வழங்கினான் என்றே. அனைத்துலகின் சாப்ட்வேர் மனிதனுக்கு கற்று கொடுத்தால் உலகில் உள்ள அனைத்து வகைகளின் மேல் உள்ள செங்கோல் மற்று படைப்புகளுக்கு வழங்காமல் பூமியில் இறைச்சேவகராகாக நியமித்த சிந்தனை திறன் வழங்கிய மனிதனிடம் தான் என்பது குறிப்பிடத்தக்கது. உலகை வளமான இயற்கையாக பாதுகாக்க உதவுகின்றநீதியும், உண்மை வாக்குரிமையுமான குர்ஆனின் விளக்கம் (சாப்ட்வேர்) கற்பித்ததினால் மட்டுமே பிறஉயிரினங்களை விட மனிதர் மிக மேன்மையடைந்தவன் ஆனான்.

இறைவனின் ஆத்மாவில் இருந்து மனிதனில் செலுத்தும் பொழுது ஜின்களில் அமைந்த இப்லீசு உட்பட்ட மலக்குகளின் சபையோடு ஆதமிற்கு தலை வணங்க (பிரணாமம்) அல்லாகு கட்டளையிட்டான். இயற்கையை சிராக நிலை நாட்ட உதவிகின்றதிராசும், நம்பி ஒப்படைத்த குர் ஆனின் கருத்தை ஏற்பதால் தான் மலக்குகள், ஜின்னுகள் போன்றஅனைத்து படைப்புகளையும் மனிதனுக்கு உதவியளித்து அவன் கட்டுபாட்டில் நிலை கொள்ள வேண்டும் என்பதே அவன்முன் சுஜூத் செய்ய கூறியதன் பொருள். இப்லீசை தவிர பிறர் அனைவரும் தலைவணங்கினார். நெருப்பில் இருந்து படைத்த எனக்கு மண்ணில் இருந்து படைத்த ஆதமிற்க்கு தலை வணங்கமுடியாது என ஆணவம் கொண்டான்; சாபத்திற்க்கிரையாகி

கருணையில் இருந்து அகற்றி சொர்க்கத்திலிருந்து வெளியேற்றபட்டான். அதனால் தான் ஜின்களில் இருந்த இப்லீசு பிசாசாக மாறினான். அனைவரின் பொறுப்பம் உன்கைவசம் இருக்க, நீ நாடியபடியல்லவா நான் தலை வணங்கமல் இருந்தது.. என்று கூறி இறைவனின் வழியான குர் ஆனின் கருத்திலிருந்து மனிதர்களை வழி தவறவாய்ப்பழிக்கவேண்டுமென இறைவனோடு வேண்டினான். சுவாத்: 78-81 சூராவின் படி குறிபிட்ட ஒரு நாள் வரை அவனுக்கு இறைவன் அந்த வாய்ப்பை வழங்கி அதற்கான அனைத்து திறமைகளையும் வழங்கினான். அன்னிசா:116-121 ன் விளக்கம் பார்க்கவும். பிசாசு கூறினான்; அப்பொழுது நீ எவருக்காக வேண்டி என்னை நிலைதடுமாறியவனாக மாற்றி வழி தவறசெய்தது, நான் அவர்களுக்காக உனது சீரான பாதையில் . அமர்ந்திருப்பேன், பிறகு அவர்களின் முன் பக்கவும், பின்பக்கவும், வலது பக்கவும், இடது பக்கவும் வருவேன். அவரில் பெரும்பான்மையோரையும் நன்றி உடையவர்களாக பார்க்க முடியாது தான்! என கூறினான். ஆஃராஃப்:16-17 விளக்கம் பார்க்கவும்.

அல்லாகு கூறினான்:ஒ ஆதமே, நீயும், உனது துணைவியும் இந்த சொர்க்கத்தில் குடியிருக்கவும், உங்கள் விருப்பம் போல் சொர்க்கத்தில் உள்ள பழங்களை உண்டு மகிழவும். ஆனால் இந்த ஒரு மரத்தின் பழங்களை நீங்கள் இருவரும் சுவைக்ககூடாது. அவ்வாறு செய்தால் இருவரும் குற்றவாளிகள் ஆகிடுவீர்' என கூறினான். அப்பொழுது பிசாசு அவர்களை ஏமாற்றி விட்டான். அவன் அவர்களை பார்த்து கூறினான் 'நீங்கள்இருவரும் மலக்குகளை போலவோ, அல்லது சிரஞ்சீவிகளாகவோ ஆகாமல் இருப்பதற்க்காகவே உங்களுடைய எஜமானன் இந்த மரத்தை அணுக அனுமதிக்கவில்லை.' அவர் இருவருடனும் அவன் சபதம் செய்து கூறினான். கண்டிப்பாக நான் உங்களுடைய உண்மையான நல்வுரையாளன் தான். அஃராஃப்: 19-21 விளக்கம்பார்க்க. இவ்வாறு அவர்களுக்கு ஆசை மூட்டி அவர்களை அவன் பக்கம் இழுக்கச் செய்தான். அப்படி அவர்கள் இருவரும் அந்த மரத்தின் பழத்தை சுவைத்ததும் அவர்களுக்கு அவர்களுடைய உணர்ச்சி உறுப்புகள் வெளிப்பட்டுவிட்டது. உடனே அவர்கள் சொர்க்கத்தில் உள்ள மரத்தின் இலைகள் பறித்து அவர்களின் உணர்ச்சி உறுப்புகளை மறைத்தனர். சொர்க்கத்தில் எந்த மரத்தின் பழங்களை உண்ண அனுமதிக்கவில்லையோ அக்கனி உடலுறவினால் கிடைக்கும் சுகம் என்பது புரிகிறது. அவர்கள் இருவரையும் அவர்களின் நாதன் அழைத்து இருவரும் அந்த மரத்தை அனுக கூடாதென கூறவில்லையா? கண்டிப்பாக பிசாசு உங்கள் இருவரின் எதிரி என நான் கூறியிருந்தேனல்லவா, அஃராஃப்: 22-ல் விளக்கம் பார்க்கவும். பகர: 37-ன் படி, மனதில் வேதனையுடன் இருந்த ஆதமிற்கு பாவ மன்னிப்பிற்கான சொற்கள் வழங்கப்பட்டது. அவர்கள் அச்சொற்களை கொண்டு பாவ மன்னிப்பு கேட்டனர். எங்களுடைய இறைவா, எங்களுக்கு நாங்களே தீங்கிழைத்து கொண்டோம். நீ எங்களை மன்னித்து அருள் புரியாவிட்டால் நாங்கள் நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம் என வினவினர்! அஃராஃப்: 23-ல் விளக்கம் பார்க்கவும். அவர்களின் பாவ மன்னிப்பை அல்லாகு ஏற்றுகொண்டான். கண்டிப்பாக, அவன் மிகப்பெரிய அளவில் பாவ மன்னிப்பு வழங்குபவனும் நிகரற்ற அன்புடையோனுமே.

பூமியில் அனுப்புவதற்காக படைத்த மனிதனுக்கு பூமியில் அவன் வாழ்க்கையையும், பிசாசின் வஞ்சனையையும் புரிந்து கொள்ளுமாறு இவ்வாறு நிகழச் செய்து அதை கற்று கொடுத்து அவர்களை பூமியில் அனுப்பினான். அல்லாகு கூறினான்: ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினர்க்கு எதிரிகளாய் நீங்கள் அனைவரும் இங்கிருந்து இறங்கி செல்லவும். உங்களுக்கு

ஒரு குறிப்பான நாள் வரை பூமியில் வாழ்க்கை, வசதிகள் கிடைக்கும்: அராஃப்:24-ல் விளக்கம் பார்க்கவும். போலி நம்பிக்கையாளர்கள் உண்மையான நம்பிக்கையாளர்களுக்கு எதிரிகளென்று முனாபிகூன்:4-லும், இறைதூதர்களுக்கும், இறைநம்பிக்கையாளர்களுக்கும், ஜின்னுகளிலும், மனிதரிலும் உள்ள பிசாசை எதிரிகளாக்கியுள்ளேன் என அன்ஆம்:112-லும் கூறப்பட்டுள்ளது. பகர:38-ன் படி இறைவன் அருளினான்: நீங்கள் அனைவரும் இங்கிருந்து (சொர்க்கத்தில் இருந்து) வெளியேறுங்கள். உங்களுக்கு என்னிடம் இருந்து வழிகாட்டி வரும்பொழுது யார் அவ்வழிகாட்டியை ஏற்று செயல்படுகின்றனரோ அவர் அச்சமின்றி: அமைதியடைவர். ஆதம், அவ்வா இருவரையும் உடலோடும்- ஆதம் பரம்பரைகளை ஆதமின் முதுகிலும் வைத்துவீசும் காற்று மூலமாக பூமியில் இறக்கினான். ஆதம் பாரதத்தில் அமைந்திருந்த இலங்கையில் உள்ள ஆதம் மலையிலும், அவ்வா அரேபியாவிலும் இறங்கினர். பின் மக்காவில் உள்ள அரபா என்றஇடத்தில் இருவரும் சந்தித்தனர். பகர: 164 விளக்கம் பார்க்கவும்.

மனிதனின் உடல் அமைப்பு:

இன்சான்: 1-ல் இறைவன் கேட்கின்றான் மனிதனில் அவனுக்கு ஞாபகமில்லாத மிக நீண்ட இடைவெளி கடந்து சென்றதல்லவா ? அதாவது ஆதமை படைத்த பொழுது தான் நம்மையும் இறுதி நாள் வரை உள்ள அனைத்து மனிதரையும், ஏது குலத்தில், எந்த நாட்டில், எக்காலத்தில், ஏது பரம்பரையில், ஏது தாய் தந்தையர்களில், எந்த உருவத்தில் உருவாக்கவேண்டுமென இறைவன் விருப்பப்படி மட்டுமே நடைபெறுகிறது. மனிதனில் முதல்வனான ஆதமாகிய தந்தையும், தாயும் மண்ணில் இருந்து - மண்ணின் அனைத்து தன்மைகளுடன் உள்ள உணவு வகைகள் உண்டு அவையிருந்து இரத்தம் உருவாகி. அதன் சதையில் இருந்து இறைவன் விந்து துளிகளை உருவாக்கி அஃராஃப்: 189-ல் கூறியவாறு தந்தையும், தாயும் சேர்ந்த உடலுறவில் தந்தையின் முதுகில் இருந்தும் . தாயின் இடுப்பில் இருந்தும் சிந்தி வருகின்றநீர்துளிகளால் தான் மனிதனை படைத்ததென்று அத்தாரிக்: 5-7-லும், கண்டிப்பாக மனிதனை நாம் ஆண், பெண் இருவரின் கலப்பு விந்து துளி (நுத்ப) யில் இருந்து படைத்தான் என இன்சான்: 2-லும் கூறப்பட்டுள்ளது. தாயின் கருப்பையில் நுத்ப (விந்து துளி) யாக 40 நாட்களும், சினைமுட்டையாக (அலக்) 40 நாட்களும், தசைக்கட்டியாக (முள்க) 40 நாட்களுமாக ஒரு குழந்தையாக உருவாக்கி நான்காம் மாதத்தில் மலக்கு மூலமாக தந்தையின் முதுகில் இருந்த “ஆத்மாவை ” செலுத்தப்பட்டது. ஹஜ்: 5, ஸஜத: 7-9, ஃபாத்திர்: 11 போன்றசூராவின் வசனத்தை சேர்த்து படிக்கவும். ஆரம்பத்தில் உயிர் இருந்த குழந்தைக்கு ஆத்மாவு கிடைப்பதோடு ரூஹ் (உயிர்+உள்ளம்) கிடைக்கின்றது. தந்தையின் விந்துவில் இருந்து நாடி, நரம்புகள் உருவாகின்றது. தாயின் இந்திரியத்தில் இருந்து இரத்தவும், சதையும் உருவாகின்றது என ஒரு யுதனின் கேள்விக்கு நபி விடையளித்தார். மனிதனை ஒரு கம்யூட்டருடன் எடுத்துகாட்டாக்கினால் உடம்பை “ஹார்ட்வேயர் ” ஆகவும், உயிர் “மின்சக்தி” உள்ளம் “சாப்ட்வேர் ” என்று புரிந்து கொள்ளலாம்.

மனிதனின் ஏழு நிலைகள்:

சொர்க்கத்தில் படைத்த மனிதனுக்கு ஏழு நிலைகள் உண்டு. நூஹ்:14-ல் கண்டிப்பாக அவன் உங்களை பல நிலைகளாக உருவாக்கினான் என கூறப்பட்டிருக்கிறது. முதல் மனிதனான ஆதமை உருவாக்கிய போதே இறுதி நாள் வரை உள்ள அனைத்து மனிதரையும் படைத்து

இறைவன் ஒவ்வொருவருடனும் ஒப்பந்தம் வாங்கினான். இதுதான் முதல் நிலை. அஃ்ராப்:172-173 விளக்கம் பார்க்கவும். பிறகு அனைவரையும் உயிரிழக்க வைத்து ஆதமின் முதுகின்வாயிலாக பூமியில் அனுப்பினான். பிறகு ஆதமின் மக்கள் பரம்பரையின் முதுகில் இருந்து ஒவ்வொருவருடைய தந்தையின் முதுகில் திரும்பவும் செல்ல தேவையான விரைவான காலம் தான் இரண்டாவது நிலை. இன்சான்: 1 விளக்கம் பார்க்கவும். தந்தையின் முதுகில் உள்ள ஆத்மாவை மலக்கு வழியாக எடுத்து நான்காம் மாதத்தில் தாயின் கருவறைக்குள் இருக்கும் குழந்தைக்கு செலுத்தப்படுகிறது. சஜத:7-9 விளக்கம் பார்க்கவும். அன்றுமுதல் பதினைந்து வயது வரை உள்ள வாழ்க்கைதான் மூன்றாவது நிலை. பதினைந்து வயதிற்கு முன் இறந்து விடுகின்றஎந்த குழந்தையும் சொர்கத்தில் திரும்பி செல்கின்றனர். பதினைந்து வயது முதல் மரணம் வரை உள்ள வாழ்க்கை தான் நான்காவது நிலை. பாத்திகா:4-ன் விளக்கம் பார்க்கவும். மரணத்திற்கு பிறகு மீண்டும் உயிர்பிக்கும் வரையான காலம் (பர்சக்) தான் ஐந்தாவது நிலை. தூக்கத்திற்கு மாறாக உயிர் இல்லாமல் ஆத்மாவு தனித்தியங்கும் நிலையில் இறைநம்பிக்கை கொண்டவர் சொர்கத்தில் அமைத்துள்ள மலர் தோட்டங்களிலும் காபிறுகள் நரகத்தில் அமைந்துள்ள பெரும் பேரொலி எழுப்பும் இடத்திலும் இருப்பார்கள். முஃமீன்:100 விளக்கம் பார்க்கவும். அம்பதாயிரம் ஆண்டுக்கு சமமான கேள்வி கேட்கும் மறுமை நாள் தான் ஆறாவது நிலை. மஆரிஜ்:4 விளக்கம் பார்க்கவும்.இறைவேதம் வழங்கப்பட்டவர் அதை பயன் படுத்தி நான்காவது நிலையில் சொர்கத்திற்க்காக வேலை செய்து சொர்க்கமோ, நரகமோ முயற்சி செய்து அதற்காக இங்கு செயல்பட்டு அங்கு அதை பெற்று கொள்ளலாம். இதுவே ஏழாவது நிலை. சுமர்:24, அத்தூர்:19 விளக்கம் பார்க்கவும். இறைநூல் பெற்று கொள்ளாதவர்களை ஏழாம் நிலையில் அருளாளனான அனைத்துலக ஆண்டவன் சொர்க்கமோ, நரகமோ அன்றி ஏதேனும் பிறஉலகில் அனுப்புவான். மனிதனை உருவாக்கிய பின் ஆத்மாவ் பல நிலைகளாக மாறுகின்றதே தவிறஅது ஒரு போதும் அழிவதில்லை என்பதை நன்றாக உணர்ந்துகொள்ளவும். குஜராத்: 3, இன்சிகாக்:19 விளக்கம் பார்க்கவும்.

வரலாறு:

முதல் மனிதனான ஆதம் சொர்க்கத்தில் வைத்து கற்று கொடுத்த இறைவழி பயன்படுத்தி பூமியில் வாழ்ந்து வந்தான். பிறகு ஆதமின் மக்கள் மெதுவாக பிசாசின் தூண்டுதலுக்கு ஆளாகி தவறான வழியில், வாழ்ந்து வாழ்க்கையின் கொள்கை தவறியவரானர். பகர:213 விளக்கம் பார்க்கவும். அவர்களில் பெரும்பாலும், சீர்குலைந்தவர்களும்,தீயவர்களுமாகமாறிய, பொழுது அல்லாகு இறைநம்பிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சி அடையும் வார்த்தை (நற்செய்தி) தெரிவிக்கவும், முறன்பட்டோருக்கு எச்சரிக்கை விடுவிக்கவும் நபிமார்களை அனுப்பினான். ஆதம் முதல் நூஹ் வரை 10 தலைமுறைகள் சொர்க்கத்தில் கற்று கொடுத்த இறைவேதப்படி இயற்கையான வாழ்க்கைகேற்ப நடந்து கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தனர். பிற்காலங்களில் மனித சமூகம் விரிவடைந்துவர மனிதன் பிசாசின் வலையில் விழுந்துவிட்டான். இறைதொண்டராய் இறைச்செயல் புரிந்து வாழ்பவர் இல்லாத நிலை உருவானது, அப்பொழுது இறைவன் ‘மனு , நோக என்றபெயர்களில் அறிமுகமான நூஹ் நெபியை முதல் இறைதூதராக நியமிக்கப்பட்டார். அவருடன் இறைவேதமும் பூமியில் வழங்கப்பட்டது. அவருக்கு தான் முதல் முறையாக உடலோடு சேர்ந்த நூல் வழங்கப்பட்டது. ஹதீத்:25-ல் விளக்கம் பார்க்கவும். அவர்களுடைய அறிவுரையின் படி சிறுபான்மையார்கள் இறைநம்பிக்கை கொண்டனர். இனி எவரும் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள் என்றநிலையில் முக்கால மாமேதையான இறைவன்,

தூதரான நூஹோடு, இறைநம்பிக்கையாளர்களுக்கும், முறண்பட்டோருக்கும் நடுவில் விதி எழுப்ப கோரி இறைவனை வேண்டினார். அதன் விளைவாக அன்று மனிதகுலம் வசித்திருந்த அனைத்து இடங்களிலும் நீர் பெருக்கம் ஏற்பட்டு அதனால் முறண்பட்டோரை அழித்து நூகையும், நம்பிக்கையாளரையும் கப்பல் காப்பாற்றினான். அந்த கப்பலில் உயிர் தப்பி வந்தவர்கள் பரம்பரைதான் இன்று உலகில் உள்ள அனைத்து மனிதரும். இஸ்ரா:3, யாசின்:41 விளக்கம் பார்க்கவும்.

உயிர் தப்பி வந்தவர்களில் ஒரு பிரிவினர் ஈராக்கில் குடியேறினர். படிப்படியாக அவர்கள் வழி தவறி சிலை வணங்கும் குற்றவாளிகளானர். சுமார் 1400 வருடங்களுக்கு பிறகு அல்லாகு இப்ராகிம் என்றஇறைதூதனை நியமித்தான். ஓர் இறைசேவை புரிய அழைத்த அவரை தனது தந்தையார் உட்பட்ட அம்மக்கள் நெருப்பில் வீசி எரித்து கொல்ல திட்டமிட்டனர். ஆனால் அம்பியா:69-ன் படி சிரஞ்சீவியும் முக்கால மாமேதையான அல்லாகு நெருப்பில் இருந்து அவரை காப்பாற்றினான். (நாற்காலிகளை மேய்ப்பதற்காக இடம் பார்த்து இறுதியில் இந்தியாவில் வந்து சேர்ந்த ஆரியர்களின் முன்னோர்கள் ஈராக்கில் இருந்து வந்தவர்கள் தான். ஹஜ்ஜின் போது அணியும் ஆடைகள், கஃப வை சுற்றும் செயல் போன்றவை இப்ராஹீமின் நடைமுறையான வணக்கமுறைகளும், பிராமணர்களுடைய வணக்கமுறைகளும் ஒன்றாக அமைய இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்). ஈராக் விட்டு பாலஸ்தீனுக்கு புறப்பட்ட இப்ராகீமிற்கு ஈஜிப்ட் மன்னன் நன்கொடை வழங்கிய ஹாஜர என்ற மனைவியில் பிறந்த முதல் குழந்தை தான் இஸ்மாயில். இறைவனின் ஆணைப்படி அந்த குழந்தையையும், காஜராவையும் குடிப்பதற்கு நீர் இல்லாத பாலைவனத்தில் (மக்காவில் கஃபவின் பக்கம்) தங்க வைத்து விட்டு இப்ராகிம் பலஸ்தின் நாட்டிற்கு திரும்பினார். கையில் இருந்த தண்ணீர் தீர்ந்ததும் குழந்தையின் தாகம் போக்குவதற்கு தண்ணீர் தேடி ஹாஜர "சபா, மர்வா" குன்றில் ஏழுமுறைஅங்குமிங்குமாக' அலைந்தார். குழந்தையின் கால் பக்கத்தில் இருந்து சம்சம் என்றநீறுறவை உருவாகியது. இஸ்மாயிலுக்கு பதினான்காமது வயதையடைந்ததும் இப்ராகிமிற்கு பாசமிக்க குழந்தையாக இருந்த ஒரேஒரு மகனை பலியிட இறைவனிடம் இருந்து கட்டளை வந்தது. இஸ்மாயிலும், இப்ராகிமும் அதற்கு தயாராகினர். உடனே பதிலுக்கு ஒரு ஆட்டை பலிகொடுத்தால் போதுமென்று இறைவன் கூறினார். இதுபோன்றசோதனைகளில் எல்லாம் வெற்றி பெற்ற இப்ராஹிமிற்கு ஓர் இறைவணக்கத்திற்காக பூமியில் உருவாக்கிய முதல் கோவிலான கஃப நூகின் காலத்தில் நீர்மூழ்சியில் சேதம் அடைந்ததை காண்பித்து அதை சரிப்படுத்த உத்தரவு வழங்கப்பட்டது. பகர:126-127, ஆலிஇம்ரான்: 96-97 சேர்த்து படிக்கவும். இப்ராகிம்:35-36-ன் படி இப்ராகிம் நபி தன்னையும், தன் மக்களையும் உருவ வழிபாட்டில் இருந்து அகற்றிவிட வேண்டினர். இருப்பினும் பிற் காலங்களில் இஸ்மாயிலின் மக்கள் வழிதவறி ஓர் இறைவனுக்காக அமைத்த கஃபாவின் உள்ளே 360 உருவங்களை வைத்து பூஜை செய்தனர்

இப்ராகிம் நபிக்கு மனைவி சாராவில் பிறந்த மகன் இஸ்ஹாக் நபியின் மகன் யாக்கூப் நபியின் மகன் யூசுப் நபி, தன் உடன் பிறந்தவர்களால் கிணற்றில் தள்ளபட்டு அவ்வழியே நடமாடியிருந்த வணிகரால் காப்பாற்றப்பட்டு ஈஜிப்தில் விற்கப்பட்டார். படிபடியாக ஈஜிப் அரசவையில் அமைச்சராக வந்த யூசுப் நபி, பலஸ்தீனில் இருந்து யாக்கூப் நபியையும், குடும்பத்தாரையும் ஈஜிப்தில் அழைத்து வந்து குடியிருத்தினார். அவ்வாறேஇஸ்ராயில் இன மக்கள் ஈஜிப்தில் வாழ்ந்துவந்தனர். மீண்டும் யூசுப் நபியின் அறிவுரைகள் இஸ்ராயில் மக்கள் உட்பட அந்நாட்டினர் புறக்கணித்து பசுவை பூஜை செய்தும், மற்று தவறான வாழ்க்கை

முறைகளையும், கடைபிடித்தனர். துடர்ந்து கிப்தி இனத்தவரில் உள்ள பரோவாமார் அந்நாட்டு அதிகாரிகளாகவும் இஸ்ராயில் இனத்தவர்களை கொடுமை செய்தும், அடிமைகளாக நடத்தினர். அப்போழுது அவர்களை மீட்பதற்காக அல்லாகு மூசா நபியை ஈஜிப்திற்கு அனுப்பினார்.

மூசாவும் அவருடைய அண்ணன் ஹாரூனும் பல ஆண்டுகாலம் ஈஜீப் நாட்டில் இறைகொள்கை பரப்பிய போதும் பிர்அவுன் இனத்தாரில் ஒருவர் மட்டுமே இறைநம்பிக்கையாளறானர். இறுதியில் மூசாவும், இஸ்ராயில் இனத்தவரையும் அல்லாகு கடலை பிளர்த்தி பாலஸ்தீன் நாட்டிற்கு காப்பாற்றி அனுப்பினான். அவர்களுக்கு அங்கு பெரும்பாலான வசதிகள் வழங்கினான். உலகில் உள்ள மற்று மனிதர்களை விட அவர்களுக்கு மிக மாண்புகளும் வழங்கினான். குர் ஆனில் கூறியிருக்கின்றநபிமார்களில் இருபத்தி ஐந்து பேரில் பெரும்பான்மையோரும் உலூல் அஸ்முகள் என அழைக்கப்படும்: மூசா, ஈசா, போன்றஇரு இறைதூதர்களும் அக்குலத்தில் இருந்து வந்தனரே. உலகில் மற்று எவருக்குமே வழங்காத பேரும், புகழும், அரச தன்மையும் கிடைத்த சுலைமான் நபி (சோளமன் அரசர்) யும், தாவூத் நபியும், தந்தையும், மகனும் இறைதூதர்களான மூன்று ஜோடிகளும் அக்குலத்தில் வந்தவர்கள் தான். முகம்மத் நபியை அனுப்புவதற்கு முன்பு உலகின் மொத்த ஆட்சியும் இஸ்ராயில் மக்களின் கைகளில் தான் இருந்தது. என்றால் ஆணவக்காரராக மாறிய பொழுது அவர்கள் இறைநூலை மறைத்து வைத்தும் நபிமாரில் சிலரை கொலை செய்து, ஈசாவையும் கொலை செய்ய திட்டம் தீட்டினார்கள்.

அல்லாகு வழங்கிய இறைநூலான தவ்ராதினை முற்றிலும் மறைத்து உயிரற்றபிணமாக ஆத்மாவு இழந்த வாழ்க்கை வாழ்ந்து வந்த யூத மதத்தலைவர்களை எதிர்த்து மக்களை அவர்களின் கொடுமைகளில் இருந்து மீட்பதற்காக ஈசா நபி ஜருசலேமில் உரையாடியும் இஸ்ராயில் இனத்தர் நம்பிக்கை கொள்ளவில்லை. (விரிவான கருத்துக்கு மத்தாயி எழுதிய சுவிசேசம் 23:1-36 பார்க்கவும்) அவர்களில் உள்ள ஹவாரிகளான (அப்போஸ்தலர்) பதீமூன்று பேர் மட்டுமே அவரை பின் தொடர்ந்தனர். முறண்பட்ட யூதமத்தலைவர்கள் ஈசாவை துன்புறுத்தி கொலை செய்ய ரோமன் அரசவையில் உள்ள அமைச்சரை வற்புறுத்தி இறுதியில் ஈசா நபியை சிலுவையில் தண்டித்து கொலை செய்ய அனுமதி வழங்கபட்டது. ஆனால் அல்லாகு ஈசாவை உடலுடன் சொர்க்கத்திற்கு உயர்த்தி கொண்டு சென்றான். அன்னிசா:157-158-ல் விளக்கியவாறு அல்லாகு ஈசாவை சூறாவெளி காற்றினால் உடலோடு வானத்திற்கு உயர்த்தினான். ஹவாரிகளில் ஒருவனான சர்ஜ்ஜாசிற்கு ஈசாவை போன்றமுகம் தோன்றுமாறாக்கினான். ரோமன் ரானுவத்தினர் சர்ஜ்ஜாசை (யூதாஸ்) பிடித்து சென்று தண்டித்து கொலை செய்தனர். இந்நிகழ்ச்சிகளை யெல்லாம் பார்த்து பயந்து நடுங்கி நின்றமற்றபனிரண்டு அப்போஸ்தலர், மக்களுடைய நம்பிக்கையில்லாமை, யூதர்களுடைய கிண்டல்கள், வஞ்சனை, அவர்களின் விருப்பத்திற்கு வழங்குகின்றரோமன் அரசாங்கத்தின் ஆட்சி இத்தகைய நிலமைகளால் ஈசா நபி உயிரோடு உடலோடு வானுலகம் சென்றதை மக்களிடம் கூறமுடியாத நிலையாகி விட்டது. துடர்ந்து ஒன்று சேர்ந்து முயற்சி செய்ய இயலாததால் வெவ்வேறு இடங்களில் சென்று அவர் இறைகட்டளை பரப்பினர். ஈசாவின் நாட்டில் அச்சமயம் கடும் எதிரியாக இருந்த யூதனான பவ்லோஸ் தன்னைத்தானே அப்போஸ்தலன் என்று கூறினான். யூதர்களுடைய அரசாங்கத்தின் ஒத்துழைப்பில் ஈசா கொண்டு வந்ததற்கு மாறாக சொந்த கற்பனைகளை மதமென பரப்ப தொடங்கினான். அவ்வாறு மீண்டும் பல பிரிவுகளாக பிரிந்து அகன்றனர். ஆலி இம்ரான்:52-55 விளக்கம் பார்க்கவும்.

ஈசா நபிக்கு பிறகு உலகம் முழுவதும் இருண்ட நிலையிலும் அழித்துவிட தகுதியான நிலையில் ஆறாம் ஆண்டில் கல்க்கி சத்தியத்தின் ஆத்மாவு என்று கூறிய நியாயாதிபன் என்றபெயர்களால் முன் இறைநூல்களில் அழைக்கப்பட்டுள்ள முகம்மதை அல்லாகு இறுதி இறைதூதராகவும் நபியுமாக நியமித்தது, வழி தவறிய இஸ்மாயில் பரம்பரையின் வழிமாறிய வாழ்க்கை, கஃபாவில் ஆண், பெண் ஆடையின்றி இறைவணக்கம் புரிகின்றநிலையில் சீர்குலைந்து தவறான முறையில் நடந்து வந்தது. மற்றவர்களுடன் சேர்ந்து வாழ முடியாத நிலையில் “கிரா குகையில் தனியாக முகம்மது குடியிருந்து வந்தார். அப்பொழுது தான் ஜிப்ரில் குர் ஆன் என்றஒளியும், அருள் மொழியும்” கொண்டுவந்தார். அன்னஜ்ம்:1-17, அத்தக்வீர்:19-27 சேர்த்து படிக்கவும். சூரா அலக்கில் இருக்கும் முதல் ஐந்து வசனங்களை முஹம்மதிற்க்கு கற்று கொடுத்து படிக்க கூறினார். “எனக்கு படிக்கதெரியாது”என முகம்மத் பதில் கூறிய பொழுது அதை துடர்ந்து அணைத்து பிடித்ததும் ஆத்மாவ் சொர்க்கவுமாக தொடர்பு கொண்டு அவ்வாறு சொர்க்கத்தில் வைத்து கற்று கொடுத்த குர் ஆன் படிக்க ஆரம்பித்தார். பிறகு பல சந்தர்ப்பங்களில் பலவாறாக இருபத்தி மூன்று ஆண்டு காலமாக குர் ஆன் முழுதாக வழங்கப்பட்டது.

## அனைத்து மதங்களும் உண்மை என்பது தவறு.

ஆதம் முதல் இறுதி நாள் வரை உள்ள மனிதர்களுக்கும் இறைவன் ஏற்றுகொண்டது இறைநூலின் அடிப்படையில் சீர்திருத்தமாக வாழும் வாழ்கை மட்டுமே. மனிதனுக்கு இறைவன் வழங்கிய அனைத்தையும் அவனுக்காக அற்பணித்து கொண்டு வாழும் வாழ்க்கை தான் இஸ்லாம் என்று கூறுவது. இயற்கையான வாழ்க்கை, ஒற்றுமை, அன்பு போன்றவாழ்க்கையை இறைவனுக்காக அற்பணித்துகொண்டு பொறுமையாக இயற்க்கையின் இயல்பான வாழ்க்கை நடத்துபவர் மட்டுமே இறைநூலின் அடிப்படையில் முஸ்லீம்கள் என கூறுவது. (அவர் எந்த இனமோ, மதமோ, ஆடையோ, மொழியோ இருப்பினும்) ஆலி இம்ரான்:19,85-ல் விளக்கம் பார்க்கவும். இறைவனின் கருத்தாகிய இறைவேதம் மனிதனின் நடைமுறையில் வாழ்ந்து காண்பிப்பதற்காகவே மனிதரில் இருந்து இறைதூதர்களை ஒவ்வொரு முறையும் வழங்கியருளினான். மனிதனின் எண்ணங்களை அல்லாகுவின் பக்கம் இழுக்கவும், அவர்களை எச்சரிப்பதற்க்காகவும் வேண்டி ஆரம்பத்தில் இயற்கையில், நிலநடுக்கம், கடல் கொந்தளிப்பு ,வறுமை, நோய், அச்சமூட்டுகின்றபோர் போன்றவைகளை சோதனைக்காகவும் இறைதூதர்களால் சில அற்புத நிகழ்சிகள் உருவாக்கியும் இருந்தன. கடுமையான எதிர்ப்பிலும் சிறுபான்மையானவர்கள் இறைவனின் இவ் இயற்கை வாழ்க்கையில் நம்பிக்கை கொண்டும் படிப்படியாக அவர்களின் தீன் (இயல்பான வாழ்க்கை) இங்கு உருவாக்கபட்டது.

படிப்படியாக செல்வந்தர்களிலும், மதத்தலைவர்களிலும் உட்பட்ட போலி நம்பிக்கைவாதி (மனித பிசாசு) அற்புத நிகழ்சிகள் இறைதூதரின் திறமைகளாக மாற்றி தங்களின் தகுதிகேற்ப அவரவர்களின் விருப்பத்திற்காக இறைநூலிற்கு மாறாக மறுமை நாளை மறந்து மண்ணுலகிற்காக நவீனமான வாழ்க்கை வழிகளை ஏற்படுத்தியும் அதற்காக முயற்சியும் செய்தனர். சிலர் இறைதூதர்களை இறைவனாகவும் இறைவனின் தமையனாகவும் கூறி இறைவனின் சர்வாதிகார ஆட்சியில் பிறரையும் இணையாக்கினர். படிப்படியாக அது உருவ வழிப்பாடாக உருவாகியது. முன் காலங்களில் இறைவேதம் வாய் மொழியாக இருந்தது. அவ்வாறேபின் தலை முறைகளும் அதை பின்பற்றினர். அதன் பிறகு போலி நம்பிக்கையாளர்கள் இறைநூலின் முழுவதும் ஏற்காமல் அதன் சில கருத்துகளை முரண்பாடாக்கி பொய்யான கருத்துகள் சேர்த்து நூல்கள் தயாரித்து வந்தனர். இறைநூலின் கருத்துகளை படிக்க

முயற்சிக்காமல் அவற்றின் உடலை உண்டு (வாய் பயிற்ச்சி) மோட்சம் அடையலாம் என கற்ப்பித்து இறைநூலிற்க்கு மாறாக அவர்கள் தம் கையால் எழுதிய நூல்கள் (கல்வி களஞ்சியம், உபநிசத்துக்கள், சுவிசேசம், புராணங்கள் போன்றவை) இவை வாழ்க்கையின் முக்கியத்துவ நூல்களாக மாற்றினர். அவசரக்காரனான, ஆடம்பரங்களை விரும்புகின்ற(சொகுசு) மனிதன் இவர்களுடைய பொய்யான பாதையை தொடர்ந்து செல்ல தயாரானான். துடர்ந்து பல சிந்தனையாளர்களும் உருவாகவும் அவர்களின் செயல் கட்சிகளாக மாறி ஒவ்வொரு பிரிவினரும் தேவையில்லாத பல வகைகளையும் மதக்கடமைகளாக மாற்றினர். இறைவன் வழங்கிய தீன் விலையற்றகேவல வாழ்கையாக மாறியது. அப்பொழுது மனிதனுக்கு உண்மையான வழி தெரிந்து கொள்ள அவனுக்கு இறைநூல் வேறொரு மொழியில் இன்னொரு இறைதூதரிடம் கொடுத்து மக்களிடையே அனுப்புவது வழக்கம். மனிதகுலம் முழுமையாக சீரழிந்தும் நாங்கள் முன் இறைதூதரின் பின் முறை, என்று பெருமை நடிக்கும் மனிதரே இவ்வேதத்தையும் இறைதூதரையும் மறுப்பதில் முன்நிலையில் நிற்பவர் என தெரிந்து கொள்ளலாம்.

முஸ்லீம்களின் இன்றைய செயல்கள் உட்பட்ட மதம், உலகில் உள்ள இதர மதவும் அல்லாகு ஏற்று கொண்ட உண்மையான வாழ்க்கை செயல் அல்ல. இறைவனுக்கு -அல்லாகுவிற்க்கு, யஹோவிற்க்கு, ஆண்டவனுக்கு தனது வாழ்க்கையை அற்பணிக்க வேண்டும். அவனை மட்டுமே நாடவேண்டும். அவர்களே உண்மை இறையடியார்கள். ஆனால் முகம்மது நபி, வலிமார்கள், பரிசுத்த ஆத்மாக்கள், மூசா, இயேசு, ராமன், கிருஸ்ணன், புத்தன் போன்ற இறையடியார்களை அழைத்து வேண்டுவோரும் அவர்களுக்கு தலைவணங்குவதும் பாடிபுகழ்வதும் எல்லாம் சிர்க் (இணை கற்ப்பித்தல்) ஆகும். அவர் எந்த இன, மத, மொழி, ஆடையோ, நாட்டையோ சேர்ந்தவராயினும் சரி. முகம்மது நபி (கல்க்கி, சத்தியத்தின் ஆத்மாவ்) க்கு பிறகு உலகின் இறுதிவரையுள்ள காலம் வரை அனைவருக்கும் உள்ள இறைவேதம் குர் ஆன் மட்டுமே. இந்து, கிருஸ்துவர், யூதர், முஸ்லீம், நாஸ்திகர் அனைவரையும் படைத்து ஆட்சி செய்கின்றஅவன் அனைவருக்கும் நீர், ஒளி, காற்று, மண் மற்றும் அனைத்து வசதிகளையும் வழங்கிய அனைத்துலக அதிபதியான இறைவனின் வார்த்தையே குர் ஆன். முன் இறைநூலின் உண்மை விளக்கவும் அவற்றையெல்லாம் பாதுகாக்கின்றதுமே. காலங்களுக்கேற்றவாறு பாடசாலைகளில் டெக்ஸ்ட் புக் மாற்றங்கள் ஏற்படுத்துவது போன்றேஉண்மை கொள்கைகளில் மாற்றங்களும் இல்லாமல் நிலைநாட்டியுள்ளது. மனிதர்கள் தவறாக எண்ணியது போல் இந்துக்களுக்கும், கிருஸ்தவருக்கும், முஸ்லீங்களுக்கும் தனித்தனி இறைநூல் என்றல்ல.

முசைலிமத்துல் கத்தாப் முதல் மசிகு தஜ்ஜால் வரை முப்பது போலி பிரசாரர்கள் வருவார்கள் என நபி கூறியிருந்தார். குர் ஆனின் கருத்துக்களையும், இறுதி இறைதூதரான முகம்மத் நபியையும் பொய்யாகமாற்றி அவர்களில் உள்ள இருபத்தி ஒன்பது போலிபிரசாரகர்களைதான் இன்று உலகில் உள்ள அனைத்து முஸ்லீங்களும் பின் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். எனவே இன்று மக்களிடயில் முஸ்லீங்களை விட பெரும்பாலான இயற்கையான இஸ்லாத்தை இந்துக்களிடவும் கிருஸ்தவரிடவும் நாஸ்திகரிடவும் குர் ஆனின் ஒளியில் புரிந்து கொள்ளலாம். முகம்மத் நபி இறுதி இறைதூதராகயாலும், எந்த மொழியில் குர் ஆன் வழங்கப்பட்டதோ அவ்வாறேஇன்று இருப்பதாலும் இனி ஒரு புதிய இறைதூதனோ, இறைநூலோ தேவையில்லை. முஸ்லீம்கள் குர் ஆனின் கருத்தை ஒவ்வொருவரும் தாமாகவே பயன் படுத்தாமலும் மற்றவற்களுக்கு பயன்படுத்த வழங்காமலும் குர் ஆனின் கருத்தில் இருந்து தவறி அவர்களுடைய வாழ்க்கை வழி முற்றிலும் இருள் சூழும் நிலை உருவாகும் பொழுது

இஸ்லாமை முற்றிலும் அழிப்பதற்க்காக முப்பதாவது போலிபிரசாரகனான மசிகுதஜ்ஜால் புறப்படுவான்.

அல்கித்தாப்:

வானவும், பூமியும் அவற்றின் இடையில் உள்ள அனைத்தயும், அவையில்லாத நிலையில் இருந்து ஆறு நாட்களாக படைத்த அனைத்தும் படைத்த அவன் முக்கால ஞானியேதான். அவன் சொற்கள் முக்கால ஞானமே. அவன் சொற்களில் மூன்றில் ஒன்று கடந்தகால நிகழ்ச்சியும், மூன்றில் ஒன்று நிகழ்காலவும், மூன்றில் ஒன்று வரும்கால எச்சரிக்கையுமாகும். உலகை உருவாக்குவதற்க்கு முன் அதன் சட்டதிட்டமும், செயல்கள் யாவுமேதான் குர் ஆன் எனும் இறைநூல். அவன் பாதுகாப்பான பதிவேட்டில் வைத்து பாதுகாக்கின்றான். அதற்கு “அல் கிதாப்” என கூறப்படுகிறது. அல் வாக்கிய :77-78,அல் புரூஜ் : 21-22 விளக்கம் பார்க்கவும்.

சொர்க்கத்தில் இருந்து, ஒவ்வொரு கால அளவிலும் மனிதருக்கு தேவையான சட்ட திட்ட வழிமுறைகள் அமைந்த ஒரேயொரு இறைவேதம் தான் வந்தது. அதுவே குர் ஆன் என கிஜ்ர் : 90-91 கூறப்பட்டிருக்கிறது. அதன் உடல் பல மொழிகளாக இருப்பினும் ஆத்மாவ் (கருத்து)ஒன்று மட்டுமே. அதாவது பகவத்ஹீதையின் மொழி சம்ஸ்கிரதவும் தவராத்தின் மொழி ஹிப்ருவும், இஞ்சிலின் மொழி அரமாயிக்கும்,தாவீதின் சபூரின் மொழி கிரீக்கும், குர் ஆனின் மொழி அரபியாயிருப்பினும் ஆத்மாவ்(அத்திகர்) ஒன்றே. குர் ஆன் என்றால் அச்சொல்லின் பொருள் மறுபடியும் படித்து கொண்டே இருக்க வேண்டும் என்பதே. எனவே அனைத்து இறைவேதங்களும் மீண்டும் மீண்டும் படிக்க வேண்டியதால் அவை அனைத்துமே குர் ஆன்(திரும்ப திரும்ப படிக்க வேண்டிய) தான். ஹிஜ்ர் : 87 ல் கூறியபடி திரும்ப திரும்ப படிக்க வேண்டிய ஒரு வசனங்கள் என குறுவது “உம்முல் கித்தாபான”பாத்திஹா என நபி கூறியுள்ளார். உம்முல் கீத்தாப் அல்லாகுவின் பக்கமென் அர்றஅத்:39, சுக்ரூப்:4 என்றவசனங்களிலும் கூறியுள்ளது.அனைத்து இறைதூதற்களுக்கும் வழங்கப்பட்டது குர் ஆன் மட்டுமே என்றாலும் இறுதி இறைதூதரான முகம்மத் நபிக்கு குர் ஆனும்,உம்முல் கிதாபும் சேர்ந்த அல் கிதாப் வழங்கப்பட்டிருக்கிறது. பகர: 2 விளக்கம் பார்க்கவும்.

ரூஹ் : (உள்ளம்+உயிர்) ஆத்மாவு

மனிதனின் உயிரும் உள்ளவும் சேர்ந்த ரூஹ் உடம்பில் இருந்த வெளியேறுவதை தான் மரணம் என கூறுவது. தூக்கம் ஒரு சிறு மரணமே. ஆனால் தூக்கத்தில் ஆத்மாவு மட்டுமே வெளியேறுகிறது.உயிர் வெளியேறுவதில்லை.அன்ஆம் : 60,சுமர் : 42 விளக்கம் பார்க்கவும். அன்னிசா: 171, சஜத: 9 ஆகிய சூராவில் இறைவனில் இருந்து ஈசா நபி உட்பட அனைத்து மனிதர்களுக்கும் ரூஹ் வழங்கியதாக கூறப்பட்டிருக்கிறது. நஹ்ல் : 102, அஸ்சுஃறா:193, நபஅ : 38 வசனங்களில் ஜிப்ரிலெயும் ரூஹ் என கூறப்பட்டுள்ளது. குர் ஆனின் கருத்தை அதன் ஆத்மாவும், பொருள் அதன் உள்ளவும் இவற்றின் ரூஹ் ஆத்மாவும், உயிரும் சேர்ந்தது தான் கலிமாத்து என்பது. (கட்டளைகள்) அதை வார்த்தையாலும், எழுத்தாலும் முழுமை படுத்த முடியாது என கஃப் : 109, லுக்மான் : 27 வசனங்களில் கூறப்பட்டுள்ளது. உன்னிடம் அவர்கள் ரூகை குறித்து கேட்கும் போது, அது என் இறைவனின் கட்டளைப்படியுள்ளது. உங்களுக்கு சிறிதளவே கல்வி வழங்கப்பட்டிருக்கிறது என்று கூற இஸ்ரான் : 85ல் முகம்மத் நபிக்கு அனுமதி வழங்கியுள்ளது. ஆனால் முழுமையாகிய குர் ஆனின் அனைத்து செய்திகளும்

வெளிவாகியுள்ளதால் உங்களுக்கு தெரியாத புரியாத எதையும் குர் ஆனின் கருத்தை புரிந்தவரோடு கேட்டு தெரிந்து கொள்ள நஹ்ல் : 43, அம்பியா :7 என்றவசனத்தில் அறிவித்துள்ளது. முக்காலவும் தெரிந்த மெஞ்ஞானியான இறைவனின் முக்கால ஞானமான குர் ஆனின் கருத்தை புரிகின்றமுக்கால ஞானியோடு கேட்பீராக என புர்கான் : 59-ல் நபியிடம் கூறப்பட்டிருக்கிறது.

குர் ஆனின் ஆணைகளை ஏற்று "அல்லாஹ்" என்றஎண்ணத்தில் செயல்படுபவருக்கு மட்டுமே ஆத்மாவ் இருக்கும். மற்றவர் தூங்குகின்றவர்.அவர்களுக்கு உயிர் இருக்கும். குர் ஆனின் கருத்தை தெரிந்தும் மறைத்து வைத்த போலி நம்பிக்கையாளரை கொலை செய்யப்பட்டவர் என கூறுவதன் பொருளும் அதுவே முனாபிகுன் : 4,அபச : 17 பார்க்கவும்.

## குர் ஆன் என்றால் என்ன?

யாசின் : 69 ல் குர் ஆனைபற்றி அல்லாகு கூறுகின்றான்: இது ஒரு திக்ரும் தெளிவான குர் ஆனுமின்றி மற்றொன்றும் அல்ல. இங்கு கூறிய "திக்ர்" குர் ஆனின் ஆத்மாவும் (உயிர்) அரபியில் உள்ள டெக்ஸ்ட் அதன் உடலும் மனிதர்களை போலவே உள்ளமும் உயிரும் சேர்ந்தது தான் இறைநூலும். குர் ஆனின் தாயான (உம்முல் குர் ஆன்) ஃபாத்திஹாவிலுடன் அடிமை எஜமானிடம் தொடர்பு கொள்ளும் பொழுது எங்களை நீ மிக தூய்மையான வழியில் எங்களுக்கு வழிகாட்ட வேண்டும்..என்று கேட்டதனால் அதற்கு பதிலாக சிறந்த மிக தூய்மையான பகர முதல் அன்னாஸ் வரையான சுராக்கள் உள்ள குர் ஆனை வழங்கியுள்ளது.114 சுராக்கள் குர் ஆனில் இருக்கின்றது. ஒரு சுராவில் கூட ஒரு தனிபட்ட நிகழ்ச்சியை கூறிமுடிக்காததால் அதை வசனம் என சொல்ல முடியாது. 6236 வசனங்கள் அடங்கிய குர் ஆனில் ஒவ்வொரு வசனவும் கொள்கை மிக்கதும்,தனிப்பட்டதாகவும் இருப்பதால் அதை ஆயத் என்றோ வசனம் என்றோ கூறுகிறார்கள்.ஆயத் என்று சொன்னால் தெளிவுரை,அற்புதம்,அதிசயம் என்றெல்லாம் கருத்துண்டு.அதாவது குர் ஆனின் ஒவ்வொரு வசனவும் அதிசயமே.

சீரமைப்பு:

மலக்குகளின் தூதரான ஜிப்ரீலின் மூலமாக மனிதரில் இருந்து தூதரான முகம்மது நபியின் இதயத்தில் குர் ஆன் படிப்படியாக வழங்கப்பட்டது. எழுதவோ படிக்கவோ தெரியாத நபி, எழுதவும் படிக்கவும் தெரிந்த தனது தோழர்களோடு இது இந்த சூராவில் எழுதி வய்க்க கூறினார் அவ்வாறேஅவர் எழுதினார்கள். எல்லா ஆண்டும் குர் ஆன் அருளப்பட்ட மாதமான றமளானில் ஜிப்ரீல் முகம்மத் நபியில் இருந்து குர் ஆனை படிக்கவைத்து கேட்ப்பார். நபியின் வாழ் நாளில் போலிதூதனான ''முசைலிமத்துல் கத்தாப்'' என்பவனின் தலைமயில் மதபுறக்கணிப்பாளர் உருவாகி முதல் ஆட்சியாளர் அபூபக்கரின் வாழ்நாளில் அவருடன் போர் புரிந்தனர். இந்த போரில் குர் ஆன் நன்றாக படித்து புரிந்திருந்த பலர் இரத்த சாட்சியாய் உயிரிழந்தனர். குர் ஆனை நூல் வடிவில் உருவாக்கவில்லயெனில் அது நிரந்திரமாக அழிந்து விடும் என்றஅச்சத்தால் உமரின் தூண்டுதலுக்கு அன்றய ஆட்சியாளன் அபூபக்கரின் ஆட்சியில் நூலை சீரமைத்து இன்று பார்க்கும் நிலையில் தயார் செய்தனர். சிறந்த எழுத்தாளரான சைதுப்னுசாபித் என்பவரின் தலைமையில் குர் ஆன் தெரிந்தவர்களையெல்லாம் அழைத்து தூவல்,ஓலை,எலும்புகள் போன்றவையில் எழுதிவைத்திருந்த குர் ஆனை நன்கு ஆய்வுரை செய்தபின் இன்று நாம் பார்க்கின்றஉருவத்தில் குர் ஆனின் அரபி மொழியில்

அமைந்த நூல் தோன்றியது.அந்த பதிப்பு நபியின் மனைவி ஹப்சாவின் கையில் பாதுகாப்பாகவும் மற்றுள்ளவர்கள் கையில் இருக்கும் குர் ஆன் ஓலைகளை இந்த பதிப்புமாய் ஆராய்ந்து பார்த்து முழு நம்பிக்கை கொண்டனர். நாளடைவில் இஸ்லாம் பல நாடுகளில் பரவின. குர் ஆனின் பதிப்புகள் அதிகமாக தேவைப்பட்டது.எனவே மூன்றாவது ஆட்சியாளரான உஸ்மானின் வாழ்நாளில் எட்டு பதிப்புகள் தயார் செய்து பல நாடுகளில் அனுப்பி வைத்தனர். புதிய நாடுகளில் அங்குள்ள மொழிகள் வித்தியாசமாக இருப்பதால் குர் ஆனின் ஓதல் மாற்றங்கள் ஏற்பட்டு அதன் கருத்தில் மாற்றம் வராமல் இருப்பதற்காக ஓதுவதற்கான சட்டங்களும் உருவாகின.

குர் ஆனை சீரமைப்பதும் ஒழுங்குபடுத்துவதும் முற்றுமுணர்ந்த முக்காலஞானியாகிய அல்லாகு மட்டுமே.கியாம:16-19அல்லாவு கூறுகின்றான் இந்த குர் ஆனை படிப்பதற்காக நீ அவசரபட தேவையில்லை. நமது கடமைதான் அதை சீரமைப்பதும் கற்றுதரவேண்டியதும் அவ்வாறு நான் உனக்கு அது (ஜீப்ரில் வழியாக) கற்று தந்தால் அந்நிலையில் நீ பின் தொடர வேண்டும். பிறகு அதை விளக்கமாக்குவதும் நம் கடமைதான். த்தாஹா:114 ல் அல்லாகு கூறுகின்றான். உனக்கு அளித்த இச் செய்திகள் முடிவடைதற்க்கு முன்பாக இந்த குர் ஆனை புரிந்து கொள்ள நீ அவசரபட கூடாது. என் நாதா எனக்கு கல்வியை ஏற்றி தருவாயாக என்று நீ வேண்டி கொள்ளவும். குர் ஆனை படிப்பதும் அதன் கருத்தை படிப்பதும் மற்றவர்களுக்கு கற்று கொடுப்பதன் வடிவும் அதை சீரமைத்த வடிவில் பகர முதல் தான் படிக்க வேண்டும். அன்றி அதற்கு முரண்ரபாடாக அதன் இறுதி செய்தியான “அம்மாஜூஸ்” முதல் கற்று கொடுப்பதால் தான் முஸ்லீம்களுக்கு குர் ஆனை புரியாமல் போய் விட்டது. அவர்களின் உணவுகள் தூய்மையானதோ நேர்மையானதோ அல்ல. எனவெ அதை பயன்படுத்த முடியாமல் போய் விட்டது. நஹல்:114 விளக்கம் பார்க்கவும் ஹிஜா:9ல் கண்டிப்பாக இவ்வறிவுரையை குர் ஆனின் ஆத்மாவ் நாம் தான் வழங்கியது. நாமே அதை பாதுகாத்து கொள்வோம் என கூறப்பட்டுள்ளது. கீழ் வரும் பெயர்களில் குர் ஆனின் கருத்தை அல்லாகு தெரியப்படுத்தியிருக்கின்றான். அப்பெயர்களையெல்லாம் அவைகேற்றவாறு பயன்படுத்தி கொள்பவருக்கு மட்டுமே குர் ஆன் சாதகமகவும் சாட்சியாகவும் உரையாடும்.

## அத்திக்ர் (குர் ஆனின் உள்ளம்) :

மனிதர்களின் உள்ளங்கள் புரிந்து கொள்கின்றமொழியால் அமைக்கபட்ட இறைநூலின் கருத்தைதான் அத்திக்ர் என கூறுவது: அஃராஃப் 26 ல் கூறிய ஆத்மாவின் உணவும், உடையும், பார்வையுமாகிய அத்திக்ர் மட்டுமே சொர்கத்தில் வைத்து அனைத்து மனிதர்களுக்கும் கற்பிக்கப்பட்டது. அதை மட்டுமே ஆரம்பம் முதல் இறுதி வரை உள்ள அனைத்து உலகிற்க்கும் வழங்கப்பட்டது என நஹல்:44, அம்பியா:24 புசிலத்:43 போன்றவசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான (100) இடங்களில் திக்ர் என்றசொல் வருகிறது. அங்கெல்லாம் இறைஎண்ணத்துடன் செயல்பட ஒரே ஒரு வழி, உள்ளத்தின் மொழியில் அமைந்த குர் ஆனின் கருத்தைதான் தெளிவுபடுத்துகின்றது. குர் ஆனின் உடலை அனைத்து காலங்களிலும் நிலை நாட்டுவேன் என அல்லாகு கூறவில்லை. அன்றி உள்ளங்கள் புரிந்து கொள்ளும் கருத்தை (அத்திகர்) நிலை நாட்டுவேன் என்று ஹிஜர்:9 ல் கூறியிருக்கின்றான். நமக்குள் இவனுக்கா இந்த திக்ர் வழங்கப்பட்டது ? இல்லை, அவர்கள் திக்கிரி(குர் ஆனின்வுரை) யின் விசயத்தில் முழு சந்தேகத்திலே என மறுப்பவர்களை பற்றி சுவாத் 8 லும், “திக்ரீ ” பார்க்க அவர்கள் கண்ணிற்கு மூடி போடபட்டவரும் அதை கேட்க தயாராகாத காபிருகள் பக்கம் நரக கூண்டு

கொண்டு வரப்படும் என கஃப்: 100-101 லும் கூறப்பட்டிருக்கிறது. குர் ஆனின் கருத்தை நிலை நாட்டுவதற்காகவே தொழுகை நிலை நாட்டவும் என த்தாக 14 ல் கூறப்பட்டிருக்கிறது. செல்வந்தமான குர் ஆனின் கருத்தை புறக்கணித்தவர் இவ்வுலகில் இடுங்கிய வாழ்க்கையுடையவனும் மறுமையில் அவன் குருடனாக உயிர்பிக்கப்படுவான் என த்தாகா:124 ல் கூறப்பட்டிருக்கிறது.

உண்மை வழியான குர் ஆனின் கருத்துக்களை உலகில் அனைவருக்கும் உதவுகின்றஒரு “திக்ரா ” (ஞாபகப்படுத்தல்) அன்றி மற்றொன்றும் அல்ல என அன்ஆம்: 90 லும் அது இறைநம்பிக்கையாளர்களுக்கு இது ஒரு அறிவுரை என்று அஃராப்:2, கூத்:120 வசனங்களில் கூறப்பட்டிருக்கின்றது. இறைநம்பிக்கையாளர்க்கு மட்டுமே ‘திக்ரா‘பயன்படும் என அத்தாரியாத்:55லும் நெருப்பில் எரிய போகின்றஅதிஷ்டமில்லாதவர் அதில் இருந்து விலகிக் கொள்வர் என அஹ்லா:9-12 லும் கூறப்பட்டுள்ளது. நரக கூண்டை கொண்டு வருகின்றநாள் (திக்ரா) குர்ஆனின் கருத்தை பயன்படுத்தியிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என மனிதனுக்கு ஞாபகம் வருமென ஃபஜ்ர்:23ல் கூறப்பட்டிருக்கிறது. இறைவனின் எண்ணத்தை ஞாபகப்படுத்துகின்றகுர்ஆனின் கருத்துதான் மிக சிறந்தது என அன்கபூத்:45 லும் உங்களுடைய செல்வங்களோ? குழந்தைகளோ குர்ஆனின் கருத்துகளை உங்களிடமிருந்து அகற்றி விடக் கூடாதெனவும் அப்படியானால் அவர்கள் தன் வாழ்க்கையை அழித்து விட்டாரென்று முனாபிகூன்: 9-லும் கூறப்பட்டுள்ளது. குர் ஆனின் விளக்கங்களை விளங்க வைக்கின்றதாக அமைய வேண்டும் ஜும்ஆ:உரையடல் (உரைகள்). அவற்றைகேட்பதற்காக அவசரமாக செல்ல வேண்டுமென ஜும் ஆ:9-ல் இறைநம்பிக்கையாளர்களுடன் எச்சரித்துள்ளது. குர்ஆனின் கருத்தை பின்பற்றுபவர்களை மட்டுமே உனக்கு புரியவைக்கமுடியும் என யாசீன்:11-லும் குர் ஆனின் கருத்து உனக்கும், உனது ஆட்களுக்கும் உள்ள ஒரு“திக்ர்”என்றும், நீயும் உன்னுடைய ஆட்களும் அதை பற்றி கேள்வி கேட்கபடும் என சுக்ருஃப்:44-லும் கூறப்பட்டுள்ளது.குர் ஆனில் ஒன்றின் பின் ஒன்றாக எந்த தகவலும் வழங்கவில்லை எனவே குர் ஆனின் மொத்த கருத்தை தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம்.

## ததிக்ரா:(பயணசீட்டு)

கண்டிப்பாக உமது இறைவனிடம் செல்ல விரும்புவர்களுக்கு குர் ஆனின் கருத்து ஒரு பயண சீட்டென முசம்மில்:19, இன்சான்:29 என்றவசனங்களிலும் ஆனால் குர் ஆனின் கருத்தை பின் பற்றுபவர் தான் இறைவனை அஞ்சுபவர்களும், அவர்களே இதை பயணசீட்டாய் ஏற்று கொள்வர் என அல்ஹாக்க:48-லும் கூறப்பட்டிருக்கிறது. எவருக்கு இதன் உண்மை (குர் ஆன்) கிடைத்தும் அதை சத்தியப்படுத்தி வாழ்கின்றார்களே, அவர் தான் இறைஅச்சமுடையவர் என சுமர்:33-லும்,சிங்கத்தின் அலறல் கேட்டு மிரண்டு ஒடும் காட்டு கழுதைகளைபோல் இறைமறுப்போர் குர் ஆனின் கருத்தான “ தத்கிரா”வில் இருந்து அகன்று விடுவார்கள் என முத்தச்சிர் :49-51லும் கூறப்பட்டிருக்கின்றது கண்டிப்பாக பிசாசுகள் குர் ஆனின் கருத்தை கேட்பதில் இருந்து அகற்றப்பட்டவனே என அஷஷு ஃறா:212 - லும் கூறப்பட்டிருக்கின்றது

## குதா(நேர் வழி)

இறைவனிடம் இருந்து வந்த ஒரேயொரு இறைநூலின் கருத்துதான். குதா. பகர:38 -ல், சொர்க்கத்தில் இருந்து அனைத்து மனிதரையும் பூமியில் அனுப்பும் பொழுது இறைவன் கூறினான் என்னிடம் இருந்து குதா (நேர் வழி) உங்களுக்கு கிடைக்கும் பொழுது யார் அதை

பின்பற்றுகின்றனரோ அவர்கள், மீது அச்சமடையவோ, அவர்கள் வருந்தவோ தேவையில்லை.என கூறியிருக்கின்றது. குர் ஆனின் கருத்து அனைத்து மனிதருக்குமான நேர் வழியென பகர:185-ல் கூறப்பட்டிருக்கின்றான். குதா பெற்று கொள்ள வேண்டுமென்றகருத்து இருப்பதால் குர் ஆன் பெற்று கொள்ளாத மக்களை அல்லாகு தண்டிக்கமாட்டான்.ஒரு தூதனை அனுப்பும் வரை நாம் எவரையும் தண்டிக்கமாட்டோம் என இஸ்ரா:15-ல் கூறியிருக்கின்றான். எனவே முகம்மத் நபியின் சமூகத்தாரான மற்றுபிரிவினருக்கு குர்ஆனின் கருத்தை ஒப்படைக்கவேண்டும் என்பது அதை பெற்று கொண்டவர்களின் கடமையே.

ஃபுர்கான்(நன்மையும், தீமையும் தெரிந்து கொள்ள உதவுவது)

பகர:185-லும்ஃபுர்கான்:1-லும் அனைத்துலகிற்க்கும் நேர் வழியாகவும்,நன்மையையும் ,தீமையையும், நீதியும், அநீதியும், சொர்க்கத்தில் செல்லும் ஒரே ஒரு வழியும், நரகத்தில் செல்ல உதவுகின்றபல வழிகளும், வாழ்கையின் அனைத்து துறைகளிலும் புரிந்து கொள்ள உதவுகின்றகுர் ஆனின் அனைத்து கருத்துகளும் அடைந்த புர்கான். நம்பிக்கையுடையவர்களையும் மறுப்பவர்களையும் தெரிந்து கொள்ள உதவுகின்றது தான் புர்கான்.

மீசான் (எடைபார்ப்பது)

இயற்கையை அதன் இயற்கை வழியில் பாதுகாக்கின்றகருவிதான் குர் ஆனின் கருத்து என அல்ஸூரா:17,அர்ரஹமான்:7-9,ஹதீத்:25 என்றவசனங்களில் கூறியது. பொதுவாக விளங்கும் இறைவன், அவனுடைய தொன்டர்களாக அனுப்பிய மனிதனின் கடமை தான் இயற்கையை அதன் தனிவடிவில் குர் ஆனின் கருத்தை பயன்படுத்தி எடைபார்க்கும் கருவியாக பயன்படுத்துபவர் எவரோ அவர்களே இவ்வியற்கையை பாதுகாக்க வேண்டியது தனது பெறுப்புபென எண்ணுவார். உண்மை இறைதொண்டர்களான நம்பிக்கையாளர்களே அந்த பொறுப்பை ஏற்று, தாமும், மற்றவர்களையும் அதற்கு தூண்டுவார் எந்த கேள்வியும் இல்லாமல் சொர்க்கத்தில் செல்லும் ஒரு நம்பிக்கையாளர், உலகில் எங்குமே இல்லாத நிலை உருவாகும் பொழுது தான் உலகின் அழிவின் முன்னோடியாக கூறிய பத்து அறிகுறிகள் தோன்றும். அன்ஆம்:158-விளக்கம் பார்க்கவும், எந்த ஒரு நிகழ்சியாக இருப்பினும் எடை தவறாத குர் ஆனின் கருத்தை வைத்து எடைபார்த்து நன்றாக ஆராய்ந்து தான் செயல்பட இறைநம்பிக்கையாளரிடம் கூறப்பட்டுள்ளது. திராசான குர் ஆனின் கருத்தின் மூலம் தனிப்பட்ட வாழ்கையிலும் குடும்ப வாழ்கையிலும், பொதுமக்கள் நடுவிலும் தீர்ப்பு வழங்காதவர்கள் தான் காபிருக்கள் எனவும், குற்றவாளிகள் எனவும்,தீயவர்கள் எனவும் வரிசையாக மாஇத:44,45,47 என்றவசனங்ளில் கூறப்பட்டுள்ளது.

ஹக் (உண்மை) சித்க் (உண்மை)

யூனுஸ்:108 -ல் ஓ மனிதர்களே, உங்கள் இறைவனிடம் இருந்து உங்களுக்கு உண்மை வந்துவிட்டது எனவே யார் அதை பயன்படுத்தி நேர்வழியடைகின்றனரோ அவர் தம்மைத் தானே நேர்வழியடைய செய்தார். யார் தாமாகவே வழிதவறினாரோ, வழிதவறியதன் பொறுப்பும் அந்த ஆத்மாமையே சேரும். நான் உங்கள் பொறுப்பாளன் அல்ல பாதுகாவலனும்அல்ல என கூறநபியோடு கூறப்பட்டுள்ளது.விதி கூறும் மறுமைநாளில் ஹக்கும்,எடையுமான குர்ஆனின் கருத்திற்கு தான் என அஃராஃப்8 -9 -லும்,மறுமை நாளில் விதி கூறுவது ஹக்கான குர் ஆனின்

கருத்தை வைத்தே என சுமர்:69,75 வசனங்களிலும், இவ்வுலகில் மனிதர்கள் பிரிவுகளான நிகழ்சிகளில் விதி கூறுவதற்கு மட்டுமே உன் மீது இறைநூல் வழங்கப்பட்டது என நஹ்ல்:64-ல் கூறப்பட்டிருக்கின்றது. எந்த விசயத்திலும் நம்பிக்கையாளர்கள் மட்டுமே இவ்வுலகில் குர்ஆனின் கருத்தின்படி விதி கூறுவார். ஆனால், அல்லாகுவை பொதுவாகவிளங்குபவனாக ஏற்றுக்கொள்ளாத போலி நம்பிக்கையாளன், மனிதர்களின் பிரிவினை பற்றிய விவரங்கள் மறுமை நாளில் அல்லாகு விதி வழங்குவான் என்றல்லவா கூறியிருக்கின்றான் என கூறி எதையும் மறுமை நாளில் ஒதுக்கி ஒதுங்கி கொள்வான்.கேள்வி கேட்காமல் நரக நெருப்பில் போகின்றஅவர் குர் ஆனின் கருத்தை ஹக்காகவோ,எடைகருவியாகவோ பயன்படுத்தமாட்டார்கள். அன்கபுத்:68,சுமர்:41 விளக்கம் பார்க்கவும்.

சித்க் என்றகுர் ஆனின் கருத்தை கைப்பற்றிய பின் அதை மறைத்து வைப்பவரும் பொய்யென்று கூறுபவர்களும் குற்றவாளிகளும், காபிறுகளும், என ஃசுமர்:32 -லும்,யார் சித்க் கைப்பற்றிய பின் அதை முழுமையாக சத்தியப்படுத்துகின்றனரோ அவர்கள் மட்டுமே முத்தகிங்கள் (இறைவன் என்றஎண்ணத்தை இதயத்தில் வைத்திருப்பவர்) என்று சுமர் 33 - லும் கூறியிருக்கிறது. இறையச்சம் உடையவர்கள் சொர்கத்தில் தங்களது நாதனின் பக்கம் சித்க் என்றஇடத்தில் அமர்ந்திருப்பார் என கமர்:54-55ல் கூறப்பட்டுள்ளது.

கீஸ்த் (நீதி)

மாயிதா 8.ல் இறைநம்பிக்கையாளர்களை அழைத்து.நீங்கள் அல்லாகுவிற்க்காக உறுதியுடன் நிலை கொள்ளவும். நீதியுடன் சாட்சி கூறுபவருமாகுவின் என கூறியதன் பொருள்,நீங்கள் குர் ஆனின் கருத்தின்படி சாட்சி வழங்கவேண்டும் என்பதே. அன்னிசா:135, ஹதீத்:25 போன்றவசனங்களில் கூறிய“கிஸ்த்” என்பதன் நோக்கம் குர் ஆனின் கருத்தையே. மாயிதா : 42, ஹுஜராத் : 9, மும்தனா : 8 போன்ற வசனங்களில் கண்டிப்பாக அல்லாகு குர் ஆனின் கருத்தின்படி நீதி வழங்குபவர்களை நேசிக்கின்றான். என்றகருத்தினால் மட்டுமே.இஸ்ரா:35ம் அஸ்சுராஃ:182லும் நீங்கள் கிஸ்த்தாசுல் முஸ்தத்கீம்வைத்து எடை போடவும் என்று கூறியது நீதியின் திராசான குர் ஆனின் கருத்தை வைத்தே என்பதே. அதாவது குர் ஆனின் வசனங்களுக்கு ஏற்ப நம்மையும், மற்றவரையும் ஆராய்ந்து ஒருவன் சத்தியத்தின் வழியா இல்லை தவறான வழியா என புரிந்து கொள்ள வேண்டும்.

அமானத் (நம்பி ஒப்படைத்தது)

இயற்கையை அதற்கேற்றவாறு பாதுகாக்கின்றதிராசும், அமானத்துமாகிய குர் ஆனின் கட்டளைகளை ஏற்பதற்கு, வானமும், பூமியும், மலைகளும் தயங்கி அச்சமடைந்தனர். ஆனால் மனிதன் அதை ஏற்றுவாங்கினான். அவன் முட்டாளும்,அநீதிகாரனும் தான் என அஹ்சாப்:72‘-லும் அமானத்தை கைப்பற்றிய பிறகு அதை உலகிற்கு அறிமுகபடுத்தாமல் அநீதி விளைவிக்கும் போலி நம்பக்கையாளனையும் இறைவனின் ஆட்சி அதிகாரத்தில் இணை வைத்த மூடர்களையும் தண்டிபதற்காகவே இதை வழங்கியுள்ளோம் என அஹ்சாப்:73 -லும்,ஃபத்ஹ்:6-லும் கூறியுள்ளது. இயற்கை அழிவதற்கான பங்கை ஏற்க வேண்டி வருவதும் அவர்களே. த்தாகா:100-101 விளக்கம் பார்க்கவும். முஅமீனூன்:8, மஆரிஜ்:32 என்றவசனங்களில் வெற்றி காண்பவரான இறைநம்பிக்கையாளர்கள் அவர்கள் ஏற்று கொண்ட அமானத்தை கவனமாக பாதுகாப்பார்கள் எனவும் கூறியுள்ளது.

ஃபஸ்சாயிர் (ஆறாம் அறிவு )

அன்ஆம்:104, அஃராப்:203, ஜாசியா:20 என்னும் வசனங்களில் குர் ஆனின் அனைத்து கருத்துக்களும் உள்ளத்தின் ஒளியென்றும் யாராவது அதை பயன்படுத்தினால் அதன் பயன்கள் அவனுக்கு மட்டுமே, எவரேனும் அதை மறந்தவராயின் அதன் தீங்கும் அந்த ஆத்மாவிற்கே என ஒவ்வொரு ஆத்மாவிற்கும் கூறப்பட்டுள்ளது.

அவர் அமரும் இடம் நாளை சொர்கத்திலா அல்லது நரகத்திலா என தெளிவுபடுத்துகின்றது தான் பசாஇர். குர் ஆனின் கருத்தை பயன்படுத்தி நரகத்தின் தண்டனைகளும், சொர்கத்தின் ஆனந்த சுகவும் புரிந்த ஒவ்வொருவரும், சொர்க்கம் இங்கு கட்டி கொள்ள வேண்டும் என்பதற்காகவே மனிதனின் நான்காம் நிலையாக அவர்களை பூமியில் தங்கவைத்துள்ளது. பசாஇரின் செய்தியில் பார்வையற்றவர் தான் நரகத்தில் கூட்டமாக சேர்க்கபடும் என அஃராஃப்:179-ல் கூறப்பட்டுள்ளது. கஃப்:100-101 விளக்கம் பார்க்கவும்.

ஃபுர்ஹான் (தெளிவான அத்தாட்சி)

குர் ஆனின் மொத்த கருத்தும் மனிதர்களுக்கான புர்ஹானும் எந்த வித சந்தேகத்திற்கும் இடமில்லாத ஒளியென்றும் அன்னிசா:174-175 ல் கூறப்பட்டுள்ளது. எந்த ஒரு செய்திக்கும் குர் ஆனில் இருந்து ஒரு சொல்லாவது, எடுத்துரைப்பவருக்கு சாதகமாக மறுமை நாளில் தெளிவான அத்தாட்சியாகவும், உதவியாளராகவும் அமையும்.அம்பியா:24-ல் குர் ஆனின் கருத்தை புர்ஹான், ஹக், திக்ர் எனும் மூன்று பெயர்கள் வழங்கப்பட்டுள்ளது.பகர:111 விளக்கம் பார்க்கவும்.

அன்னூர் (ஒளி)

மனிதர்களை இருட்டின்வாயில் இருந்து வெளிச்சத்தின் வாயிலாக செயல்படுவதற்காகவே குர் ஆன் என்றஇவ்வேதம் அனுப்பபட்டுள்ளது என்று இப்ராகிம்:1-ல் கூறப்பட்டுள்ளது. அஃராஃப்:157, அத்தகாபூன்:8 என்றவசனங்களில் எவர் முகம்மது நபியால் நம்பிக்கை கொண்டு அவருக்கு துணையாகவும், உறுதியாகவும், அவருக்கு வழங்கிய ஒளியை பின்பற்றி கொள்கின்றனரோ, அவர்கள் மட்டுமே வெற்றியடைவார் என கூறப்பட்டிருக்கின்றது. அல்லாகுவும் குர்ஆனும் ஒளியானதால் இறைவனிடம் திரும்ப விரும்புவர் குர் ஆனின் கருத்து என்னும் ஒளியை முழுமையாக ஏற்று கொள்ள வேண்டும். அன்னூர்: 35, அஸ்ஸரா : 52 பார்க்கவும். குர் ஆனின் கருத்தான ஒளியால் ஆணவம், பொறாமை, தனக்குத்தான் போதுமானவன் என்றபிசாசின் குணங்கள் அனைத்தும் அழித்து சுத்தமான மனதுடன் சொர்கத்தில் (இறைவனிடம்) திரும்பி செல்வதுதான் வாழ்க்கையின் கொள்கை.

சாகித் (சாட்சியளிப்பது)

அன் ஆம்: 19-ல் அல்லாகுவும் குர் ஆனின் கருத்தும் தான் உண்மையிலே மிகப் பெரிய சாட்சி என கூறப்பட்டுள்ளது. குர் ஆன் தமக்கு சாதகமாகவோ, தமக்கெதிராகவோ சாட்சி கூறுமென நபி கற்பித்தார். யார் குர் ஆன் படித்தபின் அதற்கு முரண்பாடாக வாழ்க்கை நடத்துகின்றனரோ அவர்களுக்கு மாறாகவும், யார் குர்ஆனின் கருத்தை ஏற்று அதற்கேற்ப வாழ்கின்றனரோ அவர்களுக்கு சாதகமாகவும் சாட்சி வழங்கும். சாட்சியான குர் ஆனின் கருத்தை ஏற்றபின் யார் அதை மறைத்து வைத்தார்களோ அத்தகையோருக்கு வாக்களித்திருக்கின்றது நரகம் என கூத்: 17-ல் கூறப்பட்டிருக்கின்றது. முகம்மத் நபியின் வாழ்க்கை குர் ஆனாக தான் இருந்தது. எனவே இறைநம்பிக்கையாளர் குர் ஆனின் கருத்திலிருந்து முகம்மது நபியை பார்த்து

அவ்வாறு வாழ்க்கை நடத்தி மனிதர்முன் சாட்சியாக வேண்டுமென பகர:143,ஹஜ் 78 -ல் கூறப்பட்டுள்ளது. பகர : 121 விளக்கம் பார்க்கவும்.

ஹிக்மத்(ஞானம்)

அந்நஹ்ல்:125-ல் தெளிவாகவும், மிக அழகாகவும் நல் எண்ணத்துடனும் இறைவனின் வழியில் மனிதரை அழைக்க வேண்டும் என கூறியதில் ஹிக்மத் குர் ஆனின் கொள்கை மிகுந்த ஞானமான வசனத்திற்கே. குர் ஆன் வசனங்களை சீராக ஒன்றைமற்றொன்றுடன் சேர்த்து புரிந்து கொள்வதன் திறமையே''ஹிக்மத்'' என கூறுவது.பகர:269-ல் எவருக்கு ஹிக்மத் வழங்கப்பட்டுள்ளதோ அவர்கள் மிகப்பெரிய செல்வம் பெற்று கொண்டனர் என கூறப்பட்டுள்ளது. இயற்கையின் நடைமுறையில் நிகழும் அனைத்து நிகழ்ச்சிகளையும் அதன் உண்மைகளையும் யோசித்து புரிந்து கொள்பவர்களுக்கு மட்டுமே அவ்வாறு புரிந்து கொள்ள முடியும்.

மவ்இளத்(சான்றுரை)

மவ்இளத் எனறால், தெளிவான கருத்துக்களான வசனங்களை உள்ளங்கள் ஏற்க்குமளவு அவ்வசனங்களின் ஆணைகளும், விரோதங்களும் மட்டுமே. குர் ஆனின் கருத்து அனைத்து மனிதர்களுக்கும் சான்றுரையும் அவர்களின் உள்ளங்களில் இருக்கும் சந்தேகத்திற்க்கு ஆறுதல் அளிப்பதும்,நம்பிக்கையாளர்களுக்கு நேர்வழியும் அருளும் என யூனுஸ்:57-ல்கூறியிருக்கிறது. மவ்இளத்திற்கு சான்றுரை, நற்செய்தி, எச்சரிக்கை என்று கருத்து இருக்கின்றது. பகர:66,ஆலிஇம்ரான்:138 விளக்கம் பார்க்கவும்.

க்ஷிஃபா (நோய்கு நிவாரணம் அளிப்பது)

இஸ்ராஃ:82-ல் குர் ஆனில் நம்பிக்கையடைந்தவர்களுக்கு அவர்களின் மனநோய்க்கு நிவாரணம் அளிப்பதும், சந்தோஷம் அடையசெய்வதும், ஆனால் குற்றவாளிக்கு அது மிகபெரிய தீங்கை உருவாக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது, குர் ஆனின் கருத்து நம்பிக்கையாளருக்கு அவர்களுடைய நம்பிக்கையை ஏற்று கொடுக்கும் என தவ்பா:124 கூறப்பட்டுள்ளது.ஆனால் போலிநம்பிக்கையாளனுக்கு அவர்களின் வியாதி மேலும் மேலும் அசுத்தமாக ஏற்றி கொடுக்கும் என 125லும் கூறப்பட்டிருக்கிறது. அன்பால்:2-4, ஃபுசிலத்:44 விளக்கம் பார்க்கவும். மனநிலை, உடல் நிலை போன்றஅனைத்து வியாதிகளுக்கும் நிவாரணம் அளிப்பது குர் ஆனின் கருத்து என்று இருக்க, ஆத்மாவை புரிந்து கொள்ள இயலாத போலிநம்பிக்கையாளனின் நோய்க்கு குர் ஆனின் உடலை வைத்து கேவலமாக சம்பாதிப்பார்கள். அவ்வாறு அவர்களும், அவர்களை பின்தொடர்கின்றவர்களும் (ஃபுஜ்ஜாருக்கள்) அவர்கள் வயற்றில் நெருப்பை நிறைப்பதாக பகர:124-ல் கூறப்பட்டிருக்கிறது. அன்னிசா:50-52 விளக்கம் பார்க்கவும்.

ரஹ்மத்(அருள்):ஃபள்ல்(நன்கொடை)

பகர:105ல் ஆலிஇம்ரான்:74,அன்னிசா:113 வசனங்களிலெல்லாம் கூறிய அருளும், நன்கொடை இவை அனைத்துமே குர் ஆனின் கருத்துதான். யூனஸ்:58-ல் நபியோடு இறைவனின் அருளும் நன்கொடையும் பெற்று பெருமை கொள்ளுங்கள் என கூறப்பட்டுள்ளது. அதுவே நீங்கள் சேர்த்து வைத்திருக்கின்றமற்று செல்வங்களை விட மிக சிறந்தது. குர் ஆன் தான் மிக சிறந்த செல்வம்.அதற்க்கு பின் வறுமையில்லை.அது இல்லாமல் நிம்மதியுமில்லை

என நபி கூறியிருக்கின்றார். ஆனால் நம்பிக்கையாளர்கள் மட்டுமே குர் ஆனின் கருத்தை அருளாகவும், நன்கொடையாகவும் எண்ணி செயல்படுவார்கள். ஆலிஇம்ரான்:79, அன்னிசா:82,விளக்கம் பார்க்கவும். உறுதியாக, குர் ஆனின் கருத்தை மற்றவர்களிடம் மறைத்து வைத்த போலி நம்பிக்கையாளனுக்கு இகழ்ச்சி மட்டுமே என அல்ஹாக்க:50-ல் கூறப்பட்டுள்ளது.அஃ்ராஃப் :96-ன் விளக்கம் பார்க்கவும்.

## இமாம்(தலைமை தாங்குவது)

தவ்ராத்தும்,குர்ஆனும் இமாமும்.அருளுமென கூத்:17,அல்ஹாக்க:12 என்றவசனங்களில் கூறப்பட்டுள்ளது.இஸ்ராஃ :13-14-ல் அனைத்து ஒவ்வொரு மனிதரும் அவர்களின் அதிர்ஷ்டம், துரதிர்ஷ்டம் (செயல்களின் ஏடு)அவர்களுடைய கழுத்தில் அணிந்தவாறு மறுமை நாளில் நாம் அதனை ஒளிவீசும் நூலாக அவர்களை ஒப்படைத்து உன் செயல்களை நீ படித்து காட்ட கூறுவோம். இன்று உன்னை கேள்வி கேட்கவும் சோதனைசெய்யவும் நீயே போதுமானவன் என்று கூறப்படும் என கூறப்பட்டுள்ளது.கஃப்:49,யாசீன்:12,சுமர்:69,ஜாசிய:28,29 வசனங்களில் கூறிய இமாம் என்றநூல் அதுவே. யார் அதை முற்றிலுமாக அவர்களின் வாழ்க்கையில் குர் ஆனின் கருத்தை கேட்கவோ, கற்று கொள்ளவோ, சிந்திக்கவோ மற்றவர்களுடன் உரையாடவோ செய்தனர் அவர்கள் செயல் யாவுமே படிக்க சிறந்ததும், எடை அதிகரிப்பதும் ஆகும்.இஸ்ராஃ:71-ல் மறுமை தினம் அனைவரையும் நாம் அவர்களுடைய இமாமுடன் விசாரிப்பதற்காக அழைப்போம். அப்பொழுது யாருக்கு அவர்களின் நூல் வலது கையில் வழங்கப்பட்டதோ அதை அவர்கள் படிப்பார்கள்.அவர்களிடம் எந்த ஒரு அனீதிக்கும் ஆளாகாமல் பாதுகாக்கப்படும் என72 லும், எவர் இவ்வுலகில் அவர்களின் இமாமை மறந்து சென்றனரோ, அவர்கள் குருடர்களும், நேர்வழி தவறியவருமே எனகூறப்பட்டுள்ளது. பகர:6,7 விளக்கம் பாக்கவும்.

இன்று இத்தகைய வசனங்களை கருத்தின்றி படிக்கின்ற முஸ்லீம்கள் குர் ஆனின் கருத்துக்களை இமாமாய் ஒத்து கொள்வதற்கு பதில் தீனில் இருந்து விலகி சென்ற போலி பிரசாரர்களை இமாமாக ஒத்து கொண்டனர். நபி கூறினார் நீங்கள் குர் ஆனை முன்னால் வைத்து செல்லவும். அது இறைவனிடம் உள்ளது. அவனிடம் அது திரும்பும். அதை பின்னணியில் தள்ளி விடாதீர்கள். அது உங்களை நரகத்தில் விழச்செய்யும். அந்நிகழ்ச்சியை தான் அன்கபூத்:45-ல் குர் ஆனின் கருத்தை மட்டும் மிக முக்கியமானதெனவும் கூறியதன் பொருள். ஃபுர்கான்:74-ன் படி எங்களை நீ குர் ஆனின் கருத்தை பின்துடர்கின்றவர்களுக்கு இமாமாக ஏற்ப்படுத்த வேண்டுமென வேண்டிகொள்கின்றநம்பிக்கயாளர், அல்லாகு கொலை செய்துவிட்ட போலி நம்பிக்கையாளனின் பின் நின்று தொழுகை மட்டுமல்ல அவர்களை கண் மூடிதனமாக பின் துடர்ந்து செல்லமாட்டார்கள் என ஃபுர்கான் 18-ல் கூறிய அழிந்துபோன கூட்டத்திற்க்கு இமாமாக தலைமை கூட தாங்கமாட்டார்கள்.

## முஹைமின்(பாதுகாபபளிப்பது)

முஹைமின் என்று கூறுவது பாதுகாப்பளிப்பது என்றே, கவனித்து கொள்வது, தலமை தாங்குவது, பயிற்ச்சியளிப்பது என்றெல்லாம் கூறுவர். உறுதியாக குர் ஆனின் ஆத்மாவை நாமே வழங்கியுள்ளோம்.அதனை நாமே பாதுகாத்து கொள்வோம் என ஹிஜ்ர்:9-ல் கூறியதனால் குர் ஆனின் கருத்தில் மற்றவர்கள் எவருக்குமே எந்த மாறுதல்களும் செய்ய முடியாது. (உயிரான பொருளிலும். உடலான அரபி மொழியிலும் மாறறம் வருத்த முடியாது என அல்லாகு கூறவில்லை

என்பதை நன்றாக நினைவு கூர்ந்து கொள்ளவும்) நடை முறையிலுள்ள முன் இறைநூல்களில் இறைவனின் வசனங்களும் மனிதனின் சொல்களும் சேர்ந்திருப்பதை குர் ஆனின் மூலம் அவைகளை பிரித்து புரிந்து கொள்ள முடியும். அதவாது குர் ஆனின் உரைகள்கேற்ப இருப்பது இறைவசனங்களும், குர் ஆனின் உரைகளுக்கு மாறாக இருப்பதெல்லாம் மனிதன் தயார் செய்ததுமே, குர் ஆன் வழங்கப்பட்ட பின் இனி முந்தைய இறைநூல்களில் எந்த புலன் ஆய்வும் தேவையில்லாதவாறு குர் ஆன் அவற்றைபாதுகாக்கும். எனவே தான் குர் ஆனின் கருத்தை முஹைமீன் என கூறுவது. நம்பிக்கையாளர் குர் ஆனின் கருத்தை அனைத்து வகையான ஆபத்து, விபத்து போன்றவற்றின் மீது பாதுகாப்பளிக்கின்ற. நரகத்திலிருந்தும் பாதுகாக்கின்றகவசவும்.முஹைமினுமாக பயன்படுத்துவார்கள். ஹஸ்ர்:23,ல் முஹைமின் அல்லாகுவும், மாஇத:48,ல் முஹைமின் குர் ஆனின் கருத்துமே. ஆலிஇம்ரான்:101-103 விளக்கம் பார்க்கவும்.

ஹதீஸ்(உரையாடல்)

அன்னிசா:78-ல் கூறபட்டிருக்கின்றது. இறைவனின் உரையாடலை விட மிகச்சிறந்த உரையாடல் எவருடைய உரையாடல் என அன்னிசா:87லும், இறைவனை விட உண்மை பேசுபவர் எவர் என 122லும் கேட்கப்பட்டுள்ளது.அஃராஃப்:185, முர்சலாத்:50 என்றவசனங்கள் முடிவடைவதும், அப்பொழுது இவ்வுரையாடலுக்கு பிறகு எந்த அறிவுரைகளை நம்புகிராற்களோ என கேள்வி கேட்டவாறு என்றால், ஜாசிய:6 முடிவடைகிறது. ஆகவே இறைவனையும், அவனுடைய வசனங்களுக்கும் பிறகு எந்த அறிவுரையில் அவர்கள் நம்பிக்கையடைவார் என கேள்வி கேட்டபடியே.மிகச்சிறந்த அறிவுரை அல்லாகுவின் இறைநூல் மட்டுமே. மிகச்சிறந்த அன்பளிப்பு(ஹத்யா)முகம்மதின் என நபி கற்பித்திருக்கிறார்.எந்த ஒரு செயலின் பொருள் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் அதை தெளிவு படுத்துகின்றவிளக்கம் தான் “ஹத்ய” அதுவே நபி மொழி. ஆனால் இன்று ஆத்மாவையும், உடம்பையும் தெரிந்து கொள்ளாத போலிநம்பிக்கையாளர்கள் நபி மொழியை ஹதீஸ் என பெயர் கூறி குர் ஆனையும், நபி மொழியையும் ஏமாற்றுகின்றனர். எனவே குர் ஆனை புரிந்து கொள்வதற்கு குர் ஆனே போதும். ஆனால் நபி மொழியான “ஹத்ய” குர் ஆனின் கருத்தை புரிந்து கொள்வதற்க்கு , எடுத்து காட்டாக : தொழுகையில் ஆத்மாவும் பங்கு பெறவேண்டும் என குர் ஆன் உரைக்கின்றது. ஆனால் உடல் பங்கு பெற்று செயல்படுவதை விளக்குவது நபி மொழியாகும். குர் ஆனின் கருத்தை நிலை நாட்ட தொழுகையை கடைபிடிக்கவேண்டுமென த்தாஹா:14,ல் இறைவன் கூறியிருக்கின்றான். அனைத்து படைப்பிற்குமான இறைவனின் முகவுரைதான் குர் ஆனின் கருத்து.அதை படிக்காமல் மனிதர்கள் இயக்கிய நூல்களான (ஃபிக்ஹ், தினச் செய்தி, தொண்டர்களுக்கான கல்விகளஞ்சியம், எழுத்தாளர் கவிதைகள், பிறகட்டுரைகள், இவ்வுலகில் வாழ தேவையான நூல்கள் போன்றவை) படிப்வர்கள் நன்றி கெட்டவர்களும், நம்பிக்கையிழந்தவர்களுமே.

பயான் (தெளிவுரை)

குர் ஆனின் கருத்து அனைத்து மனிதர்களுக்குமாக அமைந்த பயானும்- ஆணையும்- இறையச்சம் உடையவர்களுக்கு நேர் வழியும், நல்லுரையும் என ஆலு இம்ரான்:138ல் கூறப்பட்டுள்ளது. அவன் (முகம்மத் நபி) தமது விருப்பப்படி எதுவும் செயல்படுவதில்லை. இது அவனுக்கு வழங்கும் நற் செய்தி மட்டுமே என அன்னஜம்:3-4ல் கூறிய படி, குர் ஆனின்

தெளிவுரையான நபியின் வாழ்க்கையும், நபி மொழிகளும் இறைவனிடம் இருந்து வழங்கியது தான் என புரிந்து கொள்ளலாம்.இறைநூல், எதைப்பற்றியும் விளக்காமல் விட்டுவிடவில்லையென அன் ஆம்: 38லும் குர் ஆனின் கருத்தில் அனைத்து விளக்கவும் வழங்கப்பட்டது என்று நஹ்ல்:89லும் கூறப்பட்டுள்ளது.தவ்பா:51, யூனுஸ்: 61,ஹீத்:6, சபஅ்:3,ஃபாதிர்:11, ஹதீத்:22, தகாபூன்:11 போன்றவசனங்களிலெல்லாம், வானிலும், மண்ணிலும், உங்களிடவும் உள்ள எதுவும் அது எந்த சந்தேகத்திற்க்கும் இடமில்லாத்தவாறு ஒரு நூலில் எழுதப்பட்டதும் அதில் இல்லாத ஒன்றுமே நிகழ்வதில்லை எனவும் கூறப்பட்டுள்ளது. அந்நூல் தான் மெஞ்ஞானமிக்க குர் ஆனின் கருத்து. பய்யினவுடன்(தெளிவுரைகள்) அனைத்து தூதர்களையும் அனுப்பப்பட்டிருக்கின்றது என பகர:253, முமின்:50, ஹதீத்:25 போன்றவசனங்களிலும், மென்மையான நூலை விவரிக்கின்றதூதரே பய்யினர்(தெளிவுரை) என பய்யினா : 1 -2.லும் கூறப்பட்டுள்ளது.பய்யினாத் என்றகுர் ஆனின் கருத்தை மூடிவைப்பவர் சாபத்திற்க்கு இரையானவர் என்று பகர:159 லும், அவர்களுக்கு சாபவும், வேதனை மிக்க தண்டனையும் உண்டு என ஆலிஇம்ரான்: 105 லும் கூறப்பட்டுள்ளது.

சுன்னத்(செயல்):

முக்கால மெஞ்ஞானியான இறைவனின் செயல்கள் அதவா நிகழ்ச்சிகள் முக்கால மெஞ்ஞானமான குர் ஆனின் கருத்தே. உனக்கு முன் சென்றசமூகத்தாரிடவும், இறைதூதர்களிடவும் நாம் செயல்படுத்திய நிகழ்ச்சிகளே இதுவும், இது போன்றதில் எந்த மாறுதல்களும் நீ பார்க்க முடியாத என இஸ்ராஃ:77, அஹ்சாப்:62, ஃபத்ஹ்:23 வசனஙகளில் எல்லாம் கூறப்பட்டுள்ளது. அனைத்து காலங்களிலும் இருக்கும் இறைமறுப்பாளர்கள் பூமியில் ஆணவத்தோடு, சத்தியத்தை, அழிப்பதற்க்காக சதி திட்டம் தீட்டுவார். ஆனால் அவர்களின் சதி திட்டங்கள் அவர்களின் ஆட்களை மட்டுமே அழித்துவிடும். இவ்வாறேமுன் சமூகத்திரடம் நாம் மேற்க்கொண்ட செயல்களையெல்லாம் மீண்டும் இவர்கள் எதிர் பார்க்கின்றார்கள் என அல்லாகு கேட்க்கின்றான்? இறைவனின் செயல்களை மாற்றம் ஏற்படுவது உனக்கு பார்க்க முடியாது. அல்லாகுவின் செயல்களில் மாற்றவும் செய்யமாட்டான் என ஃபாத்திர்:4 ல் கூறியிருக்கிறது.

கலம்:4ல், உறுதியாக நீ(முகம்மது நபி) பெருமை மிக்க குணங்கள் பெற்றவனே என கூறியதில் பெருமை மிக்க குணம் என கூறுவது குர் ஆனின் குணமே. முகம்மது நபியின் குணம் தெரிந்து கொள்ள வந்தவர்களுடன் மனைவி ஆய்சா கூறியது. அவர்களின் குணம் குர் ஆன் என்றே. அதாவது நபியின் செயல்யாவும் குர் ஆனின் கருத்தே என்பதாகும்.அல வாக்கியா:82 ல்,கூறியபடி குர் ஆனின் கருத்தை புறக்கணிப்பதை உணவாக ஏற்று கொண்ட போலிநம்பிக்கையாளனை அவர்களை பின் தொடர்ந்து வருகின்றவரும் மனிதர்கள் தாயாரித்த மத்ஹப் (மதத்தில் இருந்து வெளியேறியவர்) நூல்களையும் பின்பற்றி கொண்டவர். மிகப்பெரிய அருளான குர் ஆனின் கருத்தை ஒதுக்கப்பட்டவர்களின் வீடான நரக குண்டே அவர்களுக்கென இப்ராகீம்:28,30 ல் வாக்களிக்கப் பட்டுள்ளது. முஸ்லீம்கள் குர்ஆனின் கருத்தை மறைத்து வைப்பவராயின் அதை மறைத்து வைக்காத பிறசமுகத்தாரை நாம் அதை ஒப்படைபோம் என அன் ஆம்: 89 ல் கூறப்பட்டுள்ளது. அன்னிசா: 133 விளக்கம் பார்க்கலாம்.

றிசாலத் (கடிதம்)

இறைவனின் கடிதமான குர்ஆனின் கருத்தை அனைத்து மனிதர்களுக்கும் ஒப்படைக்காமல் மறைத்து வைக்கும் சமுகத்தாரை உறுதியாக அல்லாகு நேர் வழிக்கு அனுப்பமாட்டான் என மாயித:67ல் கூறப்பட்டுள்ளது. அன்னஹ்ல்:107ல் விளக்கம் பார்க்கவும். நூஹ் கூத் சாலிஹைப் போன்ற நபிமார் அனைவருமே தமது சமுகத்தாருக்கு இறைவனின் கடிதம் ஒப்படைத்து அனைவருக்கும் அறிவுரை வழங்கிய விவரம் அஃராஃப்: 62, 68, 78, 79, 93, வசனங்களில் கூறப்பட்டுள்ளது. அனைவருக்குமாக அனைத்துலக இறைவனின் சொர்க்கத்தில் இருந்து அனுப்பிய கடிதம் தான். குர்ஆனின் கருத்து. அதை பெற்றுக்கொண்டவர் அதை படித்து புரிந்து அதன் படி வாழ்க்கை நடத்தி பதில் அளிக்க வேண்டும். அவ்வாறு செய்யா விடில் பிசாசுகளுடன் சேர்ந்து நரகத்திற்கு செல்ல வேண்டும். இவ்வுலக வாழ்க்கைக்கு பயன்தரும் கடிதம் (விசா அரசு வேலைக்கான சான்றிதழ் போன்றவை) பெற்றுக்கொண்டால் அது எந்த மொழியாக இருப்பினும் அதை கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொண்டு அவ்வாறு செயல்பட மனிதன் மிக கவனமாக இருப்பான். ஆனால் இறைவனின் கடிதம் பெற்றுவிட்டால் அதை தாமே பயன் படுத்தி கொள்ளவோ மற்றவர்களுக்கு பயன் படுத்த வழங்கவோ செய்யாமல் நன்றி கெட்டவனாகவும் செயலிழந்தவனுமானான்.

இல்மு (அறிவு)

உறுதியாக நம்முடைய முழு அறிவினால் விளங்க வைக்கின்றஒரு நூல் நாம் அவர்களுக்கு கொண்டு வந்திருக்கிறோம். என்று அஃராப்.52 லும், கூறப்பட்டுள்ளது. அல்லாகுவின் அடிமைகளில் குர் ஆனின் கருத்தை புரிந்தவர் மட்டுமே அவனை அஞ்சுவார் என ஃபாதிர்:28லும் கூறப்பட்டுள்ளது. குர்ஆனின் கருத்தை புரியாமல் அல்லாகுவை பட்டிமன்றம் நடத்துபவரும் மனிதர்களில் உண்டு. அவர்கள் சந்தேகம் உளவாக்கின்றபிசாசை தான் பின்பற்றுகிறார் என ஹஜ்ஜ்:3, 8, லுகமான்: 20 என்றவசனங்களில் கூறப்பட்டுள்ளது. இறைவனிடமிருந்து உண்மையான அறிவாகிய குர்ஆனின் கருத்தை கொண்ட அறிவு மட்டுமே எந்த ஒரு அறிவையும் நேர் வழியில் செல்லும் அறிவாக அமைக்கும். மனிதரில் குர்ஆனின் கருத்தை புரிந்து கொண்ட ஞானிகள் மட்டுமே வெற்றியாளனும், ஏக இறைவன் இன்றி வேறொரு இறைவனும் இல்லை என சாட்சி கூறுவர் என ஆஇம்ரான் :18 ல் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு அவர்களுடைய சாட்சியை மட்டுமே குர்ஆன் சாட்சியாக ஏற்று கொள்ளும் என்று பொருள். அறிவுடையவர்களும் அறிவில்லாதவர்களும் சமமா என சுமர்: 9 ல் கேட்கப்பட்டுள்ளது. ஆனால் மனிதர்களில் பெரும்பான்மையோரும் குர்ஆனின் கருத்தை புரிந்து கொள்ளாத நிலையில் மட்டுமே என்று கசஸ்: 57 ல் சஃபஃ:28, 36 முஃமின்: 57 என்றவசனங்களில் முடிவடைகிறது.

இத்ன் (அனுமதி சீட்டு)

அல்லாகுவின் அனுமதி சீட்டு மூலம் குர்ஆனின் கருத்தை ஏற்று நம்பிக்கையாளர்களாக முடியும் என யூனுஸ் :100 லும் அவர்களுடைய எஜமானனான இறைவனின் அனுமதியின்றி நேர்வழியில் செல்ல இயலாது என இப்ராஹிம்:1 லும் கூறப்பட்டுள்ளது. அல்லாகுவின் அனுமதி சீட்டு பெற்று அதை ஏற்று கொள்வதர்காக அன்றி நாம் ஒரு இறைதூதரையும் அனுப்பவில்லை என அன்னிசா:64 கூறியதில் அனுமதிச்சீட்டு என கூறுவது குர்ஆனின் கருத்தே.எனவே அல்லாகுவின் அனுமதி சீட்டும் உரையாடலுமான குர்ஆனின் ஒரு மொழியேனும் சாதகமாகாமல் எந்த ஒரு நபி மொழியும் ஏற்க கூடாது.

ஏனெனில் அது மனித பிசாசுகள் நபியின் பெயர் சூடி எடுத்துரைத்த பொய் வசனங்களே. அல்லாகுவின் அனுமதிசீட்டாகிய குர்ஆனின் கருத்தையன்றி ஒரு இறைதூதர்களும் அற்புதங்கள் காண்பிக்க முடியாது என ரஃஅத்:38, இப்ராஹிம்:11, முஅமின் : 78. என்றவசனங்களில் பார்க்கலாம். ஈசாநபி இறந்தவர்களை உயிரடைய வைத்தது இறைவனின் அனுமதிசீட்டான குர்ஆனின் கருத்தை வைத்து மட்டுமே. சாட்சி கூறவும் மற்றவர்களுக்குவேண்டி பரிந்துரையாடவும் செய்கின்றகுர்ஆனின் கருத்தை அன்றி இறைவனிடம் பரிந்துரை செய்ய யார் தயங்குவார் என பகர:255 ல் கேள்வி எழுப்ப பட்டிருக்கிறது. மனிதர்களின் உறவுகள் அனைத்துமே இறைவனின் அனுமதிசீட்டாகிய குர்ஆனின் நிழலில் அமையவேண்டும். மீறினால் அவர்கள் மறுமை நாளில் ஒவ்வொருவரும் எதிரிகளாக மாறிவிடுவர். நபி கூறியதாவது . உங்களுடைய விருப்பம் நான் கொண்டு வந்ததை நீங்கள் பின்தொடர்ந்து கொள்ளும்வரை நீங்கள் எவருமே நம்பிக்கையாளராக முடியாது. அல்லாகுவின் அனுமதிசீட்டாகிய குர்ஆனின் கருத்தின் மூலமே வானம் பூமியின் மீது விழாமல் நிற்கவில்லை என ஹஜ்ஜ்: 15 லும் கூறப்பட்டுள்ளது.

அம்ர்(ஆணை)

தெளிவார்ந்த ஆழ்ந்த கருத்துகள் கொண்ட குர்ஆனின் கருத்தை நம்மிடமிருந்துள்ளஆணையாகவும், அருள் மழை பொழியும் ஓர் இரவில் வழங்கியுள்ளோம் என துக்கான்:1- 5- ல் கூறப்பட்டிருக்கின்றது. வானவும் பூமியும் நிலை நிற்பது அவன் கட்டளையான குர்ஆனின் கருத்தின் படியே என அர்ரும் : 25 லும், உங்களுக்கு இரவும் பகலும், சூரியனும், நிலாவும் நட்சத்திரஙகள் அனைத்தும் அவன் கட்டளைப்படி உங்களுக்கு வசப்படுத்தி தந்திருக்கின்றோம் என நஹ்ல்:12லும், கூறப்பட்டுள்ளது. மலக்குகளை இறைவனின் கட்டளையால் உள்ள ரூகுடன் தன் அடிமைகளிருந்து அவன் விரும்புகின்றவர் மீது இறக்குகின்றான் என நஹ்ல்: 2லும், உனக்கு நம்முடைய கட்டளையால் உள்ள ரூகை நேர் வழிகாட்டும் ஒளியாக வழங்கப்பட்டிருப்பதாக அச்சுரா:52 லும் கூறப்பட்டுள்ளது.

குஸ்னா(மிகச்சிறந்த)

மிகச்சிறந்த குர்ஆனின் கருத்தை சத்தியப்படுத்துகின்றவர்களுக்கு. அவருடைய அனைத்து செயல்களும் அவர்களுக்கு சாதகமாக்கி கொடுப்போம் என அல்லெய்ல்:6-7 லும், மிகச்சிறந்த குர்ஆனின் கருத்தை பொய்யன உரைப்பவர்களுக்கு அவனுடைய செயல் அனைத்தும் மிகச்சிரமமாக ஏற்படுத்துவோம் என அல்லைல்:9-10 லும் கூறியுள்ளது. மிகச்சிறந்த குர்ஆனின் கருத்தின்படியே அல்லாகுவில் அழைக்க வேண்டும் என புஃசிலத்:33,லும் மிகச்சிறந்த குர்ஆனின் கருத்தின்படி தீமைகளை அகற்றி விட வேண்டுமென 34 லும், மிகச்சிறந்த குர்ஆனின் கருத்துரைகள் தீமைகளை அகற்றிவிடும் என ஹுத்114-லும், குர் ஆனின் கருத்தில்லாமல் வேதத்தின் ஆட்களோடு உரையாடக்கூடாது என அன்கபுத்:46 லும் கூறியுள்ளது. குர்ஆனின் கருத்தின்படி வாழ்பவரைத்தான் (முஹ்சின்)(இறைவனைப்பார்த்து வாழ்கின்றவர்) எனகூறுவது.

யார் அவர்களின் எஜமானனின் அழைப்பை ஏற்று மிகசிறந்த குர்ஆனின் கருத்தினால் பதில் அளிப்பது, அவர்களுக்கு நன்மைகள் உண்டு என ரஅத்:18 லும், குர்ஆனின் கருத்தில் நடப்பவர்களுக்கு மிகச்சிறந்த நன்மை உண்டு. மேலும், தீமைகளை அகற்றிவிடும் எனறும் நன்மை வாரிவழங்கப்படும் என்றுமே. அவர்களின் முகங்களில் கரிபுரளாமல் ஏமாற்றம் அடையாமல்

இருப்பர். அவர்கள் தான் சொர்க்கத்தினர். அவர்கள் அதில் நிரந்தரமாக வசிப்பர் என யூனுஸ்:26 லும், குர்ஆனின் கருத்திற்கு மிக விரைவாக சென்றவர் நரகத்தை விட்டு அகற்றிவிடுவார்கள் என அம்பியா:101 லும் கூறியுள்ளது.

உர்வத்துல் உஸ்கா (மிக உறுதி வாய்ந்த கயர்;) பாசம்)

எவர் முழுமனதாக அனைத்தும் இறைவனுக்கு அற்பித்து அவன் பார்க்கின்றான் என்றஎண்ணத்தில் வாழ்கின்றாரோ அவர் மிக உறுதியான கயிறைபிடித்தவனை போலவே என லுக்மான்:22 லும், எவர் பிசாசின் செயல்களை விட்டு விட்டு இறைவனிடம் நம்பிக்கை கொண்டார்களோ அவர்கள் அறுந்து விடாத மிக உறுதியான கயிறைபிடித்தனர் என பகர:256லும் கூறியுள்ளது. நீங்கள் அல்லாகுவை உறுதியாக பிடிக்கவும் என ஹஜ்ஜி 78 லும் எவர் அல்லாகுவை உறுதியாக பிடித்தார்களோ அவர் நேர்வழியிலாயினர் என ஆலிஇம்ரான்:101 லும் கூறியதன் நோக்கம் ஆலி இம்ரான்:103 ல் கூறிய அல்லாகுவின் பாசமாகிய குர்ஆனின் கருத்தை உறுதியாக பிடித்து ஓர் அணியாய் நிற்கவும் என்றே.

தப்சீர் (விரிவுரை)

குர் ஆனின் வசனங்களை ஒவ்வொரு காலங்களுக்கேற்ப அச்சூழ்நிலைகள் புரிந்து அதற்கு தகுந்தவாறு உரைப்பதே தப்சீர். அவர்கள் உன்னிடம் ஆச்சரியமான எந்த கேள்வியை கொண்டு வந்தாலும் அதன் உண்மையான பதிலும் இறுதி நாள் வரை அவ்வாறு எந்த கேள்வியும் கேட்காமல் இருக்குமாறு மிகச்சிறந்த தப்சீர் (விரிவுரை) உனக்கு நாம் வழங்காமல் இருப்பதில்லை என்று ஃபுர்கான் :33 ல் கூறப்பட்டுள்ளது. வசனத்தில் கூறிய உண்மையான பதில் என உரைத்தது நஹ்ல் :125 ல் கூறிய விவேகமற்றதும் மிகச்சிறந்த விரிவுரை என கூறுவது நஹ்ல்:125 ல் கூறிய மவ் இளத்துல் ஹசனாத் என்பதே. ஃபுசிலத்: 41, 42 கூறிய பொய் புரளாத வாய்மை மிக்க அத்திக்ர் (குர்ஆனின் ஆத்மாவ் ) என்பதே. அன்னிசா:105 ல் கூறியபடி உறுதியாக உன்மீது நாம் இவ்வேதம் அருளியது அவன் நாடியபடி மக்கள் மத்தியில் தீர்ப்பு வழங்குவதற்காகவே என்று கூறப்பட்டுள்ளது. குர்ஆனை விளக்கி கற்பிக்க வேண்டியது குர்ஆனின் வசனங்கள் கொண்டும் நபிமொழியினாலுமே. குர்ஆனின் விளக்கம் அல்லாகு அவன் அடிமைகளை வைத்து கூறவைப்பதும் அதை மனிதர்களின் செயல்களில் அதை வெளிப்படுத்தி காண்பிப்பதுமே. இவ்வாறு இருக்க விரிவுரையாளர் என் கருத்து இது என ஒருபோதும் கூறக்கூடாது. ஆனால் த்தாஹா:114 ன் கட்டளைப்படி என் இறைவா எனக்கு நீ அறிவை ஏற்றியருள்வாயாக. என வேண்டிக்கொண்டு யார் முகவும் பார்க்காமல் அல்லாகுவிற்கு வேண்டி மட்டுமே குர்ஆன் விரிவுரை நடத்த வேண்டும்.

## எதர்காக குர்ஆன்?

குர்ஆனின் மொத்த கருத்துக்கள் புரிந்து நரகத்தின் நபர்களாகிய காபிருகள், ரவுடிகள், குற்றவாளிகள், பைத்தியரர்கள், போக்கிரிகள், நயவஞ்சகர்கள், வாழதெரியாதவர், (காவிங்ஙள்), சிந்தனையற்றவர், (காஃபிலீங்கள்) போன்றவர்களை தெரிந்து அவர்களின் செயல்களில் இருந்து விலகி குர்ஆனின் ஒளியில் நம்பிக்கை ஏற்படுத்தி சொர்க்கம் இங்கு கட்டி முடித்து மரணத்திற்கு பின் நாம் இங்கு கட்டி முடித்த சொர்க்கத்திற்கு திரும்ப குடியேறவேண்டும். அதர்கான பொருட்களே குர்ஆனின் கருத்து.

இறைவன் நம் வேண்டுகோளை ஏற்கவும் நமது செயல்களை பெற்றுக் கொள்ளவும் வேண்டுமென்றால் பகர:186 ல் குர்ஆனின் கருத்தை முறையாக பின் பற்றவேண்டும். குர்ஆனின் கருத்தை வழங்கிய இறைவனை நம்ப வேண்டியமுறையில் நம்ப வேண்டும் என இரு ஒப்பந்தத்தை கூறியுள்ளான். 6236 வசனங்களின் கருத்தை வழங்குகின்றஅல்லாகுவை புரிந்த நம்பிக்கையாளர் எழுதவும் படிக்கவும் தெரிந்த ஒருவருக்கு நம்பிக்கையாளராக முடியும் அவர்களின் பிரார்த்தனைளுக்கு பதிலளிக்கப்படும். தொழுகை நோம்பு சகாத் ஹஜ் போன்றஎந்த செயல்களும் அத்தகையோரிடம் இருந்து மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும். ஹஜ் மனிதர்களோடு கூறியிருப்பதால் நம்பிக்கையில்லாமலும் ஹஜ் செய்யமுடியும். ஆனால், நம்பிக்கையாளராக மாறும் பொழுது தான் நாம் செய்த ஹஜ் அல்லாகு ஏற்று கொள்வான். காஃபிரின் வேண்டுதல் விணாகவே போய்விடும் என ரஹத்:14லும், முஅமின்:50-லும் கூறப்பட்டுள்ளது. அவர்கள் தொழுது, நோன்பு கொண்டு அதற்கு 'தண்டனையாக நரகம் பெற்றுகொள்வார்கள்' இறைவனின் "அனுமதிசான்றான" குர்ஆனின் கருத்தின்றி நம்பிக்கை கொள்ள முடியாது என யூனுஸ்:100-லும் கூறப்பட்டுள்ளது. ஒருவரின் செயல், சொல் எதுவாக இருப்பினும் அதை ஏற்று கொள்ள ஃபுர்ஹான் என்றகுர் ஆனின் ஒரு வசனமேனும் சாட்சியாக அமைய வேண்டும் என்பது உறுதியே. அன்னிசா: 174-175 இத்துடன் படிக்கவும்.

## அல்லாகுவினால் நம்பிக்கை கொள்வது

முன் பின் இல்லாத, சான்றோ, எடுத்துக்காட்டோ இல்லாத, ஏகாதிபதியும் சர்வாதியும் தன் விருப்பப்படி மட்டும் அனைத்தையும் ஆட்சி புரிபவனுமே அல்லாகு. எவருடைய தேவையும் எதிர்பார்க்காதவனும், அனைவரின் தேவைகளையும் சீர் செய்து கொடுப்பவனுமே. இணையோ, துணையோ இன்றிய ஒரே ஒருவன், அவனுக்கு குழந்தைகள் இல்லை. அவன் எவருடைய குழந்தையுமல்ல. கடவுள், ஆண்டவன், இறைவன், யஹோவா, பகவான் என்றெல்லாம் பல பெயர்களில் முன் வேதங்களில் அழைத்துள்ள அவன் அனைத்து உலகையும், அவற்றில் இருப்பவைகளையும் படைத்து பாதுகாக்கின்றஅனைத்தின் எஜமானன். ஒவ்வொன்றின் வாழ்வின் இருதியில் முறையாக திரும்ப அழைப்பதும் அவன்தான். குர் ஆனில் கூறப்பட்டுள்ள தொண்ணூற்றி ஒன்பது குணம் அமைந்த இறைவனின் திரு பெயர்களும், நபி கற்றுகொடுத்த ஹன்னான், மன்னான் ஆகிய இரண்டு திருபெயர்களும் சேர்ந்து அல்லாகுவிற்கு நூற்றி ஒன்று குணமான திருப்பெயர்களை குர் ஆனின் கருத்து தெரியப்படுத்துகின்றன. "அஸ்மா உல்குஸ்னா" (மிகச்சிறந்த பெயர்கள்) என்றபெயரில் அறிமுகப்படுத்திய பெயர்கள் வைத்து அவனிடம் வேண்டிகொள்ளவேண்டும். அது எந்த மொழியாகிலும் தவறில்லை. இறைவனுடன் அவன் படைத்தவற்றைசேர்த்து அவற்றின் பெயர்களை கூறி பிரார்த்தனை செய்பவர் பிசாசையே அழைக்கின்றவர் அவர். வணங்குபவர்களுக்கும், வணங்காதவர்களுக்கும் அருள் பொழிகின்ற நிகரில்லா அருளாளனுமாகிய அவன் வணங்குபவர்களுக்கு தனிப்பட்ட முறையில் அவன்-அவனிடம் செல்ல-அதாவது சொர்க்கத்திற்கு செல்வதற்கு ஒரேஒரு வழியும், பிசாசிடம் அதாவது நரகத்திற்கு செல்வதற்கு பல விதமான வழிகளும் புரிந்துகொள்ள உதவுகின்றகுர் ஆனின் கருத்தை சொர்க்கத்தில் வைத்தே கற்ப்பித்து மனிதனை சுதந்திரமாக பூமியில் விட்டவன். ஆத்மாவின் உணவும், உடையும், பார்வையுமான குர் ஆனின் கருத்தை பயன்படுத்தி நம்மை நாமே புரிந்து கொண்டு "வாழ்க்கையின் இலட்சியம் " தெரிந்து "நம்பிக்கையாளனான " இறைவனுக்கு தொண்டு செய்து வருபவர்கள் மட்டுமே இவ்வுலகிலும், மறு உலகிலும் வெற்றிகாண்பர். நன்மையும்,திமையும் புரியவைக்கின்றகுர் ஆனின் கருத்து கிடைத்த பின் அதை

பயன்படுத்தாமல் மறைத்து வைத்தும், மற்றவர்களுக்கு பயன்படுத்த உதவாதவர்களும் எவரோ அவரே காஃபிர் என்றும் அவர்கள் பிசாசின் தொண்டர்களாய் சேவை செய்பவரும், மறுமை நாளிள் தோல்வியடைந்தவருமாவர்.

இரண்டால் ஒரு வழி தேர்ந்தெடுக்க வேண்டிய உரிமை அருளாளனான இறைவன் மனிதர்களுக்கு வழங்கியிருக்கின்றான். அவனை ரஹ்மானாக (பொதுவாக விளங்குபவன்) ஏற்று கொண்ட நம்பிக்கையாளர்கள், இயற்கையை நிலையாக நிற்பதற்கு உதவுகின்றஎடை திராசாகவும் நம்பி ஒப்படைக்கப்பட்ட குர் ஆனின் கருத்தை உலகினர்களுக்கு வழங்கும் செயல்களில் முழுமனதோடும், உற்சாகத்தோடும் செயல்பட்டு இறைவனுக்கு உதவிபுரிந்துவருவர். மனித பிசாசுக்களான போலிநம்பிக்கையாளனும் அவர்களை முழுமனதாக ஏற்று இறைவனின் ஆட்சி அதிகாரத்தில் இணை வைத்து வாழும் குஃபாறுகளும் அல்லாகுவின் ஒளியை மறைத்து வைத்து பிசாசிற்கு உதவி புரிகின்றனர். ஸ்ஸஃப்:8-14 விளக்கம் பார்க்கவும். ஒட்டுமொத்தமாக கூறினால் மேற்படியாக 6236 வசனங்கள் வழங்குகின்றஇறைவனை உள்ளத்தால் பார்க்கும் பொழுதுதான் அவனிடம் நம்பிக்கை உருவாகும். இறைவனை தெரிந்து கொள்ளவேண்டும் என்றவாழ்க்கையின் இலட்சியம் கடைபிடிப்பவர்கள் மட்டுமே,அவர்கள் நடப்பதும், இருப்பதும், தூங்குவதும், அவர்களின் செயல்கள் யாவுமே “அல்லாஹ்” என்றஎண்ணத்தை உருவாக்கும் குர் ஆனின் கருத்தை வைத்தே முடியும். அத்தகையவர்களால் மட்டுமே இறைத்தொண்டர்களாக தவறொன்றும் புரியாமல் வாழமுடியும். ஆலி இம்ரான்: 190-191-ல் விளக்கம் பார்க்கவும். ஆண், பெண் எவராயிரிப்பினும் யார் நற்செயல்கள் புரிகின்றனரோ அன்றி நம்பிக்கையுடயவனுமாக இருப்பவன். அவ்வாறெனில் நாம் அத்தகையோருக்கு இவ்வுலகில் மிக தூய்மையான வாழ்க்கை வழங்குவோம், அத்துடன் அவர்களின் நற் செயல்களுக்கு ஏற்றவாறு மறுமை நாளில் மிகசிறந்ததை அவர்களின் ஊதியமாகவும் வழங்குவோம் என்று அன்னஹ்ல் : 97 ல் கூறியிருக்கிறது அன்னிசா : 123 124 விளக்கம் பார்க்கவும் .

குர்ஆனில் 99 வசனங்களில் கூறுகின்றபிசாசை புரிந்து கொண்டு அவன் வழியை விட்டு மாறி வாழ்க்கை இறைவனுக்காக மட்டுமே என்றநிலையில் உருவாக்க உதவுகின்றதே குர்ஆனின் கருத்து(சான்று). அத்தாரியாத் : 56 ல் மனிதர்களையும் ஜின்னு (அசூரர்) களையுயம் எனக்கு இபாதத் (வாழ்க்கை) செய்வதற்காகவே அன்றி நாம் படைக்கவில்லை. என கூறியிருக்கின்றது. வாழ்க்கை முற்றிலும் அவனுக்காக ஒதுக்க வேண்டும் . கீழ்படவது, வாழ்வது, சேவை செய்தல் என்றெல்லாம் இபாதத் என்றசொல்லிற்கு பொருளாகும். அல்லாஹ் என்றஎண்ணத்தில் செய்கின்றசெயல்கள் மட்டுமே இறைவனுக்காகவும், அல்லாஹ் என்ற எண்ணம் இல்லாத வாழ்க்கை அன்றியுள்ள எந்த செயலும் பிசாசிற்கு வேண்டிய செயலும் வாழ்க்கையுமாகும். இறைவனை எஜமானனாக ஏற்று வாழக்கையை அவனுக்காக அற்பணிக்காமல், அவனை வணங்குவதால் எந்த பயனுமில்லை. . அச்செயலுக்கு தண்டனையாக நரகம் பரிசாக பெறுவர். பிசாசிற்கு சேவை செய்து கொண்டு இறைவனின் வசனத்துடன் பட்டிமன்றம் நடத்தி கொண்டிருப்பவர்கள்தான் முஜாயிதுகள் மிகப்பெரிய முஸ்ரிக்குகள். (இபாத்) என்றசொல்லிற்கு வணங்கல் என்றபொருள் இல்லை வணங்குதலுக்கு மனாசிக் நுஸ்க் என்றகருத்தேயுள்ளது பகர : 128 அன்ஆம் :162 விளக்கம் பார்க்கவும்.

மலக்குகளினால் நம்பிக்கை கொள்வது:

ஒளியால் தனிப்பட்ட முறையில் படைத்தவர்கள் தான் மலக்குகள் (தேவர்கள்) .

ஆணவமேதுமின்றி அனைத்தும் படைத்த ஆண்டவனின் ஆணைகள் முழுமனதாக ஏற்று கொள்பவர். அவனுக்காக எப்பொழுதும் அவன் கட்டளைகளை காதோர்த்திருப்பவர். அவ்வாறு செயல்படுவதற்காக படைக்கப்பட்டவர்கள் தான் அவர்கள். இயற்கையின் ஆட்சி இறைவன் மலக்குகள் மூலமாகவே நடத்தி வருகின்றதால் முன் இறைவேதங்களில் தேவர்கள் மாலாகமார் போன்றபெயர்களால் அழைத்தது இவர்களையே . மனிதர்களுக்கு மலக்குகளுடன் உள்ள தொடர் என்ன மலக்குகள் குணம் என்ன, தண்டனை வழங்கும் மலக்குகள் குணம் என்ன, யாருக்காக அவர்கள் இறைவனிடம் பாவமன்னிப்பு கேட்பார்கள், யாரை சாபம் கூறுவார், ஜின்களும் மலக்குகளும் .இவர்களின் இடையில் என்ன வித்தியாசம் போன்றவற்றையெல்லாம் குர்ஆனின் கருத்தில் இருந்து தெரிந்து புரிந்து கொள்ளும் பொழுதுதான் மலக்குகள் மீது நம்பிக்கை அடைய முடியும் . குர் ஆனில் 99 இடங்களில் மலக்குகளை தெரியப்படுத்தியுள்ளது. ரஅத் :13, நஹ்ல் : 2, கஃப் : 82, மர்யம் : 64 விளக்கம் பார்க்கவும்.

மலக்குகளில் இருந்து வித்தியாசமாக நெருப்பில் இருந்து உருவாக்கியவர் தான் ஜின்னுகள் (அசூரர்கள்). ஜின்னுகள் மனிதனைப் போல ஏற்கவும், மறுக்கவும் உரிமை வழங்கப்பட்டவர்களே. அனைத்து மனிதர்களின் ஆத்மாவின் நண்பனாக உரு சாத்தானின் வாரிசை நல்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவருடனும் இருக்கும் அந்த ஜின் தோழனை குர்ஆனின் கருத்தின்படி நம்பிக்கையாளாராக மாற்றவேண்டும் என்றால் தான் ஒருவருக்கு நம்பிக்கையாளராக வாழவும், சொர்க்கத்தில் திரும்பி செல்லவும் முடியும். அன்னாஸ் : 46 ல் கூறிய ரகசியமாக தீய எண்ணங்கள் ஊட்டுகின்றஜின் தோழனை நம்பிக்கையாளராக மாற்றாவிட்டால் மெய்யை பொய்யாகவும், பொய்யை மெய்யாகவும் காண்பிப்பான் . அவ்வாறு குர்ஆனின் கருத்தை பொய்யாக தோன்றவைப்பான் . அவ்வாறு நரகத்தில் செல்லும் ஆயிரத்தில் தொள்ளாயிரத்தி தொன்னூற்றி ஒன்பதின் வழிகளை மிகசிறந்ததாக தென்படவைத்து கெடுத்து விடுவான். மனிதனை ஒரு கம்யூட்டராக எண்ணுவோம் எனில் ஜின்னு தோழனை வய்ரசாகவும் , குர்ஆனின் கருத்தை ஆன்டிவைரஸ் புரோகிராம் என எண்ணி இவற்றையெல்லாம் புரிந்து கொள்ள முடியும். காஃப் : 27 30 விளக்கம் பார்க்கவும்.

இறைநூல்களால் நம்பிக்கை கொள்வது:

குர்ஆனின் அனைத்து கருத்துகளையும் புரிந்து கொள்ளும் பொழுது மட்டுமே அனைத்து இறைநூல்களில் நம்பிக்கை உருவாகும். இறைவனிடமிருந்து வெவ்வேறு கால அளவில் வழங்கிய இறைநூல் ஒவ்வொரு கால அளவில் அதற்கேற்ப சட்டத்திட்டத்துடன் தான் வழங்கியது. அவைகளை நிஜப்படுத்துவதுடன், பாதுகாப்பாகவும் இருக்கின்றகுர்ஆனின் கருத்து இறுதி நாள் வரையும் உள்ள அனைத்து மனிதர்களுக்கும் அனைத்து விவரங்களும் கற்பித்துள்ளதும், சிரஞ்சிவியும், மெஞ்ஞான மிக்கதும், எந்த மாறுதலும் இடையூறாகாமல் என்றென்றும் எழுச்சியுடன் நிலை நிற்கும் நூல் தான் குர்ஆன். நூலை கற்பித்ததால் படைப்புகளை விட மிகசிறந்தவனாகினான். இறைநூலினால் ஆணவத்துடனும், பெருமையடனும், எவரையும் எதிர்பார்க்காமல் பூமியில் எங்கும் எவரையும் அஞ்சாமல் தலை உயர்ந்து வாழ வேண்டும் என ஆலி இம்றான்:79 ல் நீங்கள், இறைநூலால் கற்ப்பிப்பது போலவும், நீங்கள், குழந்தைகளையும் மற்றவர்களையும் கற்ப்பிப்பது போலவும் ரப்பானியர்களாக மாறுவின் என கூறியதன் நோக்கவும் அதுவே. இயற்கையை அழிக்கின்றஅனைத்து தீய பிசாசின் செயல்களில் இருந்து விலக்கி கொள்ளவும், குர்ஆனின் கருத்தை மறைத்து வைத்து வாழ்பவர்களுக்கு

இவ்வுலகில் ஏளனவும், மறுமைநாளில் கடுமையாக தண்டனையும் வழங்குமென வாக்களிக்கப்பட்டுள்ளது. அவர்கள் (அந்நாளில்) மறுமைநாளில் குருடர்களாகவும்,மூடர்களாகவும் தன்னுடைய முகங்களால் நிலத்தின் மீது இழுத்து செல்லப்படுவர் நரகத்திற்கு. அவர்களே மிகப்பெரிய வழிதவறிய குற்றவாளிகள் என இஸ்ரா :97-98,ஃபுர்கான்;34 என்றவசனங்களில் கூறப்பட்டிருக்கின்றது. இறைவனை அந்நூர்:35-ல் ஒளி(நூர்) என்றும், ஹஸ்ர்:23-ல் பாதுகாக்கின்றவன்(முஹைமின்) என்றும் யூனூஸ்:61-ல் சட்சி(ஷாஹித்) என்றும் கூறியிருப்பின், குர் ஆனின் கருத்தை அஃராஃப்:157, அஷ்ஷுரா 52,தகாபுன்:8போன்றஎன்றவசனங்களில் ஒளி(நூர்) என்றும், மாயிதா : 48-ல் பாதுகாக்கின்றவன் (முஹைமின்), கூத் : 17-ல் சாட்சி (ஷாஹித்) என்றும் கூறப்பட்டுள்ளது. அன்ஆம்:19-ல் அல்லாகுவையும், குர் ஆனின் கருத்தையும் மிக சிறந்த சாட்சி என கூறப்பட்டுள்ளது. அவ்வாறேஉண்மை (ஹக்),வெற்றி பெறுபவன் (அசீஸ்) மெஞ்ஞானமிக்கவன்(ஹக்கீம்) கண்ணியத்திற்குரியவன் (மஜீத்) பெருமையானவன்(அளீம்) சங்கைமிக்கவன்(கரீம்) போன்றஇறைவனின் பெயர்கள் அனைத்தும் குர் ஆனின் கருத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. அஃராஃப்:143-ல் இறைவன் மலையின் மீது காட்சியளித்ததும் அதை தாங்க முடியாமல் மலைகள் சிதறிவிட்டன என்று கூறியிருந்தால், ஹஸ்ர்:21-ல் குர் ஆனின் கருத்தை ஒரு மலையின் மீது இறக்கியிருந்தால் அதை ஏற்று கொள்ள தயங்கி தூளாக சிதறி விடும் காட்சியை நீ பார்கலாம் என கூறப்பட்டிருக்கின்றது. ஹஜ்:78-ல் நீங்கள் இறைவனை உறுதியாக பிடியுங்கள் என கூறியது ஆஇம்ரான் : 103-ல் கூறிய அல்லாகுவின் பாசமாகிய குர் ஆனின் கருத்தை உறுதியாக பிடிக்கவும் என்பதே. இத்தகவல்களின் அடிப்படையில் இருந்து அல்லாகுவும், குர் ஆனின் கருத்தும் ஒன்றேஎன்பது மிக உறுதியாக எண்ணலாம். இறைவனுக்கு அவன் படைத்தவற்றின் மேலுள்ள சிறப்புபோலவே குர்ஆனின் கருத்திற்கு இறைநூல்களின் மேலுள்ளதே என நபியும் கற்பித்திருக்கின்றான்.

உறுதியாக உங்களுக்கு நாம் ஓர் இறைநூல் வழங்கினோம். அதில் தன்னை தாமே தெரிந்து கொள்ளும்படியும் உருவாக்கினோம். ஆனால் ஏன் சிந்திக்கவில்லை என அம்பியா:10-ல் இறைவன் கேட்கின்றான்.யார் தன்னை தாமே தெரிந்து கொண்டது.அவன் தன் இறைவனை தெரிந்துகொண்டான் என நபி கற்பித்தார். குர் ஆனின் கருத்தின் படி மட்டுமே நம்மையும், எஜமானனான இறைவனையும் தெரிந்து கொள்ள முடியும். உங்களில்மிக சிறந்தவன் குர் ஆனின் கருத்து படிப்பவரும்(பின்பற்றியவரும்) மற்றவர்களுக்கு கற்பித்து கொடுப்பவரும் (வழங்குபவர்)மட்டுமே என்றும், குர்ஆனின் எச்சரிக்கை விடுத்துள்ள தீயவை செய்பவர் குர் ஆனில் நம்பிக்கை கொள்ளவில்லை என்றும் நபி கற்பித்தார் .குர் ஆனின் தீய செயல்களை விட்டு விலகி அதன் கருத்தை புரிதல் மிக முக்கியமானதாகும் நபி கற்பித்து இறுதி கட்டங்களில் குர்ஆன் உயர்த்தபடும். குர்ஆனில் அதன் வரைகளும், புள்ளிகளும் அன்றி மற்றொன்றும் இருக்காது. இஸ்லாமில் அதன் பெயர் மட்டுமே இருக்கும். அவர்களின் பள்ளிகள் மிகப்பெரிய அரண்மனையாகவும், மக்கள் பெருப்பம் அதிகமாகவும் இருக்கும். ஆனால் நேர் வழியான குர் ஆனின் கருத்து இருக்காது. அந்நாளில் அவர்களின் ஆலீம்கள் வானிற்கு கீழ் இருக்கும் மிக மோசமான உயிரினமாகும் நம்பிக்கையாளர்களின் இமாமும் கூட இல்லாத நிலையில், எழுதவோ, படிக்கவோ தெரியாத நம்பிக்கையாளர் காட்டிற்கு சென்று ஏதேனும் மரத்தின் வேரை கடித்து பிடித்து மரணம் வரை நிலை கொள்ள வேண்டும் என குதைஃபத்துல் யமானியின்

கேள்விகளுக்கு பதில் அளித்து இறுதி நாள் வரை உள்ள மனிதர்களை முகம்மத் நபி கற்பித்திருககின்றார். ஆனால் எழுதவும் படிக்கவும் தெரிந்த நம்பிக்கையாளர், குர் ஆனின் கருத்தை மிக உறுதியாக கடித்து நிலை கொள்ள வேண்டம் என கூறியுள்ளார். பகர : 285, அன்னிசா:136, யூனுஸ்:87 விளக்கம் பார்க்கவும்.

இறைதூதர்களால் நம்பிக்கை கொள்வது:

இறைதூதர்கள் அனைவரும் மனிதர்களில் இருந்து இறைவன் ஏற்று கொண்ட வாழ்கை வாழ்ந்து காட்ட அவனால் அனுப்பிவைக்கப்பட்டவரும், அவன் ஏற்றஒரே ஒரு இல்லாமிக வாழ்க்கை வாழ்ந்து காட்டியவருமே. பகர : 136, ஆலு இம்ரான்:19,85 விளக்கம் பார்க்கவும். பூமியில் தர்மம் நிலைத்து விடும் பொழுது மறுபடியும் அதை செழுப்புறசெய்ய மனிதர்களில் இருந்து தான் இறைவன் தேர்ந்தெடுக்கின்றஅவதாரம் தான் அவர். ஒரு இலட்சத்தி இருபத்தி நான்காயிரும் நபிமார் வந்த போதிலும் அவர்களில் முன்னூற்றி பதிமூன்றுபேர் மட்டுமே இறைதூதர்கள் ஆவார். நூஹ்நபி முதல் நபியும் முகம்மத் நபி இறுதி தூதருமாவார். நபியோர்களிலும், இறைதூதர்களில் அமைந்த இருபத்தி ஐந்து நபர்களை மட்டுமே திரு குர்ஆன் பெயர் கூறி அறிமுகப்படுத்துகின்றது. இறைதூதர்கள் அனைவருக்கும் இறைநூல் வழங்கப்பட்டதாக ஹதீத்:25-ல் கூறப்பட்டுள்ளது. ஆனால் இறைதூதர்களுக்கு வழங்கிய இறைநூல்(வேதம்) வாழ்ந்து காட்டியவர்தான் நபிமார்கள். இறைதூதர்கள் வந்தது அனைத்து மனித சமூகத்திற்காகவேயானாலும், நபிமார் வந்தது ஒவ்வொருகுலத்திற்கு மட்டுமே என்பது குறிப்பிடதக்கது.நபிமார்களில் சிலர் கொலைக்கு ஆளாக்கினார் என்றாலும் பாதுகாப்புமிக்க இறைநூல் வழங்கியதால் இறைதூதர்கள் எவரும் கொலைக்கு ஆளாகவில்லை. குர்ஆனின் கருத்தில் இருந்து அவர்களின் வாழ்க்கையை புரிந்து அவர்களை முழுமனதாக பின்தொடர்ந்து அவர்களை சத்தியபடுத்தும் பொழுதுதான் இறைதூதர்களில் நம்பிக்கை உருவாகும்.

நூஹ், இப்ராஹிம், மூசா, ஈசா, முகம்மத் எனும் ஐந்து பேர் உலூல் அஸ்முகள். துணிச்சல் மிகுந்தவர் என்றபெயரில் அறிமுகமானவர். இறைதூதர்களில் முக்கியத்துவம் வாய்ந்த இவர்கள் மூலமே தீனின் செயல்களாக பயிற்சிகளான சரிஅத்துகள் மாறுதலுக்கு ஆளாகின . ஆனால் ஈசா இவற்றில் இருந்து மாறுபட்டிருந்தார். ஏனெனில் அன்று இஸ்ராயில் இனத்தவருக்காகவே ஈசா நியமிக்கப்பட்டிருந்தார். அன்று ஈசாக்கு தனிபட்ட முறையில் சரிஅத் கிடையாது. மூசாவின் சரிஅத்தை முகம்மது நபியின் காலயளவில்தான் மாற்றியமைக்கப்பட்டது. இனி இறுதி நாளின் முன் அறிவிப்பாக ஈசா மறுபடியும் வரும் பொழுதும் ஈசாவிற்கு சரிஅத் இருக்காது. ஆனால் முதல் மனிதனாகிய ஆதமில் உருவாகி முகம்மது நபியின் மூலமாக முழுமையாக்கிய இஸ்லாமின் உலக வெற்றி நடைபெறுவது ஈசாவினால் தான்.

அனைத்து இறைநூல்களின் மக்களின் கொள்கைகளும் குர்ஆனில் அமைந்துள்ளதால் அனைத்து நபிமார்கள், இறைதூதர்கள் முதலானவர்களின் வாழ்க்கையும் இறுதி இறைதூதரான முகம்மது நபியில் அடங்கியிருக்கின்றது. அஹ்சாப்:40, பய்யின்:3 சேர்த்து படிக்கவும்.பொறுப்பேற்றநாள் முதல் இறுதி நாள் வரையிலும் வாழ்கின்றஅனைத்து மனிதர்களுக்காகவும் நபியை அனுப்பியுள்ளோம். என அஃராப் : 158, அம்பியா : 107, சபஅ : 28 போன்றவசனங்களில் கூறப்பட்டுள்ளது. குர்ஆன் வழங்கப்பட்டவர்களுக்கு முகம்மத் நபியை தமது குழந்தைகளை தெரிந்துகொள்வதை விட மிக நன்றாக தெரியும் என பகர :146, அன்ஆம்:20 என்றவசனங்களில் கூறப்பட்டுள்ளது. நபியின் வாழ்க்கையை குர்ஆனின் கருத்தில்

இருந்து. புரிந்து பிறருக்கு சாட்சியாக வாழவேண்டும். என பகர:143, ஹஜ்ஜ்:78 என்றவசனங்களில் முஸ்லீம்களோடு கட்டளையிடப்பட்டுள்ளது. ஆனால் குர்ஆனின் கருத்தை மறைத்து இறைதூதர்களின் பெயர்சூடி, ஆடையணிந்து, பிறமனிதர்களின் முன்னால் இறைதூதர்களை மிக மோசமானவர்களாக எண்ணுமாறு தினம் கொன்று குவித்து கொண்டிருக்கின்றனர் இன்றைய முகம்மது நபியின் பின்னோர்கள் என கூறுபவர் அவ்வாறு அவர்கள் முப்பதாவது போலி பிரசாரர்களான மசிகுதஜ்ஜால் என்பவனை வரவழைக்க எதிர் பார்த்து கொண்டிருக்கின்றனர். புர்கான்:18 ல் கூறிய இந்த அழிந்து போகும் கூட்டர்களுக்கு எதிராகவே ஃபுர்கான்:30 மூலம் மறுமைநாளில் முகத் நபி குறைகூறப்போகிறார். உலகில் எங்குமே குர்ஆனின் கருத்துப்படி முகம்மது நபியின் வாழ்க்கை வாழும் ஒரு நம்பிக்கையாளரும் இல்லாத நிலை உருவாகும்பொழுதுதான் அந்தி முகம்மத் முகம்மத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் மசிகு தஜ்ஜால் தென்படுவான். அன்ஃபால் :33 ன் விளக்கம் பார்க்கவும் (இந்துமதத்தினர் கலியுகத்தின் ஆரம்பத்தில் வரும் என்று எதிர்பார்க்கின்றகல்க்கி யின் தோன்றல் முகம்மது நபியின் வரவினால் முழுமையாகிறது. இனி கலியுகம் என்று இறுதியில் வருமென எதிர்பார்க்கும் அதர்ம்மமூர்த்தியென்ற கலிதான் தென்படப்போகிறது)

<u>மறுமை நாளில் நம்பிக்கை கொள்வது:</u>

குர்ஆனில் மூன்றில் ஒருபங்கு சொற்கள், மனிதனின் இவ்வுலக வாழக்கையில் அவன் செய்த அனைத்து செயல்களையும் மதிப்பிட்டு ஒரு தீர்ப்புகள் உண்டு என உறுதிப்படுத்துவது தான். அவை மனித வாழ்க்கையின் நான்காம்நிலையான பதினய்ந்து வயதிற்கு பிறகு இறக்கும் வரையுள்ள ஒவ்வொரு நிமிடத்தையும் பற்றி ஆண், பெண் வெவ்வேறாக, தனிமையாக தன்னுடைய எஜமானின் முன் அந்நாளில் பதில் அளிக்க வேண்டும் . அந்த எண்ணத்தில் இங்கு நிலை கொள்பவர்தான் மறுமை நாளினால் நம்பிக்கை கொண்டவர். அந்த எண்ணம் இல்லாமல் இங்கு வாழ்பவர்களுக்கு அவர்களின் கேள்விகளும், பார்வைகளும் , தோல்களும், கை, கால், போன்றஅனைத்தும் மட்டுமின்றி இந்த பூமியும் அவர்களுக்குஎதிராக சாட்சி கூறும் என இஸ்ராஅ : 36, யாசின்: 65, ஃபுசிலத் : 19, 24, சல்சல:4-5, போன்றவசனங்களின் எல்லாம் கூறப்பட்டுள்ளது. வெற்றியடைகின்றஇறையச்சம் உடையோர்கள் இவ்வுலகில் வைத்தே மறுமை நாளில் மிக உறுதிபூண்டவர் என பகர:4லும் கூறியுள்ளது மறுமை நாளில் நம்பிக்கையில்லாத பைத்தியக்காரர்கள் அன்று அவர்களின் எஜமானன் முன் தலைகுனிந்தவராய் நிற்கும்பொழுது எங்களின் இறைவா நாங்கள் மிக தெளிமையாக பார்த்து விட்டோம் நாங்கள் நரகத்தின் அலைமுழக்கம் கேட்டிருக்கின்றோம். எங்களை நற்செயல் செய்வதற்காக மீண்டும் ஒருமுறைவிண்ணகத்திற்கு திருப்பி அனுப்ப வேண்டும். மிக உறுதியாக எங்களுக்கு விளங்கிவிட்டதென்று கூறி கதறுகின்றகாட்சி சஜத : 12 ல் எச்சரிக்கை விடுத்துள்ளது . மிக உறுதியளிக்கின்றகுர்ஆனின் கருத்து இங்கிருந்து பயன்படுத்தி கொள்ளாதவர்கள் கண்களுக்கு உறுதியாகும் வரை சுட்டெரிக்கின்றநரகம் பார்க்குவார்கள் என்று அத்தகாசுர் :6 7 ல் முன்னெச்சரிக்கை வழங்கியிருக்கின்றது. ஃபாத்திஹா : 3 ன் விளக்கம் பார்க்கவும்.

குர்ஆனின் கருத்துப்படி தீர்ப்பு கூறாததினால் இவ்வுலக வாழ்வில் எந்த ஒரு நிகழ்ச்சியினாலும் முழுமையாக நீதி நடத்த இயலாது. எனவே முழுமையாகவும் நீதி நடத்துகின்றஒரு விதி நாள் மனிதனின் ஆறாம் நிலையாக ஒரு தினம் நிச்சயிக்கப்பட்டுள்ளது. அன்று குர்ஆனின் விளக்கம் வைத்து விதி வழங்கப்படும்.என சுமர் :69, 75 ல் கூறப்பட்டுள்ளது . நீதி என்றஇடைதிராசல் சரிபார்க்கின்றவிதி நாளில் தவறுகள் திருத்த முடியாது என எண்ணி,

தண்டனைக்கு ஆளாகிவிடுமோ என்றசிந்தனையால் எந்த ஒரு செயலும் மனதினாலும், வார்த்தையாலும், செயலினாலும் தீயவையில் நின்று அகன்று நிற்பவர் தான் உண்மையான இறையச்சம் உடையவர். (கவனமாக) நீதியின் திரசான குர்ஆனின் விளக்கம் பயன்படுத்தி அவர்களின் செயல்களை இங்கிருந்தே சீர்படுத்தி பார்ப்பார்கள்; நஹ்ல்:64 ஹஸ்ர்:18 விளக்கம் பார்க்கவும் ஆனால் இறைவனை பொதுவாக விளங்குபவன் என போலி நம்பிக்கையாளன் மக்கள் பிரிவினை ஏற்படுத்திய செய்திகளில் அல்லாகு தீர்ப்பு வழங்குவான் என்றல்லவா கூறியுள்ளான் என கூறி அவர்களின் தீர்ப்பை மறுமை நாளிற்காக ஒதுக்கி வைப்பார்.

நன்மை தீமை இறைவனால் என்ற நம்பிக்கை:

அனைத்து ஆத்மாவிற்க்கும் நன்மையும் தீமையும் வழங்கப்பட்டுள்ளது. நன்மை இறைவனிடமிருந்தும், தீமை பிசாசில் இருந்தும். அல்லாஹ். என்றஎண்ணத்தில் வாழும் பொழுது நன்மை மட்டுமே உருவாகும். அல்லாகுவை மறந்த நிலையில் மனிதன் தனது ஜின் தோழனான பிசாசின் வலையில் அச்சமயம் தீமை ஏற்ப்படும்.குர் ஆனின் கருத்தின் படி ஹஸ்ர்:23-ல் கூறிய நம்பிக்கையாளன் இறைவனை இதயத்தில் வைத்திருப்பான். அவருக்கு பிசாசிலிருந்து எந்த தீமையோ, ஆபத்தோ விபத்தோ ஏற்படாது.அன்ஃபால்:24-ன் வாயிலாக நம்பிக்கையாளனின் இதயத்தில் அல்லாகு மட்டுமே தான் இருப்பான். ஆனால் குர் ஆனின் கருத்தால் ஜின் தோழனை நம்பிக்கையாளனாக மாற்றாத மறுப்போர்கள் இதயத்தில் பிசாசசுதான் குடியிருப்பது. அவ்வாறு அத்தகையோருடமிருந்து தீமை மட்டுமே தென்படும். அவர்கள் செயல்கள் யாவும் பாழாகிவிடும் என கஃப்:103-105, புர்கான்:21-23, முகமது:8-9, போன்ற வசனங்களில் எல்லாம் கூறியிருக்கின்றது. அனைத்தின் மீது உள்ள கட்டுபாடு இறைவன் கைவசம் என்று இருக்க எந்த ஒரு படைப்பிலிருந்தும் எந்த தொந்தரவுகளும் அவன் அனுமதி இன்றி எவருக்கம் நிகழாது. தீமை புரியும் அதிகாரிகள்,திருடர்கள், கொள்ளைகாரர்கள் போன்றமனிதர்களிருந்தோ, பேய் நாய், பாம்பு, காட்டு மிருகம், வியாதிபரப்பும்கிருமிகள், போன்ற உயிரினங்களிலிருந்தோ, துப்பாக்கி, வெடிகுண்டு, அணு ஆயுதம், விஷம் போன்றஉயிரழிக்கும் பொருள்களிலிருந்தோ, விபத்து, இடி, மின்னல், புயல்காற்று, நீர் கொந்தளிப்பு, நிலநடுக்கம் போன்ற இயற்கையின் செயல்களிலிருந்தோ இறைவன் மீது தம்மை ஒப்படைக்கின்ற, குர் ஆனின் கருத்தை கவசமாக பயன்படுத்துகின்ற நம்பிக்கையாளனுக்கு, எந்ததீமையும் ஏற்படாது.ஹுத்:56, லுக்குமான்:22, அலக்:15-16 விளக்கம் பார்க்கவும்.

ஃபிர்அவுன் ஹாமன், காரூன் போன்ற தீயவர்களின் பின்தலைமுறையான இன்றைய போலி நம்பிக்கையாளன், ஒரு நன்மை கிடைத்தால் அது அவர்களின் திறமையினால் என்று எண்ணி பெருமை நடித்து ஆணவம் கொள்வர் ஆனால் இறைநம்பிக்கையாளர் திறமையும் புகழும் இறைவனிடம் இருந்தே என ஒத்துக்கொள்வர் . அத்தகையோர் அவ்வேளையில் மிக எளிமை வாய்ந்தவராக மாறுவர் . அன்னிசா : 78-79 விளக்கம் பார்க்கவும், போலிநம்பிக்கையாளனை ஏதாவது ஆபத்து விபத்து ஏற்பட்டால் மற்றவைகளை பழிகூறி நடப்பார்கள் இறைநம்பிக்கையுடையோர் தான் செய்த தவறின் காரணமாக எண்ணி இறைவனிடம் குர்ஆனின் கருத்திற்கு அவர் திரும்பி விடுவார். வானவும், பூமியும், அவற்றின் இடையிலும், மனிதர் உட்பட அனைத்து நிகழ்சிகளும் இறைவன் முன்பாக ஏற்படுத்தியதன இறைநூலில் இருப்பதை எண்ணுவர் என ஹதித்: 22 ல் கூறப்பட்டுள்ளது . இறைநம்பிக்கையாளர் முக்கால் ஞானமாகிய குர்ஆனின் கருத்தை பயன்படுத்தி அவர்களின் விதி இங்கு இருந்து

திருத்திக்கொள்ள முயல்வர். ஹிஜ்ர் : 99, அல்ஹாஃ:51 விளக்கம் பார்க்கவும். அதனால் தான் பிரார்த்தனையின்றி விதி திருத்தப்பட இயலாது என நபி கூறியதன் பொருளும்.

உயிருடன் இருப்பவனை எச்சரிக்கவும், காஃபிருகளின் மீது நியாயம் நடைமுறைசெய்வதற்காகவுமே குர்ஆன் இறக்கியுள்ளோம் என யாசின் :70 ல் கூறப்பட்டுள்ளது. நபியின் காலத்தில் உள்ள இறைமறுப்போருக்கு நூல் ஆக்கப்பட்ட குர் ஆன் கிடைக்கவில்லை . அவர்கள் முத்தஸ்சிர் : 49-51 ல் கூறியவாறு சிங்கத்தின் கதறல் கேட்டு பயந்து ஓடுகின்றகாட்டுகழுதைகளைப்போல் குர்ஆனின் கருத்தில் இருந்து வெருண்டு விரைந்து ஓடுகின்றனர். ஆனால் கழுதைகளை போல சுமைதாங்கியான இன்றைய குர்ஆன் ஏற்றவர் அவ்வாறேவெருண்டு ஓடுவதுடன் மட்டுமின்றி உயிருள்ளவர்களுக்கு எச்சரிக்கை விடுவதற்கு பதிலாக இறந்தவர்களுக்கு கற்று கொடுத்து கொண்டிருக்கின்றனர். அர்ரூம் : 52 53 ல் உறுதியாக நீ இறந்தவர்களையும், அழைக்கும்பொழுது அதை ஏற்றுக்கொள்ளாமல் திரும்பி செல்கின்றகாது கேளாதவரையும், வழிதவறி நடக்கின்றபார்வையற்றகுருடர்களையும் செவியுறமாட்டார்கள் என்றும், மீறி நம் வசனங்களில் நம்பிக்கை உடையவர்களும் நமக்கு அனைத்தும் அற்பணித்து வாழ்பவரை மட்டுமே புரிய வைக்க முடியும் எனகூறப்பட்டுள்ளது . கருத்தில்லாமல் தொழுகை கடைபிடித்தாலும் குர் ஆன் வாசித்தாலும் வில்லில் இருந்து அம்பு விரைவாக வெளியேறுவததைபோல் தீனில் இருந்து வேகமாக சென்றுவிடுவர். அவர்கள் பார்த்த, கேட்ட, படித்தகுர்ஆன் அவர்களுக்கு எதிராக சாட்சி அளிக்கும், எதிராக உரையாடும் என நபி கூறியதும் அவர்கள் பொருட்படுத்தவில்லை அன்னிசா : 43, அன்ஆம்: 36 விளக்கம் பார்க்கவும்.

யார் குர் ஆன் கூறும் காஃபிருகள்?

(இறைமறுப்போர்) யார். இறைவனிடம் இருந்து குர் ஆனின் கருத்து வெளிபட்ட பிறகு அதன் அடிப்படையில் நம்பிக்கை கொள்ளாமலும், வாழ்க்கையை இறைவனுக்கு அற்பணிக்காமலும் அதை மறைத்து வைத்து பொய்யுரைத்து தன் விருப்பப்படி வாழ்பவர் இறைநூலின் அடிப்படையில் காஃபிருக்கள் என்று கூறுவது . (அவர்கள் எந்த நாட்டை சேர்ந்தாலும் எநத மத இனமாகியிருப்பினும், எந்த ஆடை அணிந்தாலும் எந்த மொழி பேசுபவரான முஸ்லிமாக இருப்பினும்) காஃபிர் என்றசொல்லின் பொருள் மறுப்பவன் என்பதாகும். குர்ஆனின் கருத்து தென்பட்ட பிறகு அவ்வாறேஇறைவனிடம் நம்பிக்கை கொள்ள வேண்டிய முறையில் நம்பிக்கை கொள்ளாதவர்கள் குர்ஆன் ஏற்றுக்கொண்டு நபி மொழி ஏற்றுக்கொள்ளாதவர், இறைதூதர்களில் சிலரை ஏற்றுக்கொண்டு மற்று சிலரை புறக்கணித்தவர், குர்ஆனின் வசனம் சிலவற்றைஏற்று சிலவற்றைஏற்றுக்கொள்ளாதவர், மக்காவில் வழங்கிய வசனங்கள் ஏற்பவர் மதினாவில் வழங்கியதில் புறக்கணிக்கின்றவர். அதாவது குர்ஆனின் அனைத்து கருத்தையும் சொர்க்கத்திற்கு செல்லும் பயணச்சீட்டாக (தத்கிர) பயன்படுத்தாத ஆட்கள் தான் உண்மையான மறுப்பாளர்கள். என்றும் அத்தகைய காஃபிருகளுக்கு மிக கடுமையான தண்டனை ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றது என அன்னிசா : 150 -151 ல. கூறப்பட்டுள்ளது.

குர்ஆன் வசனங்களுடன் பகைவைத்து இந்த குர்ஆன் நீங்கள் கேட்க்கக்கூடாது, நீங்கள் கூச்சல் எழுப்பவேண்டும் அவ்வாறாகின் உங்களுக்கு வெற்றி பெறமுடியும், என்றுகூறி பாமரமக்களை குர்ஆனின் கருத்தில் இருந்து அகற்றி விடுகின்றஅல்லாகுவிற்கும், நம்பிக்கையாளருக்கும் பகைவர்களான போலிநம்பிக்கையாளர்களான தலைவர்கள்தான்

ஃபுசிலத் : 26 28 ல் கூறிய காஃபிருக்கள் என்றால் அவர்களை கண்மூடித்தனமாக பின்தொடர்கின்ற பாமர முஸ்லீம்கள் தான் 29 ல் கூறிய காஃபிருக்கள். குர்ஆன் வசனம் தென்பட்டும் அவையை புறகணித்து, முற்றிலும் உணர்ந்த மாமேதை என்றஎண்ணத்தில் ஆணவமாக இருப்பவர் நாங்கள் காஃபிருகள்தான் என்னு தமக்கு மாறாக சாட்சி கூறி உயிர்விடுவர் என்று அராஃப்:37லும், மறுமை நாளில் அவ்வாறேசாட்சியளிப்பார். அன்ஆம்: 130 லும் கூறப்பட்டுள்ளது. இவ்விரு பிரிவினரும் உயிர் விடும் வேளை, அல்லாகு அவர்களுடன்-அல்ல- உறுதியாக உனக்கு எனது வசனங்கள் வந்து சேர்ந்து. அப்பொழுது நீ அதை புறக்கணித்தாய். நீ ஆணவமும் அடைந்தாய். நீ காஃபிருக்களில் சேர்ந்தவனே என கூறப்படுமென சுமர்: 59 ல் கூறப்பட்டுள்ளது . இவர்களில் அனைத்தும் கற்றஞானிகள் என்று ஆணவம் கொண்டிருந்த போலி நம்பிக்கையாளன் அந்நிசா 145 ன் படி விசாரணையின்றி நரகத்தின் இறுதி நிலையில் செல்வார். என்றால் குர்ஆனின் கருத்தை புறக்கணித்த காஃபிருக்கள் சுமர் 71 ன் படி விசாரணைக்கு பிறகு கூட்டம் கூட்டமாக நரகத்திற்கு அனுப்பப்படும். குர்ஆனின் கருத்தோடு சேர இயலாத இவ்வுலகில் கண்ணிற்கு மூடி விழுந்தவர்களுக்கும், கருத்தை புரிந்து கொள்ள தயாராகாதவரும் காஃபிருகளென்று கஃப்:100 -101 லும் கூறப்பட்டுள்ளது. அத்தகையோர் மறுமை நாளில் குருடர்களாக உயிர்ப்பிப்பார்கள். என்று த்தாக:124-127லும் கூறப்பட்டுள்ளது. முல்க்:611 சேர்த்து படிக்கவும். அல்லாகுவின் கடிதமாகிய குர்ஆனின் கருத்தை உலகில் உள்ள அனைவருக்கும் வழங்காமல் மறைத்து வைக்கின்றஇனத்தவரை உறுதியாக அல்லாகு நேர் வழியில் நடத்தமாட்டான் என்றகருத்தோடுதான் மாயித:67 முடிவடைகிறது . குர்ஆனின் கருத்தில் இறைவனை மறைத்து பிசாசிற்கு பணிவிடை செய்து கொண்டிருக்கின்றகாஃபிருகளோடு உங்களுக்கு உங்களுடைய வாழ்க்கை வழி. எனக்கு உண்மையான வாழ்க்கை வழியும் என அறிவிக்கவும் அத்துடன் அத்தகையோரிடம் இருந்து விலகி கொள்ளவும் . சூரத்: காஃபிரூன் என்பதின் மூலமாக நபியோடும் ,நம்பிக்கையாளர்களோடும் கூறப்பட்டுள்ளது.

குர்ஆன் கிடைக்காத பார்க்காத தொடாமல் இருந்த ஒருவரை காஃபிர் (மறைத்து வைத்தவர்) எனகூறுவதற்கு குர்ஆனில் எந்த ஆதாரவும் இல்லை.இன்று முஸ்லீம்கள் நாங்கள் அனைவரும் நம்பிக்கையாளுரும், பிறபிரிவினர் காஃபிருகளும் என தாமாக எண்ணியிருக்கின்றன. இன்றைய முஸ்லீம்களின் வாழ்க்கையை பார்த்து எவரேனும் குர்ஆனை சந்தேகிக்கவோ அது வழங்கும் உண்மையான வாழ்க்கை வாழ தயங்குகின்றனருமாகின் அதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வினும் பெரும்பான்மையான மற்று மதத்தினரை குர்ஆனின் கருத்தில் இருந்து தடை செய்ததிற்கான தண்டனையும் ஏற்று கொள்ள வேண்டியது நீதிமானான அல்லாகுவின் கோர்ட்டில் இன்றைய முஸ்லீம்களும் அவர்களுக்கு தலைமை தாங்குகின்றஇன்றைய ஆலீம்களும் உட்படுவர். அவர்கள் இனி குர்ஆனின் கருத்தை பயன்படுத்தவோ , பிறமனிதர்களுக்கு முன் குர்ஆனின் படி வாழ்க்கை வாழ்ந்து காட்டி சாட்சியாக மாறுவர் என்றோ நம்ப வேண்டாம் . எனவே முஸ்லீம் அல்லாத பிறசகோதரர்கள் இயற்கையை அதன் உண்மையான நிலையில் நிலை நாட்ட உதவும் திராசும் , நம்பி ஒப்படைத்த குர்ஆனின் கருத்து படித்து புரிந்து அதை ஏற்று நடக்கவும் , அனைத்துலகிற்கும் அதை தெரிவிக்கவும் செய்ய வேண்டும்.

யார் அநீதி இழைத்தவர்?

குர்ஆன் வசனங்கள் அல்லாகு கூறாத கருத்தில் உருவாக்கி கூறுகின்ற போலி நம்பிக்கையாளர்களும், உண்மை என்னவென்று தெரிந்து கொள்ளவோ புரிந்து கொள்ளவோ முயற்சிக்காமல் அவர்களை பின் துடர்ந்த பாமர மூஸ்லீம்களும் தான் மிகப் பெரிய அநியாயக்காரர்கள் என அன் ஆம்:21 லும், இப்படிப்பட்ட அநியாயகரார்களும், பைத்தியகாரனான, குற்றவாளிகள் ஒருபோதும் வெற்றி காண்பதில்லை என யூனுஸ்:17 லும் கூறப்பட்டுள்ளது. அப்பொழுது யார் அல்லாகுவின் மீது பொய்யுரைத்து கூறியது,அல்லது உண்மையான குர் ஆனின் கருத்து தென்பட்ட பொழுது அதை புறக்கணித்தவனை விட மிகப்பெரிய அநீதி இழைத்தவன்? இத்தகைய காஃபிருகளுக்கு நரககூண்டில் இடம் போதாதா அதுவே போதுமானது என கேள்வி கேட்டவாறு அன்கபூத்:68, சுமர்:32 என்றவசனங்களிலும் முடிவடைகிறது . பகர:254 விளக்கம் பார்க்கவும் . குர்ஆனின் கருத்தை மறைத்து வைகின்ற போலி நம்பிக்கையாளர்களும் அதை புறக்கணிக்கின்றஃபுஜ்ஜாருகளும் அவர் குடும்பத்தில் இருந்து மிக நெருங்கிய உற்றவர்ளோ, உறவினர்களோ, இருப்பினும் கூட அத்தகையோரை உறவினராக தேர்ந்தெடுப்பவர் அவர்களும் அநியாயக்காரர்களே என தவ்பா:23-ல் கூறப்பட்டுள்ளது. உறுதியாக இத்தகைய அநியாயகாரனான ஒரு பிரிவினரை அல்லாகு நேர்வழியில் நடத்தமாட்டான் என்ற கருத்தோடு மாயித : 51, அன்ஆம்:144, கசஸ்:50, அஹ்ஹாப்:10 போன்றவசனங்கள் முடிவடையகின்றது . சஜத: 22 ல் தனது எஜமானனின் வசனங்கள் உள்ளத்தின் மொழியில் புரிய வைத்தால் அதை புறகணித்து தனது பழய வாழக்கையை கடைபிடிப்பவனை விட மிகப்பெரிய அநியாயக்காரன் யார்? உறுதியாக இத்தகைய பைத்தியக்காரனோடு நான் பதில் அளிப்பேன் எனக்கூறியுள்ளது. கஃப்: 57 ன் விளக்கம் பார்க்கவும்.

யார் பைத்தியக்காரன்?(முஜ்ரீம்கள்)

அஃ்ராப் : 40 ல் உறுதியாக குர்ஆன் வசனங்களை பொய்யாக்கி புறக்கணிக்கின்ற ஃபுஜ்ஜாருகளுக்கும் (முஸ்லீம்பாமரன்) அனைத்தும் கற்று முடித்தவர் என ஆணவம் கொள்கின்றஉண்மையை மறைத்து நடிக்கின்ற போலி நம்பிக்கையாளரான நய வஞ்சகர்களும் (முஸ்லீம் பண்டிதர்கள்) அல்லாகு வானத்தின் வாசல்கள் திறந்து வைக்கவோ துணிதைக்கும் தையல்காரனின் ஊசியில் நூல் நுழையும் வழியாக ஒட்டகம் நுழையும் வரை சொர்க்கத்தில் செல்ல மாட்டார்கள் எனவும், அவ்வாறுதான் பைத்தியக்காரர்களுக்கு நாம் அன்பளிப்பு வழங்குவது என கூறப்பட்டுள்ளது. இங்கு உரிமையில்லாத ஆலிமாக எண்ணி ஆணவம் கொண்டு வாழும் போலி நம்பிக்கையாளன் அவர்களை பின்னின்று வாழந்து வருகின்ற பாமர மக்களை பார்த்து மறுமை நாளில்: நேர்வழியான குர்ஆனின் கருத்து வந்தடைந்தும் உங்களை அவையில் இருந்து தடை செய்தது நாங்களா? இல்லை நீங்கள் பைத்தியக்காரரான ஒருகூட்டரே எனக் கூறும் காட்சி சபஅ:32 லும், தவறான வழியில் வாழந்திருந்த பாமர மக்கள்: எங்களை வழிதவறவைத்தது பைத்தியக்காரர்களான நீங்கள் தான் போலி ஆலிமான தலைவர்களைப் பார்த்து கூறுகின்ற காட்சி அஸ்ஸுஅரா:99 லும் நரகத்தின் தண்டனையில் பங்குபெறுகின்றதலைவர்களும், தொண்டர்களும் சேர்ந்து பைத்தியக்காரரை பார்த்து உறுதியாக பைத்தியக்காரர்களோடு நாம் (இறைவன்) இவ்வாறேசெயல்படுவோம் என்று கூறப்படுவதாக சுஃப்ஃபத்:34 லும் கூறுகின்றகாட்சி முன்எச்சரிக்கை விடுத்துள்ளது. மறுமை நாளின் தீர்ப்பில் குர்ஆனின் கருத்தை மறைத்து சிந்தனையின்றி இவ்வுலகில் வாழ்ந்தவரோடு. காஃபிருகளே

உங்களுடைய மேல் எனது வசனங்களை விளங்கப்பட்டிருந்ததல்லவா. அப்போது நீங்கள் பெருமை நடித்தவராயினர் நீங்கள் பைத்தியக்காரரான ஒரு கூட்டமாக இருந்தீர் என கூறும் காட்சி ஜாசிய:31 முன் எச்சரிக்கை விடுத்துள்ளது. குர் ஆனில் ஐம்பது இடங்களில் பைத்தியகாரர்களை பற்றி கூறப்பட்டிருக்கின்றது. புத்தி இருந்தும் குர்ஆனின் கருத்தை பயன்படுத்தவோ வாழ்க்கையின் இலட்சியம் புரிந்து கொள்ளாமல் போலி நம்பிக்கையாளர்களையும் அவர்களை கண்மூடித்தனமாக பின் துடர்கின்றசிந்தனை தவறியவர்கள் தான் அவ்விடங்களில் எல்லாம் கூறபட்டபட்டுள்ளது. ஆனால் புத்தி இழந்தவர்கள் பைத்தியக்காரர் அவர்களுக்கு மதம் சம்பந்தமான எந்த கடமைகளும் செய்ய தேவையில்லை என்று அறிவியல் வல்லவர்கள் உரைத்துள்ளனர். எனகூறி யூதர்கள் எழுதி வெளியிட்ட பொருளை பின்பற்றுபவர்களே அல்லாகு கொலை செய்து விட்ட போலி நம்பிக்கையாளர்கள். யாசின்: 56-62 விளக்கம் பார்க்கவும். குர்ஆனின் கருத்தில் இருந்து விலகி பிசாசின் வலையில் சிக்கி கொண்டு கொள்கையை துலைத்த இத்தகைய போலி நம்பிக்கையாளரையும் குர்ஆனின் கருத்தை புறகணித்து சிந்தனை இழந்த மக்களையும் தண்டித்தாலும், இல்லையேனும்எந்த மாறுதலுக்கும் ஆளாகாத நாய்க்கு சமமாக அஃராப் : 175 -176 ல் எடுத்துகாட்டாக்கியுள்ளது. அஃராப் :179 யூனுஸ் :7 8 விளக்கம் பார்க்கவும்.

## யார் போலி நம்பிக்கையாளன் ? நயவஞ்சகர்கள் ?

இவ்வுலக வாழ்க்கையில் மிக ஆசைபூண்டு குர்ஆனின் கருத்தெல்லாம் நன்றாக உணர்ந்தும் அதை மறைத்து வைத்து முறண்பாடாக கூறி நரகத்தின் வாசலில் நின்று பாமர மக்களை அவன் வழியில் அழைத்து கொண்டிருக்கும் மனித பிசாசான முஸ்லீம் மதத்தலைவர்கள் தான் போலி நம்பிக்கையாளன். இறைவனை தெரிந்து கொள்ளவும், தம்மை தாமே புரிந்து கொள்ளவும் வாழ்க்கையின் கொள்கையை உணர்ந்து கொண்டு செயலாற்றஉதவுகின்றகருவியான குர்ஆனின் கருத்தை நயவஞ்சகர்களன்றி எவரும் மறைத்து வைக்க மாட்டார்கள் என பகர: 99 லும், இறைவனை மறந்ததுடன் தன்னை தாமே மறந்து விட்ட அத்தகையோர் தான் நயவஞசகர்கள் என ஹஸ்ர்:19லும், உறுதியாக நம்பிக்கையாளன் என்றஅவர்களே நயவஞ்சகர் என தவ்பா:63லும் கூறப்பட்டுள்ளது .வாய்திறந்து பேசுவது பொய்மட்டுமே என்றும், நம்பினால் ஏமாற்றுவார் வார்தையளித்தால் அதை காப்பாற்றமாட்டார் இவையாவுமே இத்தகையோரின் குணம் என்று நபி கூறியுள்ளார். போலி நம்பிக்கையாளர் அவர்களுடைய வார்த்தை அவர்களை பாதுகாக்கும் ஒரு கேடயமாக மாற்றி அமைத்தவர் என முனாபிகூன்:2 லும் கூறியுள்ளது . வாய் திறந்தால் பொய் மட்டுமே உரைக்கின்றஅவர் செய்கின்றதை சொல்லாதவரும் சொல்கின்றதை செய்யாத்தவருமாவர். இறைவன் மிக உயர்ந்தவன் என்று கூறுவாராகினும் அவர்களின் வாழ்க்கையில் அதை ஏற்று கொள்ளாததால் அதை பொய்யாகவே அமையும் : இஸ்லாமும், குர்ஆனுமெல்லாம் மிகச்சிறந்ததுதான். எங்களை வைத்து நீங்கள் அதை மதிப்பீட வேண்டாம். அதாவது குழம்பு நல்லது தான் எங்களுக்கு அது தேவையில்லை அந்த குழம்பை நீங்கள் சாப்பிடவும் என்றவாறு இஸ்லாமினையும், குர் ஆனின் கருத்திலும், அவர்கள் செயல்படுவார்கள் நரக தண்டனையை கூறும்பொழுது மக்கள் மத்தியில் அழுது கண்ணீர் வடிப்பார்கள். ஆனால் அவர்களின் சொந்த விசயத்தில் அந்த எண்ணம்எங்குமே பார்க்கமுடியாது.

மற்றவர்களின் பார்வையில் மிக தூய்மையானவராக இருப்பினும், இரகசிய வாழ்வில்

மிக மோசமாக வாழ்ந்துக்கொண்டிருப்பர். இத்தகைய போலிநம்பிக்கையாளர் இஸ்லாமிய இலக்கிய கட்டுரைகள் என்றபெயரில் எழுதப்பட்ட நூல்களும், அவர்களின் வாழ்க்கை நடைமுறைகளும் பிசாசின் அரண்மனயான நரகத்தில் தான் பாமர மக்களை அழைத்து செல்கின்றது. தீனில் இருந்து வெளியேறியவர் (மத்ஹப்) எழுதி தயார் செய்த மதச்செயல்களும், இலக்கிய நூல்களும், கட்டுரைகளும், நபிமொழிகளும், நபியின் மீது போலி பிரசாரகர்கள் தயார் செய்த வார்த்தைகளும் சேர்ந்த நபி மொழி நூல்களும் அல்லாகு அருளிய வாழ்கையை உள்ளம் இல்லாத பிணமாக மாற்றுவதாலும் மனிதனை அவனுடைய வாழ்க்கையின் கொள்கை தெரிந்து கொள்வதில் இருந்து தடை செய்வதாலும், அவையாவுமே மனிதரை நரகத்திற்கு அழைத்து செல்கின்றதாகும். கருத்தை புரிந்து கொள்ள முடியாதவர்களுக்கு அத்தகைய இலக்கியங்கள் மிக அற்புதமாக தோன்றுமென்றாலும் அவர்கள் அன்னூர்:39 ல் தெரிவித்த பாலைவனத்தில் சிக்கித்கொண்ட தாகத்தால் தொண்டை வரண்ட ஒருவன் தண்ணீர் தேடி அலைந்து இறுதியில் தண்ணீர் என எண்ணி ஏமாந்து தண்ணீர் கிடைக்காமல் உயிர்விடுகின்றகாஃபிரைப் போல கொள்கையில்லாமல் வாழ்க்கையை முடித்து கொள்பவனை போலயாகும். இஸ்லாமின் பெயரில் வெளியாகும் எழுச்சி வாய்ந்த கருத்து என வெளியாகின்றதும் மதத்தலைவர்களாகிய போலி நம்பிக்கையாளர் தலைமையில் நடைபெறுகின்றபலவிதமான ஆய்வு கூடங்களும், பள்ளிக்கூடங்களும், மனம்மயக்கும் பள்ளிகளும் ,செய்திதாள்களும், சேவை நிலையங்களும் , அனாதை காப்பகங்களும் , இஸ்லாமிக் வங்கிகள், அமைதியான கட்சி சேவைகள் போன்றவை பார்வைக்கு நல்லதென்று தென்பட்டாலும் உண்மையில் அவை அனைத்தும் சேதத்தை மட்டும் உருவாக்குமென குர்ஆனின் கருத்தை ஆய்ந்துரை செய்து சிந்திக்கின்றவர்களுக்கு புரிந்து கொள்ள முடியும், பெயருக்காகவும், புகழுக்காகவும் இவ்வுலகை இலட்சியமாகவும் கருதிய அவர்களின் செயல்கள் இறைவன் திருப்தியடைவதோ, மனிதர்களின் ஒற்றுமையை நிலைநாட்டவோ அல்ல . அதனால் அவை அநீதிகளையும், பிரிவினையும், கட்சிகளையும், இன வெறியையும் உருவாக்கின்றது . அவர்களும் அவர்களை கண்மூடித்தனமாக பின் துடர்ந்து வழிதவறிய பாமர முஸ்லீம்களும் முகம்மது நபியை இறுதி இறைதுதராய் ஒப்பு கொள்ளாத்தவரும் முசைலிமத்துல் கத்தாப் முதல் மசிகுதஜ்ஜால் வரை முப்பது போலிதூதர்கள் வருவார் என நபி முன் எச்சரிக்கை விடுத்துள்ள திருட்டு ஆசாமிகளை பின் துடர்ந்து கொண்டிருக்கின்றவருமாவர். பகர:79 விளக்கம் பார்க்கவும்.

இறைவனிடம் இருந்து வந்த அறுந்து விடாத பாசம் மிகுந்த குர்ஆனின் கருத்தை உறுதியாக பிடித்து ஒரே ஒரு கட்சியாக நிலை கொள்வதற்காகவே குர்ஆன் கட்டளையளித்துள்ளதென்றால் ஒருவருக்கொருவர் தமக்குதானே போதுமானவன் என்றஎண்ணத்தில் மனதில் பகையுடன் பல கட்சிகளாக பிரிந்து பிறமக்களின் முன் நட்பு முறைஉள்ளவராக நடிக்கும் நடிகர்களாகிவிட்டனர். நோன்பு, பெருநாள், அரபா நாள் போன்றவை கிப்லாவை ஏற்று உண்மையான நாளில் கொண்டாடுவதற்கு முயர்ச்சிக்காமல் தவறான நாள்களில் மாற்றுவதற்கு அவர்கள் முயற்சி செய்வர் . அதர்காக ஒன்றுசேருவர். கடந்த ஆண்டுகளில் அவர்களில் மதத்தலைவர்கள் இந்த இழிவு செயலுக்கு தலைமை தாங்கினர் என்றால் இன்றோ அவர்களில் அரசியல் கட்சிகளும், பணக்காரர்களும் ஆலிமின் ஆடை அணிந்த போலிநம்பிக்கையாளன் ஒற்றுமைக்காக என கூறி மக்களுக்காக தலைமை தாங்கி வருகின்றனர். சூரியனையோ நிலாவையோ நீங்கள் வணங்கக் கூடாது அவற்றைபடைத்த எஜமானனை (அவன் செயலான குர்ஆனின் கருத்தை) நீங்கள் வளங்கி நடக்கவும் என

ஃபுசிலத்:37 ல் படிக்கின்றஇந்த அழிந்து போன மக்கள் கருத்தை புரியாமல் நிலாவிற்கு தலை வணங்கிய ஒரு கூட்டமாக சீர்குலைந்து விட்டனர். சிந்தனையிழந்த இவர் இன்று இறைதூதர் உயிருடன் இருந்தால் எந்த நாளில் இவைகளைஎல்லாம் பின்பற்றுவார் எனறோ உலகில் எங்குமே நாட்கள் மாறுவதில்லை என்றஉண்மை புரியாதவராகினர். மாயித: 2 ல் நீங்கள் நன்மையிலும் இறையச்சத்துடன் ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள் என்று கற்பித்ததற்கு மாறாக பாவத்திலும் , பகையிலும், எதிரிகளாக ஒத்துழைக்கின்றனர். அவ்வாறு யூத, கிருஸ்தவரை வாழையடிவாழையாக பின் துடருவார் என நபி கூறியது இவர்களில் புலர்ந்து வருவதை பார்க்கலாம். அதாவது மலை அருவிகளின் நீர் பாய்ச்சலில் தென்படுகின்றநுரைகளும், பசைகளும் போன்றதாகிவிட்டது. இவர்களுடைய செயல்கள் என குர்ஆனின் கருத்தை ஆறாம் அறிவாக உணர்ந்தவருக்கு மட்டுமே ஆதம் மக்களுக்கு ஏற்படும் மிகப்பெரிய தீங்கு என நபி கற்பித்த மசிகுதஜ்ஜாலின் தின்மை என்னவென்று புரிந்து கொள்ள முடியும். பகர:189, ரஅத்:16-17 விளக்கம் பார்க்கவும்.

போலி நம்பிக்கையாளர்கள் அல்லாகுவிற்க்கும், நம்பிக்கையாளர்களுக்கும் எதிரிகள் என முனாஃபிகூன்:4 லும், அவர்களுக்கு இறைதூதனோ , இறைநம்பிக்கையாளர்களோ பாவ மன்னிப்பு கேட்பதில் பயன் இல்லை, அல்லாகு அத்தகையோருக்கு பாவ மன்னிப்பு வழங்கமாட்டான் , உறுதியாக அல்லாகு குற்றவாளிகளின் ஒரு கூட்டத்தாரை நேர்வழியில் நடத்தமாட்டான் என முனாஃபிகூன் : 6லும் நம்பிக்கையாளராக நடிக்கும் நயவஞ்சகர்களுக்கு பாவ மன்னிப்பு கேட்கவோ அவர்களுக்கு மய்யத் (பிணம்) தொழுகையோ இறைநம்பிக்கையாளருக்கு அனுமதிக்கவில்லை என தவ்பா: 84 லும் கூறப்பட்டுள்ளது. தவ்ஃபா: 80 ன் விளக்கம் பார்க்கவும் . அவர்கள் கழிவறைப்போன்றவர் . அதனால் அவரை விட்டு விலகவும் என தவ்ஃபா :95 லும் குர்ஆனின் கருத்து அவர்களுக்க் கழிவறையை விட மிக அசுத்தமாகவே காட்சிளுக்கும் அவர்கள் காஃபிராகவே உயிர் விடுவர் என்று தவ்பா : 125 லும், அவர்கள் விசாரணையின்றி நரகத்தில் இறுதியில் செல்வார் என அன்னிசா : 145 லும் கூறப்பட்டிருக்கின்றது. தவ்பா: 53 55, இஸ்ரா:82 விளக்கம் பார்க்கவும்.

## யார் அல்லாகுவின் ஆட்சி உரிமையில் இணை வைப்பவர்?

குர்ஆனின் கருத்தின் வாயிலாக அறிமுகபடுத்தும் அல்லாகுவை -இறைவனை- நம்புகின்றவர் மட்டுமே, இறைவன் ஒருவன் என்பதை உணர்ந்து நம்பிக்கைகொள்வர், அல்லாஹ் என அழைக்கத்தெரிந்தும் அவனை ஒத்துக்கொள்ள வேண்டிய முறையில் ஒத்துக்கொள்ளாமல், அவன் பார்க்கவில்லை, ஒன்றும் தெரியாது என்றஎண்ணத்தில் வாழ்க்கை நடத்துபவர் தான் அல்லாகுவின் அதிகார உரிமைகளில் இணை சேர்ப்பவர். பார்க்காமலே பார்த்து அழைத்து வேண்டிக்கொள்ளவும், காவல் தேடவும், உதவிதேடவும் தம்மை அவனிடம் ஒப்படைக்கவும், அஞ்சுவதர்கும் வாழ்க்கையை பற்றி பதில் கூறசிறந்தவன் ஏகனாகிய இலாஹ் என்று அல்லாகுவை அறிமுகப்படுத்துவதற்காகவே 6236 வசனங்களும் வழங்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறிருக்க அவனை அழைத்து அவனிடம் வேண்டி கௌள்ளாமல் கால் தடுமாறும் வேளையிலும், மற்றவிபத்து வேளைகளிலும், அவன் படைத்தவர்களான மூகம்மத்,ஏசு, மூசா போன்றஇறைதூதர்களையோ,பதர் தினத்தில் உயிர் இழந்த இரத்தசாட்சிகளையோ, முஹ்யத்பின் செய்க், அஜ்மிர்காஜ, ஆத்தங்கரைதாய் போன்றவர்களையும் அழைத்து அவர்களுடன் வேண்டி கொள்வதும், அத்தகையோர் இறைவனிடம் நெருங்க உதவுகின்றதரவர்களும் சிபார்சை

செய்பவருமாக எண்ணி அவர்களை ஆதரிக்காவிடில் அவர்களின் கோபம் வரும் எனும் அச்சத்துடன் அவர்களின் பெயரில் நேர்ச்சைகள் வழங்குவதும், பலியிடுவதும் சிர்க்(அல்லாகுவிற்கு இணை கற்பித்தல்) செய்வதாகும். ஆதம் முதல் இறுதி நாள் வரை உள்ள அனைத்து மனிதர்களுக்கும் அல்லாகு ஒத்து கொண்ட மாயித:56-லும், முஜாதில; 22 லும் கூறிய இறைவனின் ஓர் கட்சியில் சேராமல் பல கட்சிகளாக பிரிந்து முஜாதில:19 ல் கூறிய பிசாசின் கட்சியில் சேர்ந்து வாழும் அனைத்து முஸ்லீம்களும் , கட்சிகளும், அல்லாகுவின் ஆட்சி உரிமைகளில் இணை வைக்கின்ற முஸ்ரீக்குகள் தான். அதாவது இறைவனின் தீனில் இணை சேர்ப்பதும் சிர்க்கென்றேபொருள். எனவே குர்ஆனின் கருத்திலிருந்து அல்லாகுவின் குணம் புரிந்து அவனின் உண்மையான தொண்டர்களாக இங்கு வாழ்க்கை நடத்துகின்றஆயிரத்தில் ஒருவனான நம்பிக்கையாளரைதவிர தொள்ளாயிரத்தி தொண்ணூற்றி ஒன்பது நபர்களும் (முஸ்லீம்களும்) பிசாசின் வலையில் விழுந்து நரகத்திற்கு செல்லும் உண்மையான காஃபிருகளும் முஸ்ரிக்குகளுமே. நம்பிக்கையாளராக வாழும் நயவஞ்சகாகளான ஆண்களையும், பெண்களையும் தண்டிப்பதற்காகவே நம்பி ஒப்படைத்த குர்ஆனின் கருத்து வெளிப்படுத்தபட்டது என அஹ்சாப்: 73 ல் கூறப்பட்டுள்ளது. இன்ஃபிதார் : 14, முதஃபிஃபின் :7 போன்றவசனங்களில் கூறிய ஃபுஜ்ஜாருகளில் நயவஞ்சகர்களாகிய போலிநம்பிக்கையாளரும், அல்லாகுவின் ஆட்சி அதிகாரத்தில் இணை வைப்போரில் சேருவர். (பொருளும், கருத்தும் தெரியாமல் குர்ஆனில் உடலை படித்து தினில் இருந்து வெளியேறுகின்றமக்களில் மிகப்பெரிய தீமையுடையோன் என்று நபி கூறிய ஃபாஜிரின் பல்சொல் தான் ஃபுஜ்ஜார்) ஃபாத்திக :4 , அன்னிசா: 118 அர்ரூம்: 30 32, ஃபத்ஹ்:6, பய்யின் விளக்கம் பார்க்கவும்.

யார் இறைவேதக்காரர்கள் (அஹ்லுல் கித்தாப்)

இறைவேதத்தின் ஆட்கள் என பெருமை நடித்தும் ஆனால் அதனை பின்பற்றாமல் வாழையடிவாழையாக ஆராதனை வழிமுறைகள் கடைபிடித்து வந்த நபியின் வாழ்நாளில் உள்ள அன்றைய யூத, கிருஸ்தவர்களையே அஹ்லுல் கிதாப் என்றசொல்லிற்கு ஆளாவர். ஆனால் இன்று அனைத்து மனிதர்களுக்கும் இறைநூல் குர்ஆனின் கருத்து மட்டுமே என்பதால் குர்ஆனின் ஆட்கள் என பெருமை நடிக்கும் இன்றைய முஸ்லீம்களே மேற் சொல்லிற்கு ஆளாவர். குர்ஆன் கழுதைகளை போல சுமைதாங்கியாக அல்லாகுவின் ஆட்சி உரிமைகளில் இணை கற்பித்து வாழகின்றபெரும்பான்மை முஸ்லீம்களை விட அவர்களில் எழுப்புணர்ச்சி கட்சிகள் என கூறுவதுதான் இன்றைய அஹ்லுல் கித்தாப். பிறவேதக்காரர்களை தண்டித்து குர்ஆன் கூறிய செய்திகள் இத்தகைய ஆட்களில்தான் தென்பட்டு விளங்குகிறது உறுதியாக வேதக்காரர்களில் அமைந்த காஃபிரோடும் அல்லாகுவின் அதிகாரப் பொறுப்புகளில் இணை கற்பிப்போரும் நரகத்தியில் நிரந்தரமாக வசிப்பார். அத்தகையோரே கரையில் மிக மோசமான உயிரினங்கள் என பய்யின் :6 லும் உறுதியாக இறைவனின் பக்கம் மிக தாழ்ந்த உயிரினங்கள் சிந்தனை திறன் இழந்த செவிடர்களும், ஊமைகளும், குருடர்களுமான காஃபிருகள் என்று அன்பால் : 22, 55 வசனங்களிலும் கூறப்பட்டுள்ளது. பகர:111,113, மாஇத:18 விளக்கம் பார்க்கவும்.

## எதற்காக குர்ஆன்?

அனைத்து மனிதர்களும் விரும்புகின்றஒன்று தான் சமாதானமான வாழ்க்கை, அதற்காகவே மனிதர் இறைவன் வழங்கியதை விட்டு மனிதர்கள் தயாரித்த சட்டத்திட்டங்கள் செயல் படுத்தி வருகின்றனர். ஆனால், புத்தியும், உரிமையும் வழங்கப்பட்ட மனிதனை

கட்டுபடுத்துவதற்கும், பொறுமையாக நல்ல வாழ்கை நடத்துவதற்குமாகவும் வேண்டி மனிதன் உருவாக்கிய சட்ட திட்டங்களால் விரும்பும்படி எந்த பயனும் கிடைப்பதில்லை . பிரிவினைகள், அநியாயம், கொலை, கொள்ளை ,தீவிரவாதச்செயல் இவை தினம் தினம் பெருகிவருவதாக, பார்க்க முடியும் , மனிதனின் நிம்மதியான அன்றாட வாழ்க்கைக்கு இடையூறாக உருவாகின்றமதக்கலவரம், நாட்டுக்கலவரம், இனகலவரம், தீண்டாமை போன்றவையும், மனிதனில் மிருகத்தனவும், பிசாசின் செயல்களுமான பேராசை, இனக்கூறு, பொறாமை, ஆணவம், அகம்பாவம், பெருமை நடித்தல் ஏளனம் செய்யல், கற்பளிப்பு, பொய், மது, மங்கை, மயக்கு மருந்து, ஓர்இன உறவு, விபச்சாரம், போன்றவையும், மனிதனின் அன்றாட வாழ்க்கைக்கு அதிக சுமை வருத்துகின்றகடத்தல்கள், பற்றாக்குறை, அதிகலாபம், மாயம் சேர்த்தல் , எடையில் கம்மி வருத்தல், வட்டி, குழல்பணம், சூதும்,வாதும், லஞ்சம் வாங்குதல், லஞ்சம் கொடுக்கல், வரதட்சனை வாங்கல் கொடுக்கல், போன்றவையும், சந்தேங்களிலும், ஏமாற்றங்களிலும் அமைந்துள்ள பிசாசின் மீது கொண்டுள்ள நம்பிக்கையின்படி செய்கின்றமந்திரம், செய்வனை, ராசி, கைரேகை, நல்லகாலம், இத்தகையதும் இவ்வுலகில் மிக மேன்மையானதாக செயல் யாவையுமே வாழக்கை வசதிக்கேற்ப பெருகிவருவதாக பார்க்கமுடியும். முக்காலவும் தெரியும் அனைத்துலக ஆண்டவனின் அனைத்துலக படைப்புகளுக்கும் பயன் பெறவைக்கும் சீர்திருத்தமிக்க குர்ஆனின் கருத்து செயல்படும் பொழுதுதான் பூமியில் முழுமையான சாந்தி நிகழும். மனிதர்களுக்கு இவைகளை உணரவைத்து வாழ்க்கையின் கொள்கையை புரிய வைத்து அத்தகையவர்களாக மாறி வாழ்க்கை வாழ்வதற்கும், மனிதர்களின் ஒற்றுமையை நிலைநாட்டவும் இயற்கையை அதன் உண்மை வழியில் நிலைநாட்டவும் மனிதர்களுக்கும் மற்றஉயிரினங்களுக்கும் அல்லாகு ஏற்படுத்திய வாழ்க்கையின் இறுதிவரை இங்கு பொறுமையான வாழ்க்கை வாழ்வதற்கும் ஆறாம் அறிவாகிய குர்ஆனின் கருத்தின்படியின்றி வேறுறொன்றாலும் நிறைவேற்றமுடியாது. இஸ்ரா :13 14ல் அனைத்து ஒவ்வோரு மனிதரும் அவனுடைய செய்திகள் (சாப்ட்வேர்) தன் கழுத்தில் சுமந்து கொண்டிருக்கின்றான் என்றும் மறுமை நாளில் அவைகளை திறந்த ஒளிவிசுகின்றநூலாக அவனுக்கு வழங்கப்படும் என்றும், நீ உனது நூலை படிக்கவும், இன்று உன்னை விசாரனை செய்ய நீயே போதுமானவன் என்று கூறுமென கூறப்பட்டுள்ளது. முன் இறைநூல்களில் ஒன்றும் கூறாத இச்செய்தியை விரிவாக்கிய குர் ஆனின் கருத்தை பயன்படுத்தியே இந்த கம்யூட்டர் உலகிலும் தவறுகளில் மகிழ்ந்து வாழுகின்ற மனிதரை தவறுகளில் இருந்து விடுதலை செய்ய முடியும். ஜாசியா: 28-32 விளக்கம் பார்க்கவும்.

அன்னஜ்ம்: 39-ல்அல்லாகு கூறுகின்றான்: மனிதன் அவன் உள்ளம் உணர்ந்து செயல்பட்டதல்லாமல் அல்ல. எந்த ஒரு நிகழ்ச்சியில் ஈடுபடும் பொழுதும் இறைவன் அவன் உள்ளத்தைதான் பார்ப்பது. உள்ளத்தின் நிலையை பார்த்துதான் அந்த செயல்களுக்கு மதிப்பீடு நல்குதல். அல்லாகு இதயங்களின் நிலமை அறிபவன் என உணர்ந்து தூய்மையாகவும், அச்சத்தாலும், ஏழ்மையாகவும் நாவினால் “அல்லாஹ்” என கூறாமல் உள்ளத்தில் அல்லாஹ் என்றஎண்ணத்தில் வாழ்பவர்தான் இறைநம்பிக்கையாளர்கள். அல்லாகு இதயங்களின் நிலமைகள் புரிபவனல்ல என்றநிலையில் நாவினால் அல்லாகுவை புகழ்த்துவதும், வாழ்த்துவதும் மட்டுமே இறைஎண்ணம் என கூறுபவர் சிந்தனையற்றவர் எனவும் நம்பிக்கையாளர் அவர்களை போன்றவரில் சேரக்கூடாது என அஃராஃப்: 205-ல் கூறப்பட்டுள்ளது. குர்ஆன் கிடைப்பதற்க்கு முன்பு நபியும் ஒன்றும் தெரியாத சிந்தனையற்றவழிதவறிய நிலையில் இருந்ததென யூசுஃப்: 3-லும் அள்ளுஹ: 7-லும் கூறப்பட்டுள்ளது.

எனவே தீமைகள் யாவும் விட்டுவிட்டு வாழ்க்கை முழுவதும் இறைவனுக்காக அற்பணித்து அவன் தொண்டராக சேவை செய்ய குர் ஆனின் மொத்த கருத்தினால் அன்றி மற்றொன்றும் கொண்டல்ல. கியாம: 22-24 ல் கூறியபடி குர் ஆனின் கருத்தில் தென்பட்ட இறைவனை இறக்கும் தருவாயில் உள்ளத்தால் பார்த்து சந்தோசமாக சுவர்கத்திற்கு திரும்பி செல்வதற்கும், ரஅத்: 28-ன் படி குர் ஆனின் கருத்தின்படி நப்ச்முத்ம இன்ன: (சாந்தியும் உறுதியும் பெற்றஆத்மாவ்) மாறுவதற்கும், ஃபஜர்: 27-30 ன்படி ஓ! சாந்தியும் உறுதியும் பெற்றஆத்மாவே நீ உன்னுடைய எஜமானனிடம் எஜமானனால் நீயும் உன்னால் எஜமானனும் ஒருவருக்கொருவர் ஏற்றவாறு திரும்பிசெல்க. நீ எனக்காக வாழ வேண்டும். என் சொர்க்கத்தில் நுழைந்து கொள்க எனறு கூறபட்டு வாழ்க்கையின் கொள்கை நிறைவேறி. யவர்களில் சேர்வதற்கும் குர் ஆனின் கருத்தைவைத்தே முடியும்.

வாழ்க்கையின் கொள்கை:

பூமியில் எப்பொழுது, எந்த ஊரில், எங்கு, எந்த இனத்தில், எந்த பாம்பரையில், எந்த தாய் தந்தையருக்கு பிறக்கவேண்டுமென தாமாகவே தேர்ந்தெடுக்க எந்த ஒரு மனிதனுக்கும் உரிமையில்லை. ஒவ்வொரு காலங்களிலும் அவைக்கேற்ப பல நாடுகளில், பல இனங்களில் மனிதர்களை பூமியில் கொண்டு வந்து வாழவைப்பதும் ஒரு குறிப்பிட்ட நாள்வரை அவர்களுக்கு தேவையான வாழ்க்கை வசதிகள் செய்து முடிவில் அவர்களை திருப்பி கொண்டு செல்வதும் இறைவன் மட்டுமே. ஆறாம் அறிவான குர் ஆனின் கருத்தை பயன்படுத்தி இறைவனை தெரிந்துகொள்ளவும், தன்னை தாமெ தெரிந்துகொள்ளவும், இயற்கையென்ற உலகின் செங்கோல் நிலை நாட்டவும் சொர்க்கம் இங்கு கட்டிமுடிக்கவும் மரணத்துடன் இங்கு கட்டிமுடித்த சொர்கத்திற்கு நிரந்தரமாக வாழ போவதே நான்காம் நிலையான மனிதனின் வாழ்க்கையின் குறிக்கோள். முல்க்: 2-ல் இறப்பும், பிறப்பும் உருவாக்கியது அவனே. உங்களில் யார் மிக அழகாக செயல்படுகிறது என சோதனை செய்வதற்கே என கூறப்பட்டுள்ளது. கூத்:7, கஃப்:7 விளக்கம் பார்க்கவும். நிகரற்றஅன்புடையோனானும் பொதுவாக விளங்கும் அல்லாகு ஒருவரையும் சொர்க்கத்திற்கோ, நரகத்திற்கோ அனுப்பமாட்டான். அவரவர்களே சொர்க்கம், நரகம் கட்டிமுடிக்கவேண்டும் ஆலி இமரான்:185ல் அல்லாகு கூறுகின்றான், அனைத்து ஒவ்வோரு ஆத்மாவும் மரணத்தை சுவைக்கும். உங்களுடைய செயல்களின் ஊதியம் மறுமை நாளில் வழங்கப்படும். அப்பொழுது எவர் அவர்களை அவர்களால் நரகத்தில் இருந்து பாதுகாத்து சொர்க்கத்தில் நுழைகின்றனரோ அவர்கள் வெற்றிபெற்றனர். இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றமிக்கதன்றி மற்றொன்றுமல்ல. பகர: 281-ல் நீங்கள் இறைவனிடம் திரும்பி செல்கின்றஒரு நாளினை மிக கவனமாக வைத்து கொள்ளவும். பிறகு அனைத்து ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அது உழைத்தது எதுவோ அதற்கான ஊதியம் வழங்கப்படும். அவர்களிடம் சிறுதளவு கூட அநீதி விளைப்பதில்லை என கூறப்பட்டுள்ளது ஆலுஇம்ரான்: 30, அன்ஆம்: 164-165 விளக்கம் பார்க்கவும்.

மனிதரில் இருந்து ஒவ்வொரு ஆயிரத்தில் ஓருவன் மட்டும் சொர்கத்திலும் தொள்ளாயிரத்தி தொண்ணூற்றி ஓன்பதும் நரகத்திற்கும் என்றதிருத்தமுடியாத விதி மனிதரை படைப்பதற்கு முன்பாக இறைநூலில் எழுதப்பட்டுவிட்டது. சிறிது நேரம் இவ்வுலக வாழ்வில் அரசாங்க வேலை கிடைப்பதற்காக :10 இடங்கள் இருப்பது தெரிந்தும் பல்லாயிரம் மக்கள் அதற்க்காக போட்டி போடுவதையும் அந்த இடத்தை பெற்று விட மிகக்கடுமையாக முயற்சி

செயவதையும் பார்கலாம்! ஆனால் நான் அதில் ஒருவனாக இடம் பெறமுயற்சி செய்வதில் எந்த பயனும் இல்லை என்று எண்ணி எவரும் ஆசை இழந்தவராக கூடாது. ஏனெனில் சொர்கத்தில் செல்லும் ஆயிரத்தில் ஒருவன் யார் என இறைவன் வெளிபடையாக கூறவில்லை. இறைநம்பிக்கையாளராக மாறஅல்லாகுவின் சான்றிதழும் அருளுமாகிய குர்ஆனின் கருத்தின்படி நடந்து அந்த ஒருவனின் குணங்கள் பெற்றஎந்த ஜாதி, மத, இனத்தவர்கும், அதில் சேர முடியும். குர்ஆனின் கருத்தில் இருந்து இறைவனை பொதுவாக விளங்குபவன் எனப் புரிந்து உண்மையையும் பொய்மையையும் விளங்க வைக்கும் எடையும் மாசுபடியாத எடை கருவியாக பயன்படுத்தி தன்னுடைய விதி சொர்க்கத்திற்கு மாற்றுதல், நேர்வழியும் தவறான வழியும் தேர்ந்தெடுக்கும் உரிமை வழங்கப்பட்ட மனிதனின் கடமையாகும். இறைநூல் அனுப்பியது அனைத்து மனிதர்களுக்கும் குறிக்கோளுடன் தான் . யார் இறைநுலை பயன்படுத்தி சொர்கத்தில் செல்கிறார்களா அச்செயல் அவர்களுக்காக மட்டுமே.யார் அதில் இருந்து தவறி சென்றனரோ அச்செயலின் தண்டனயும் அந்த ஆத்மாவிற்கு மட்டுமே என சுமர்:41ல் கூறப்பட்டள்ளது.

சொர்கவும் நரகவும்

1400 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த அரபிஇனத்தவர்க்கு தெரிந்த முறையிலும் சொர்களிலும் உருவங்களிலும் சொர்கத்தை குர்ஆன் அறிமுகம் செய்தது மனிதனின் உள்ளம் விரும்புகின்றஅனைத்தும் பெற்றுக்கொள்ளவும் அவன் விரும்பாத ஒன்றைபார்க்கவோ கேட்கவோ முடியாத நிரந்தரமான வாழ்க்கை வாழ இயலும் இடமே சொர்க்கம்.வேதங்களில் சொர்கத்தை பற்றிய செய்திகளில் இருந்து புரிந்துதான் இன்று பூமியில் நாம் பார்கின்றபல சொகுசு வாழ்கைகள் பார்குகள் பூந்தோட்டங்கள், நீர்வீழ்சிகள், நீர்பந்தலுகள், அரண்மனைகள், கார்பற்றுகள், குசன்சீட்டுகள், சோபாக்கள், சுவைமிக்க, உணவுவகைகள், உயர்ந்ததரம், ஆடைகள், குளிர்பெட்டி, செய்திதொடர்கள், முதுமையோ நோயோ இல்லாமல் வாழும் நிலை, போன்றமனிதர்கள் கண்டுபிடுத்ததும் மீண்டும் உருவாக்க போகின்றதும் மட்டுமின்றி மனிதனின் மனதில் பூமியில் கனவாலும் கூட பார்க்கமுடியாத அனைத்து அருட்கொடைகளும் நன்மைகளும் கொண்டதே சொர்க்கம். சொர்கத்தில் வெயில், வெப்பம், புகை, தூசிகள், குளிர், எதுவுமே இருக்காது. பசியோ தாகமோ உடல் சோர்வோ வேர்ப்புதுளியோ உடலுறவோ, விந்துவெளியெறலோ, கழிவறை எதுவும் இருப்பதில்லை. ஆனால் எப்பொழுதும் உடலுறவினால் ஏற்படும் சுகம் கிடைக்கும்.தாஹா:118 119, சாஃபாத் 58 61, முகம்மத்;6விளக்கம் பார்க்கவும்.

குர் ஆனின் கருத்தில் இருந்து சொர்கம் பார்த்து இங்கு அல்லாகுவின் தொண்டனாக வாழ்வததற்கும் சொர்கம் உருவாக்கவோ வாங்கவோ முயற்சிசெய்ததால் அதற்கான ஊதியமாக ஒருவருக்கு மறுமை நாளில் சொர்க்கம் பரம்பரை சொத்தாக கிடைக்கும். அல்லாகுவின் சான்றிதழாகிய குர் ஆனின் கருத்தின்படி இறைநம்பிகையாளாராகவும் கொள்கையோடும் இறைவனின் தொண்டனாய் வாழ்ந்து இயற்கையை அதன் மெய் உருவத்தில் பாதுகாத்து நிலை நாட்டவும் மனிதர்களுக்கும் பிறஉயிரினங்களுக்கும் சுத்தமான உணவு வகைகள் தயாரிப்பதற்காக மண்ணில் விவசாயம் செய்யவும் மரங்கள் நடுதல் அதற்காக மற்றவர்களை தூண்டியும் காற்று தண்ணீர் சுற்றுபுறசூழல் அசுத்தமாக்குவதற்கு வழி வகுக்கும் விவசாயங்களையும், நாட்டை விரிவுபடித்த செய்யும் வழிகளையும் பரிமிதப்படுத்திதான் இங்கு சொர்க்கம் உருவாக்கமுடியும். அனைத்து துறைகளிலும் நமக்கு கிடைத்த அருட்கள் அளவோடு பயன்படுத்தி வாழ்கை நடத்தவும் இயற்கையை அதன் நடுநிலையில் நிலை நாட்ட உதவும் எடை கருவியும் நம்பி

ஒப்படைத்த குர் ஆனின் கருத்தை அனைத்துலகிற்கும் அறிமுகபடுத்துவதற்கு மிகவும் முயற்சி செய்து அதற்க்காக நமது நேரங்களையும் வசதிகளையும் அதிகாரங்களையும் செலவு செய்யவும் அதற்காக மற்றவர்களை தூண்டியும் தான். சொர்க்கம் வாங்க முடியும். ஃபுசிலத் :46 அஸ்சூரா : 20 அல்வாகிய: 2740 விளக்கம் பார்க்கவும்.

பூமியில் நாம் அனுபவித்து கொண்டிருக்கின்றஅனைத்து விதமான தீமைகளும், வேதனைகளும், சங்கடங்களும், முழுமையாகவும், வெப்பமும், குளிரும் மிக கடுமை வாய்ந்ததும், மிகவும் வெறுகின்றவர்களுடன் வசிக்கும் நிலையிலும் புழுக்கம் அடையும் படி தண்டனை வழங்கும் இடம் தான் நரகம். ஊசி போடக்கூட இடம் இல்லாதவாறு அசூரர்களையும் மனிதர்களையும் சேர்த்து நிரப்புகின்றநரகத்தில் ஆண் பெண் எவராகினும் காஃபிருகள் அவர்களின் உள்ளத்தில் ரகசிய உறவு கொள்ள விரும்பியவர் அனைவரையும் அவர்களின் உடலுறவின் உறுப்புகளால் இணைக்கப்படும் . சொர்கத்தினருக்கு அவர்களின் உள்ளம் விரும்பியவை அனைத்தும் கிடைக்கும். ஆனால் நரகத்தினருக்கு அவர் தண்டனையில் இருந்து எந்த நிகழ்ச்சிகளை ஏளனமாக கேலி செய்திருந்தார்களோ அதுவே அவர்களுக்கு கிடைக்கும் . ஹிஜ்ர்: 44, சுமர்: 4748, அல்வாக்கியர்:4156, விளக்கம் பார்க்கவும்.

அல்லாகுவின் சொர்க்கவும் அல்லாகுவின் நரகவும் மிக விரிவானதே அவன் விரும்பியவரை அதில் சேர்த்துவிடுவார். என்று நம்பிக்கையில்லாத நயவஞ்சகர்கள் கூறுவது குர்ஆனின் கருத்திற்கு மிகவும் மாறுபட்டதே. சஜத: 19 ல் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிபவர்களுக்கு சொர்க்கம் அவர்களின் செயல்களுக்கு ஊதியமாக விருந்தாக வழங்கப்படுமென கூறப்பட்டுள்ளது. ஆலி இம்ரான்:136, அன்கபூத்:58 சுமர்:74 போன்றவசனங்கள் முடிவடைவது, அவ்வாறு செயல்படுபவர்கள் பெற்றுக்கொள்ளும் ஊதியம் மிகசிறந்தது என்றகருத்தின்முலமே. சொர்க்கம் இங்கு கட்டியவருடன், நீங்கள் செயல்பட்டிருந்த ஊதியமாக சொர்க்கத்தை பரம்பரை சொத்தாக பெற்றுக் கொள்ளவும் என கூறப்படும் என்று அஃராஃ:43 லும் கூறப்பட்டுள்ளது. சஜதா 14 ல் நீங்கள் செயலாற்றியதற்க்கு ஊதியமாக நீங்கள் நிரந்தரமான தண்டனையை சுவைக்கவும் என கூறப்பட்டுள்ளது ஆலிஇம்ரான்: 181-182, அன்பால் : 50-51, ஹஜ்:9-10, என்றவசனங்களில் நீங்கள் உங்களை கரித்து விடுகின்றதண்டனை சுவைத்து கொள்ளவும் அது உங்களுடைய கைகள் சேமித்து வைத்ததே. அன்றி அல்லாகு அடிமைகளுடன் சிறிதளவு கூட அநியாயம் செய்யமாட்டான் என கூறப்பட்டுள்ளது. ஹஸ்ர் : 18 ல் நீங்கள் அல்லாகுவை கவனமாக கவனித்து வாழவும். ஒவ்வொருவருக்கும் நாளய தினத்திற்காக (மறுமை நாளில்) எதை சேமித்து வைத்திருப்பதென்று பார்த்து கொள்ளவும். நீங்கள் இறைவனை கவனமாக எண்ணவும் . உறுதியாக அல்லாகு நீங்கள் செயலாற்றி வருவதனைத்தும் வலை வீசிய முக்காலவும் அறிந்தவன் என நம்பிக்கையாளனை அழைத்து அல்லாகு கூறியுள்ளான். ஒவ்வொருவரும் அவர்கள் இவ்வுலகில் சேமித்ததை அவர் பார்க்கின்றவேளை ஓா : கொடுமை நான் மண்ணாக மாறியிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று, குர்ஆனின் கருத்தை மறைத்து வைத்த நம்பிக்கையில்லா நயவஞ்சகன் மறுமை நாளில் கூறுவான் என நபஅ:40ல் முன் எச்சரிக்கை விடுத்துள்ளது. அன்னிசா : 42 ஜுமா : 7 விளக்கம் பார்க்கவும்.

உம்மத் (மனிதகுலம்) கவ்ம் (கட்சிகார்)

முகம்மது நபி இறைதூதராக அனுப்பியது முதல் இறுதி நாள் வரை உள்ள அனைத்து மனிதர்களும் நபியின் இனத்தார்கள் எனில், அக்காலத்தில் நபியின் வார்த்தைக்கேற்ப நபியின்

வாழ்கையை பின்பற்றாத இறுதி நாள் வரை உள்ள முஸ்லீம் பேர் வைத்தவர்கள் மட்டுமே நபியின் கட்சியில் வருவர். அனைத்து இறைதூதர்களையும் போலவே முகம்மது நபியும் தமது கட்சிக்கு மாறகவே பேசியிருப்பதாக குர்ஆன் முழுவதிலுமாக பார்க்க முடியும். பிறமதசார்பாளர்கள் உட்பட மனித இனத்திற்காக மரணத்தருவாயின் வேளையிலும் வருத்தம் கொண்ட நபி மறுமை நாளில் என் மக்கள் என் மக்கள் என்று வேதனை கொள்வார். ஆனால் ஃபுர்கான் : 30 ல் மறுமை நாளில் குர்ஆன் கொண்டு வந்து என் நாதா என் கட்சிகள் குர்ஆனை மறந்து ஓடியதே இவர்களுக்கு நேர்ந்த துர்நிலை என்று கட்சிக்கு மாறாக நியாயம் கூறுவர். நபியின் காலத்தில் இருந்த மக்கா முஸ்ரிக்குகளுக்கு சீர்திருத்தப்பட்ட இறைநூல் இல்லாததால் நபியில் நம்பிக்கை கொள்வதற்கு அவர்கள் அவ்வாறு ஒரு இறைநூல் கொண்டுவர கூறினார். இஸ்ராஅ : 90-93 விளக்கம் பார்க்கவும். ஆனால் குர்ஆனின் கருத்து தென்பட்டுவிட்ட இப்பொழுது அதை பயன்படுத்திக் கொள்ளாமல், சீரழிந்த செயல்களில் மூழ்கியிருக்கின்ற முஸ்லீம்களுக்கு அன்று எந்த ஒரு குறைகூறலும் விலைபோகாது. இறைநூல் கிடைத்த கட்சிகள் குர்ஆனின் கருத்தின் படி வாழ்க்கையை சீர்படுத்தாமல் இறைநூலில் சிலவற்றை ஏற்று கொண்டும் சிலவற்றை மறைத்து வைத்தும் வாழும் நிலையில் அவர்களுக்கு இவ்வுலகில் ஏளனவும் மறுமை நாளில் மிக கடுமையான தண்டனையும் கிடைக்கும் என பகர:85 ல் அல்லாகு உறுதி அளித்துள்ளான். இன்று உலகில் முஸ்லீம்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் அனைத்து வித கொடுமைகளுக்கும், தொந்தரவுகளுக்கும் காரணம் நம்பி ஏற்று கொண்ட குர்ஆனின் கருத்தில் இருந்து அவர் விலகி சென்றதே ரஅத் :11 ல் ஒரு கட்சியினர் தம்மை தாமே மாற்றாதவரை அல்லாகு அவர்களை மாற்றாமாட்டான். என கூறியுள்ளதால் குர்ஆனின் கருத்தில் திரும்பாமல் ஒற்றுமைக்காக ஒன்று பட்டோ, ஆயுதம் மூலமோ பிறவழிமுறைகள் மூலமோ அவர்களுக்கு வெற்றி பெறஇயலாது.

காற்று, நீர், ஒளி, மண் போன்றஅனைத்தும் படைத்த இறைவனின் அனைத்து அருள்களும் அனைத்து மனிதர்களுக்கும் ஒரே மாதிரி உரிமையுள்ளதுதான் . ஆனால் அவனின் மிகசிறந்த அருள் அவனிடமிருந்து வழிகாட்டும் சத்தியத்தை சத்தியப்படுத்துகின்ற இறைநூலின் முழு வடிவமான குர்ஆனின் கருத்து தான். அது ஏதேனும் மதத்தினருக்கோ, ஏதேனும் ஜாதிக்கோ மட்டுமன்றி பொதுவாக வழங்கியுள்ளான். அதை பயன்படுத்தி வாழக்கை நடத்த படைப்புகள் என்றமுறையில் அனைவருக்கும் அந்த கடமையுண்டு . அதற்காக பெயர், ஆடை, மதம் எதுவும் மாற்றத்தேவையில்லை . என பகர : 62லும், மாயித 69லும், அல்லாகு கூறியுள்ளான். இறைதூதரின வாழ்க்கையை நிஜப்படுத்தி அவ்வாறு வாழ்கின்றநம்பிக்கையாளரின் கூட்டம் இன்று உலகில் எங்குமே இல்லாததால் இறைதூதரின் மொத்த மனிதர்களாகியவரில் இருந்து பிறமனித பிரிவினருக்கு இறைநூலின் அடிப்படையில் நம்பிக்கைக் கொண்டு தவறு புரியாமல் வாழ்ந்தாலும் சொர்க்கத்திற்கு செல்ல முடியும். மீறி அவர் மதம் விட்டு பிறமுஸ்லீம் கட்சிகளுடன் சேர்ந்தால் உண்மையான காஃபிர்களாக மாறிவிடுவார். நம்பிக்கையாளர்களை அழைத்து அர்ரும்:31-32 ல் தீனில் பிளவு படுத்தி பல கட்சிகளாக உருவாகி இறைவனின் ஆட்சி உரிமைகளில் பங்கு சேர்பவரில் சேரகூடாது என அல்லாகு எச்சரிக்கை விடுத்துள்ளான். முஃஅமினீன்:51-53 விளக்கம் பார்க்கவும்.

அஃராப்:169-ல் இறைவனின் மேல் உண்மையல்லாமல் வேறோன்றும் கூறக்கூடாது என அவர்களுடன் வாக்குரிமை வாங்கியதாக கூறுவதின் விளக்கம் ,'வெற்றியும் சொர்க்கவும் ஒரு பிரிவினருக்கு மட்டும் சீட்டு எழுதி கொடுத்ததாக இறைநூலில் எங்கும் கூறவில்லை, விருப்பபடி

நடந்துகொள்க. ஏதேனும் ஒரு இறைதூதரின் ஆட்கள்.என கூறியதால் மன்னிப்பு வழங்கபடும் எனவும் கூறுவில்லை, ஆனால் அன்னிசா:123-124ல் கூறியிருப்பது, உங்களுடைய விருப்பபடியோ இறைநூலர்களின் ஆர்வபடியோ அல்ல. தீமை செய்பவர் எவரோ அவனுக்கு அதன் ஊதியம் கிடைக்கும். அவனுக்கு அல்லாகுவை அன்றி சிறந்த ஒரு உதவியாளனோ, பாதுகாவலனோ கிடைப்பதில்லை. நன்மைகள் செய்கின்றஆண்களோ, பெண்களோ அவர்கள் நம்பிக்கையாளர்களுமாகுவின் அவர்களே சொர்கத்தில் செல்வார். அத்தகையோரிடம் சிறிதளவு கூட அநீதிக்கு ஆளாகமாட்டார். அல்லாகுவின் பெயரில் உண்மைக்கு மாறக ஒன்றும் கூறக்கூடாது என அவர்களிடம் ஒப்பத்தம் வாங்கியிருக்கே, அல்லாகு கூறாததை அவனுடன் சேர்த்து கூறுவதற்கு எந்த தகுதியிருக்கிறது? அல்லாகுவில் இருந்து வேதம் வந்த போதும் அதை பெற்று கொள்ளாதவர்கள் காஃபிர்கள் ஆகமாட்டார் எனவும், வேதம் கிடைத்த பிறகு அதற்கேற்ப வாழ்கை நடத்தாதவர்களே காஃபிருகளென்றும் உறுதியாக புரிந்து கொள்ள முடியும். இறைநூலை பெற்றுக்கொள்ளாதவர்களை சொர்கவும், நரகவும் அன்றி வேறேதெனும் உலகிற்கு விசாரித்தபிறகு அனைத்துலகின் நாதன் அனுப்புவான் அவர்களின் பாவ செயல்களையும் ஏற்க வேண்டி வருவது இறைநூலின் கருத்து தெரிந்தும் அதனை மறைத்து வாழ்கின்றவிசாரனை இன்றி நரகத்தின் இறுதியில் போகும் நம்பிக்கையில்லா நய வஞ்சகர்கள் தான்.

மிக பெரிய போராட்டம்(ஜிஹாத்) கொடுமை நிறைந்த ஆட்சியாளரின் முன் உண்மையை (நியாயம்) வெளிப்படையாக கூறுபவனே என நபி கற்பித்துள்ளார் .ஃபுர்கான்:18, ஃபத்ஹ:12 என்றவசனங்களில் மறுமை நாளில் தூய்மையானவர்கள் மிக மோசமானவர் என சான்றளிக்க போகின்ற முஸ்லீமகளின் ஆட்சியாளர்கள் தான் இன்று மிக பெரிய கொடுமைகாரனும், ஆணவகாரனும், வஞ்ஞகனும், சொகுசு வாழ்கை நடத்துபவனும் வீணாக்கி கொன்டிருப்பவனும் என பார்க்கமுடியும். அவர்களின் நம்பிக்கையில்லா நய வஞ்சகர்களாகிய தலைமையாளர், இத்தகைய ஆட்சியாளர்களின் ரொட்டி துண்டை பெற்று கொண்டு, அஃராப்:176-ல் கூறியவாறு நாயைபோல நாக்கை நீட்டி மூச்சு வாங்கி கொண்டு இவ்வுலகின் சொகுசு வாழ்கைக்காக பாய்ந்து ஒடி கொன்டிருக்கின்றகாட்சி தான் நாம் எங்கும் பார்த்து வருகின்றோம். தலைவர்களும், பண்டிதர்களும் கெட்டுவிட்டால் இந்த மனிதகுலம் துலைந்து விடும். தீமையை தடை செய்யாத காலம் உருவாகினால் இவ்வுலகம் அழிந்துவிடும் எனவும் நபி கற்பித்துள்ளார்.

## தினும் சரிஅத்தும் (வாழ்க்கையும் சட்டவும்)

முழு இறைநூலின் அடிப்படையில் உருவாகிய வாழ்கைதான் தீன். ஆலிஇம்ரான்:19-ல் கூறிய இயற்கை தான் இஸ்லாம் என்பது. ஆத்மாவின் எஜமானின் முன் ஆத்மாவை அற்பணித்து மேற்கூறிய வாழ்கையில் ஆதம் முதல் இறுதி நாள் வரையிலும் எந்த மாற்றவும் இருக்காது. ஆனால் ஒவ்வொரு காலங்களிலும் அதற்கேற்றவாறு தீனின் புறவடிவமான சட்டதிட்டங்களை " சரிஆத்" என கூறுவர். அத்தகைய காலங்களில் நம்பிக்கையாளர்களின் கூட்டத்திற்கு கடைபிடிக்கவேண்டிய கடமைகள் தான் சரீஅத்தில் இருக்கின்றது. நூஹ், இப்ராஹீம், முசா, முகமத் போன்றஇறைதூதர்களின் காலங்களில் எல்லாம் சரிஅத் மாறுமாடாக இருந்தது. நம்பிக்கையாளர்களின் கூட்டம் உருவாகும் பொழுது தான் சரீஅத் சட்டதிட்டம் செயல் முறையில் அமுல் படுத்தமுடியும் இன்றய காலத்திற்கு ஏற்றவாறு உண்மையான வழியான "முகமத்சரிஅத்" மனிதர்கள் மத்தியில் வாழ்ந்து காண்பிக்க நம்பிக்கையாளர்களின் சங்கம் இல்லாதாதல், சரிஅத் பின் துடர்வதற்காக மதமாற்றம் தேவையில்லை. நபி கற்பித்ததின்படி :

படிக்கவும், எழுதவும் தெரிந்த ஒருவர் குர் ஆனின் கருத்தை கடைபல்லை கடித்து பிடித்து நிலை நிற்கவும், எழுதவோ, படிக்கவோ தெரியாதவர் காட்டிற்கு சென்று ஏதாவது ஒரு மரத்தின் வேரை உறுதியாக கடித்து மரணம் வரும் வரை அந்நிலையில் உயிர்வாழ வேண்டும். இன்று இதுவே போதுமானது, "தீன் ஆத்மாவும், சரீஅத் " அதன் உடலும் என்பதால் தீன் இன்றி சரீஅத் நிலை நாட்ட முயற்சிக்கின்ற முஸ்லீம்கள் தோல்வியடைந்தவர்தான்.

பிறபடைப்புகளில் இருந்து மாறாக புத்திதிறமை வாய்ந்த மனிதனை பூமியில் நியமித்திருப்பது படைத்தவனின் தொண்டனாக இயற்கையை அதன் சீரான வடிவில் நிலை நாட்டுவதற்காகவே. அதற்கான எடை கருவிதான் குர்ஆனின் கருத்து. ஆனால் கருத்தில்லாமல் கழுதைகளைப்போல (ஜும்ஆ:5 பார்க்கவும்) அதை சுமக்குகின்றமுஸ்லீம்கள் தனக்காக அதை பயன்படுத்தவோ,மட்டுமன்றி பிறருக்கு வழங்கவோ இல்லை. இன்று உலகில் அனைத்து தீமைகளும் புரிவதில் முதல் இடம் பெற்று வாழும் அவர்களின் வாழ்கையை பார்த்து பிறமனிதர்கள் குர் ஆன்என்ன என்று விசாரிப்பதற்கு கூட தயாராகவில்லை. ஏனெனில் இன்று உலகில் நடைபெருகின்றஅனைத்து தீமைகளின் பாவச்சுமை தாங்க வேண்டியது குர் ஆனின் சொந்தக்காரராக வாழும் நம்பிக்கையில்லா நய வஞ்சகர்கள் தான் என்று அன் ஆம்:20 தாஹா:99-100 வசனங்களில் கூறப்பட்டுள்ளது. ஹச்ர்:23-ல் கூறிய நம்பிக்கையாளானான அல்லாகுவின் குணம் தான் உண்மை செவகர்களான நம்பிக்கையாளர்களுக்கும் இருக்கும். தெரிந்தும் முழுமனதாக குற்றம் செய்கின்றநம்பிக்கையில்லா நய வஞ்சகர்களுக்கு அல்லாகு ஒரு பொழுதும் மன்னிக்கமாட்டான். தெரியாமல் தவறு செய்தவற்க்கு அல்லாகு மன்னித்திடுவான். ஒரு தீமை பார்த்தால் கையினால் தடை செய்ய வேண்டும். அதற்க்கும் முடியவில்லை என்றால் நாவினால் தடைய வேண்டும். அதற்க்கும் முடியவில்லை என்றால் மனதால் வெறுக்க வேண்டும். அதுவும் செய்யவில்லை என்றால் சிறுதளவு கூட நம்பிக்கையில்லை என நபி கற்பித்துள்ளார். தவறும் சரியும் புரிவதற்க்கு உதவுதகின்றபசாஇராகிய, ஃபுர்கானாகிய எடைகருவியான குர் ஆனின் கருத்து தென்பட்டும் அதை பயன்படுத்தி கொள்ளாதவர்களை தான் அல்லாகு மன்னிக்கமாட்டான். அத்தகயோரையே பழி வாங்குவான்:சஜத:22 விளக்கம் பார்க்கவும்.

வாழ்க்கையின் லட்சியம் மறந்து மனிதர் இன்று இவ்வுலக வாழ்விலும், ஆசைகளிலும், சொகுசு வாழ்கைகளிலும் அமர்ந்து பூமியையும் இயற்கையையும் அழித்து கொள்ளும் செயல்களில் அதிகமாக மூழ்கியிருப்பதாக பார்க்கலாம். இயற்கையின் முக்கிய பகுதியாகிய பூமியில் நாசத்தை உருவாக்கின்றசெயல்களில் இறுதி நிலையில் பிசாசு தன் உண்மை வடிவில் மனித உருவம் அணிந்து மசீகுதஜ்ஜாலாய் வந்து இயற்கை வாழ்க்கையாகிய இஸ்லாமை முழுதாக அழிப்பான். பிறகு ஈசா இரண்டாவது முறைவந்து அவனை கொலை செய்து அனைத்துலகிலும் அல்லாகு விரும்பிய வாழ்க்கை வழியான இஸ்லாமை நடைமுறைபடுத்துவார். பூமியில் வாழும் மனிதர்களில் ஒருவர் கூட இயற்கையை அதற்கேற்ப உண்மை வழியில் நிலைநாட்ட உதவும் திராசும் ஒப்படைத்த குர் ஆனின் கருத்தை பயன்படுத்தி பொதுவாக விளங்கும் அல்லாகுவின் தொண்டனாக வாழாமலும், நன்மை கூறுவதை விட்டு தீமைகளை பொருட்படுத்தாத நிலை உருவாகும் பொழுதுதான் இறுதி நாளின் மிகமுக்கியமான பத்து அறிகுறிகளில் ஒன்றாகிய மசீகுதஜ்ஜால் வருவது.

## குர் ஆனின் ஆத்மாவு

அனைத்து விவரங்களும் விளக்கமாக உரைத்துள்ள குர் ஆனில் எந்த ஒரு விசயவும் தொடர்ந்து கூறவில்லை. ஆனால் குர் ஆன் வசனங்கள் ஒன்றோடொன்று மாறுப்பட்டதுமல்ல. ஆகையால் குர் ஆனின் வார்த்தைகளை சேர்த்து படித்து புரிந்து கொள்ள வேண்டும். குர்ஆனில் அனைத்து விவரங்களும் ஒன்றிற்க்கு மேற்பட்ட இடங்களிலும் திரும்ப திருப்ப படிக்கமுடிவதால் அதற்கு "மசானி" என கூறப்படுகிறது. எந்த ஒரு விவரவும் முடிவுப்படுத்த வேண்டியது அதற்க்கு சான்றாக அமைந்துள்ள வசனங்கள சேர்த்து படித்து புரிந்து கொள்ளவேண்டும். எடுத்துகாட்டு:1 இஸ்ராஃ:23-ல் தாய் தந்தையோடு பணிவோடு உறவாட வேண்டும் அவர்களில் ஒருவர் உன்னுடன் வயதான நிலையில் வசிக்கும் தருவாயில் வந்தால் அவர்களிடம் "சீ" என்று கூட சொல்லகூடாது என எச்சரித்துள்ளதென்றால் அன்கபூத்:8, லுக்மான்:15 என்றவசனங்களில் அந்த தாய் தந்தையர் உனக்கு புரியாத விவரங்களில் அல்லாகுவின் ஆட்சி உரிமைகளில் பங்கு வைக்க வற்புறுத்தியதால் அவர்களின் வார்த்தைகளை செவியுறகூடாது. அவர்களுடன் இவ்வுலகில் குர் ஆனின் அடிப்படையில் அமைந்த உறவு வைத்து கொள்ள வேண்டும் என கூறியுள்ளது. நீ அல்லாகுவிடம் திரும்பியவர்களின் வழியை பின்பற்றிகொள் என எச்சரித்துள்ளது. தவ்ஃபா:23ல் நம்பிக்கையாளர்களை அழைத்து அல்லாகு கூறுகின்றான். நீங்கள் உங்களுடைய தந்தையையோ, சகோதர்களையை அவர் நம்பிக்கையை விட நம்பிக்கை இழப்பை விரும்புவார் எனில் அவர்களை நண்பர்களோ பாதுகாவலரோ ஆக தேர்ந்தெடுக்ககூடாது. உங்களில் எவரேனும் அவ்வாறு செயல்பட்டால் அப்பொழுது அத்தகையோர் தான் அநீதி இழைப்பவர் என்றும், முஜாதில:22ல் அல்லாகுவினாலும் மறுமைநாளினாலும் நம்பிக்கையடைந்தவர் அல்லாகுவோடும், அவன் இறைதூதரோடும் பகை வைத்து வாழ்பவருடன் அவர் அவர்களின் தாய்தந்தயார், தமையன்மார் உடன் பிறந்தோர், சொந்தகார் தலைவர்கள் எவராயிருப்பினும் சரி. சமமாக ஒத்துழைப்பது நீ பார்க்கமுடியாது எனவும் கூறப்பட்டிருக்கிறது. தாய் தந்தயினருக்கு நம்பிக்ககை உருவாகுவதற்காக குர் ஆனின் கருத்தெல்லாம் கற்றுகொடுத்தும் அவர்கள் நம்பிக்கையில்லாதவராக மரணம் அடைந்தால் அவர்களுக்காக பாவமன்னிப்பு கேட்க இறைதூதருக்கோ, இறைநம்பிக்கையாளருக்கோ அனுமதியில்லை என தவ்பா:113- 114ல்கூறப்பட்டுள்ளது.

இறை நம்பிக்கையாளரான தாய்தந்தையோடு: ''நான்இறந்தால் மறுபடியும் உயிர்ப்பிக்கபடுவதாக நீங்கள் எனக்கு வாக்களிக்கின்றீர்களா''என கேள்வி கேட்டு உயிர்ப்பித்தபின் வரும் வாழ்க்கையை பொய்யாகுகின்றமக்களின் செய்தியில் "முன்பு கடந்து சென்றஜின்னுகளிலும், மனிதர்களிலும் சேர்ந்த இனங்களுடன் நரகத்தில் செல்லவும் என்றசொல் நிரந்தரமாகிவிட்டது என்று அஹ்காஃப்:17 -18ல் கூறப்பட்டுள்ளது நம்பிக்கையாளர்களாகிய தாய்தந்தயினருக்கு அவர்களின் குழந்தைகளை சொர்கத்தில் நல்குவதற்க்காக பதினைந்து வயதிற்க்கு முன்பாக திரம்ப அழைக்கப்படும் என மூசா, ஹிள்ர் நிகழ்சியில் ஹிளர் அவர்களின் குழந்தையை கொன்றசெய்தியில் இருந்து புரிந்து கொள்ளலாம். கஃப்:80-82 விளக்கம் பார்க்கவும்.

தவ்பா:73, தஹ்ரிம்:9 என வசனங்களில் நபியை அழைத்து:குர் ஆனின் கருத்தை மறைத்துவைக்கின்ற போலி நம்பிக்கையாளர்களோடும், குப்பாருகளோடும், ஜிஹாத் செய்வதற்கும்; அத்தகையோரிடம் கடிமையாக செயல்படவும்;அன்னிசா:91,

தவ்ஃபா:123,அஹசாப்: 61 என்றவசனங்களில் நம்பிக்கையாளர்களின் கூட்டத்தோடு, போலிநம்பிக்கையாளனாகிய நயவஞ்சகர்களை எங்கு பார்த்தாலும் அவ்விடங்களில் வைத்து கொன்றுவிட கட்டளையிட்டுள்ளது. நம்பிக்கையாளனின் கூட்டம் இல்லாத இன்று குர் ஆனின் கருத்தை மறைத்து வைக்கின்ற போலி நம்பிக்கையாளர்களான காஃபிர்களுடன் குர்ஆன் கருத்தினால் மிகப்பெரிய ஜிஹாத் செய்ய ஃபுர்கான்:52ன் கட்டளை செயல் படுத்துவதே ஆயிரத்தில் ஒருவனான நம்பிக்கையாளர்களுக்கு செய்யவேண்டும். போலி நம்பிக்கையாளரை பார்கின்ற இடத்தில் வைத்து கொலை செய்வதற்கான கட்டளை செல்படுத்த ஈசா இரண்டாவதாக வந்த பிறகு மட்டுமே அமுல் படுத்தபடும்.

நபியின் வாழ்நாளில் நடைமுறைசெய்த பல வசனங்களையும் இன்று செயல்படுத்த முடியாது. விபசரிப்பவளையும், விபசரிப்பவனையும் 100 அடி தண்டனையாக வழங்கவேண்டும் என்றும், நம்பிக்கையாளர்களில் ஒரு கூட்டம் அச்செயலிற்கு சாட்சியாகவும் வேண்டும் என்று அந்நூற்: 2 -ல் கட்டளையிட்டுள்ளது. "பாவம் புரியாதவர் கல் வீசட்டும்"என்ற ஈசா நபி கற்பித்ததில் இருந்து திருமணமானவர் விபாசாரம் செய்தால் கல் வீசி கொல்வது தான் ஈசா நபியின் காலங்களிலும் தண்டனை என்று புரிந்து கொள்ளலாம். அதை முகம்மத் நபியின் அக்காலத்திலும் செயல்படுத்தியிருந்தார். ஆனால் இறைநம்பிக்கையாளரின் கூட்டம் இல்லாததால், தண்டனை வழங்க தவறு செய்யாதவர் வேண்டும் என்பதனாலும் இன்று அவை செயல்படுத்த முடிவதில்லை. விபசாரத்தை விட மிக கடுமையான தவறான இயற்கைக்கு மாறாக ஓர் இன உறவு செய்பவனையும், செய்ய தூண்டுபவனையும் கொன்றுவிடவேண்டும் என நபி கற்பித்த -லிவாத் (ஒர் இனஉறவு) எங்குமே பரவலாகிவிட்டது. பழய ஏற்பாடு உபாகம் :22ல் வசனம் 23 -24, லேவியராகம்:20 -ல்13 பார்க்கவும்.

மது அருந்துவதை தடை செய்தது மூன்று நிலைகளாகவே. முதலாவதாகபகரா:219" வாயிலாக அவையில் நன்மையும், தீமையும் உண்டு அவற்றில் தின்மைகள் நன்மையைவிட மிக பெரியஅளவே" என்று கூறி அதனுடன் உள்ள ஆர்வத்தை குறைக்கவைத்து. பிறகு அன்னிசா:43 -ல் மது அருந்தியவராக நீங்கள் தொழுகை நடத்தகூடாது என கட்டளை விடுத்து மது அருந்துவதை குறக்க வைத்து. இறுதியில் மாயிதா:90 -91 "உறுதியாக மது கழிவறையாகும். அதனை நீங்கள் விட்டுவிடுங்கள்'' என்றகட்டளையில் மதுவை மொத்தமாக தடை செய்யப்பட்டது. ஆனால் இன்று கடைசியாக கூறிய இரண்டு கட்டளைகளுயும் தொழுகின்றவரும் மற்றவர்களும் கடைப்பிடிப்பதில்லை என பார்க்கலாம். ஆகையால் அத்தகையோரிடம் முதல் கட்டளையின் மூலம் குர் ஆனின் கருத்தை விளக்கி கூறி மது அருந்துவதை தவிர்க்க அறிவுரை கூறமட்டுமே முடியும். ஏனெனில் தெவையில்லாமல் ஜமாஅத் தொழுகைக்கு பள்ளிகளில் வராமலிருந்தவர்களை அவர்களை அவர்களின் வீடுடன் நெருப்புவைத்தாலோ என நான் யோசிக்கின்றேன் என மதீனா வாழ்கையில் ஆரம்பத்தில் நபி கூறுயிருந்தார். ஆனால் இறுதி நாளில் போலிநம்பிக்கையாளராகிய நாற்பதிற்கும் மேற்பட்டவர்களை மதீனா பள்ளியில் இருந்து வெளியேற்றிய பிறகு தான் நபி ஜும்ஆ: தொழுகை நடத்தினார் தவ்பா:101,107,108 விளக்கம் பார்க்கவும். இன்று பள்ளிகள் தலைமை தாங்குபவர்கள் போலிநம்பிக்கையாளர்கள் என்பதால் ஓர் இறைசங்கத்தில் சேராமல் பல வித சங்கங்களாக பிசாசின் சங்கத்தில் சேர்ந்து முஸ்ரீக்குகளாக மாறிவிட்டதாலும் நம்பிக்கையாளர் அவர்களின் பள்ளிகளில் செல்லவோ அத்தகையோருக்கு இமமாக நின்று தொழுகை நடத்தவோ அவர்களின் பின் நின்று தொழவோ கூடாது. குர் ஆனின் கருத்தில்லாததால்

அவர்களின் தொழுகை தீமையும், கேவலவுமான செயல்களை தடை செய்வதற்கு பதில் அவை செயல்படுத்த ஒரு கருவியாக அமைந்திருக்கின்றார்கள். அன்கபூத்:45 விளக்கம் பார்க்கவும். தவ்பா:17-18ல் சத்தியத்தை நிராகரிப்பவர்களாக தாமே சாட்சியழித்து அல்லாகுவின் பள்ளிகளை சேவை செய்ய முஸ்ரீகளுக்கு தகுதியில்லை அத்தகையோரின் செயல்கள் அனைத்தும் அழிந்துவிட்டன. அவர் நரகத்தில் நிரந்தரமானவர்களாவர். உறுதியாக அல்லாகுவின் பள்ளிகள் பராமரிக்க தகுதிவாய்ந்தவர் அல்லாகுவினாலும், மறுமை நாளினாலும் நம்பிக்கை கொன்டவரும், தொழுகை முறையாக கடைபிடிப்பவரும், சக்காத் வழங்குபவரும் அல்லாகுவினை அன்றி பிறர் எவரையும் பயம் இல்லாதவர்கள் மட்டுமே. அத்தகையோர் நேர்வழியான குர் ஆனின் கருத்தை பின்பற்றுவராக மாறலாம். ஆகயால் ஒவ்வொருவரும் பலவிதமான சுற்றுபுறசூழ்நிலைகளிலும் செய்ய வேண்டிய ஒவ்வொரு கடமைகளும் ஒவ்வொரு வசனங்களில் வாயிலாக இறைவன் கற்பித்திருக்கின்றான்.

## பொய்புரளாத வெற்றியடையும் நூல்

வேதத்தின் ஆத்மாவிற்கு" அத்திக்ர்" என்று கூறப்பட்டுள்ளது அதற்கு ஞாபகப்படுத்தல், அறிவுரை, நல்லுரை என்றெல்லாம் பொருள் இருப்பினும் கருத்து உள்ளத்தின் மொழியில் அமைந்த குர் ஆனின் "ஆத்மாவ்" என்பதே. வேதத்தின் ஆத்மாவாகிய கருத்தை விட்டு உயிராகிய பொருளும், விளக்கவும் அமைந்த நூல்கள் பல இருப்பினும் அவையாவுமே தனிநபர்களின்முடிவும், மதவிருப்பவும், சங்கத்தின் கொள்கையும் சேர்த்து வைத்திருப்பதால் இறைவனின் அல்ல. ஆனால் குர் ஆனின் ஆத்மாவ் என்றநூல் ஃபுசீலத்: 41 - 43ல் கூறிய பொய்புரளாத வெற்றிவாய்ந்த இறைவனைபோலவே வெற்றி வாய்ந்தநூலே. அது ஃபுர்கான்:33 ல் கூறிய மிகசிறந்த விளக்கம் அளிக்கின்றநூலும் இதுவே. உறுதியாக நாமே குர் ஆனின் கருத்தை வெளிப்படுத்தியுள்ளோம். நாமே அதை பாதுகாப்போம் என ஹிஜர்:9 -ல் கூறியுள்ளததும். அது சீர்படுத்துவதற்க்கு முன்பும், பின்பும் அதில் படைப்புகளில் எவரின்கையும் நுழையாது என கூறியுள்ளது குர் ஆனை அல்ல. அன்றி "அத்திக்ர்" கருத்தை என்பது நன்றாக கவனிக்கவும்ஃபுசிலத் 44 ன் படி இறைமறுப்பாளர்கள் தேவைப்பட்டது அரபி அல்லாத பிறமொழியில் உள்ள நூல் கொன்டு வரவேண்டுமென்று. ஆனால் அத்திக்ர் என்று பிறமொழியில் இப்பொழுது தென்பட்டுவிட்டது. இந்த பெயரில் இதற்கு முன் எந்த ஒரு குர் ஆன் விளக்கவுரையும் உருவாகவில்லை என்பதும் குறிப்பிடதக்கது. அதனால் **குர் ஆனின் ஆத்மாவ்** என்றநூல் எந்தவிதமான மாற்றுதல், திருத்தல்கள் செய்ய படைப்புகளில் எவருக்குமே முடியாது. அதன் பகர்ப்பு பதிப்பு உரிமை அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது என்றஅறிக்கை அது இறைவனின் என்பதால் மட்டுமே. இது படைப்புகளில் ஒருவரின் எழுத்தென்று போலிநம்பிக்கையாளர் கூறுகையில் அத்தகையோருடன் "அத்திகர்" போன்ற ஒரு நூல் கொண்டு வர குரல் எழுப்புகிறோம். அரபி மொழியில் மிகப்பெரிய மாமேதைகள் எனறு நடிப்பவர்களுக்கும் சட்ட விற்பனையாளர்களுக்கும்,வாடகை பேச்சாளர் "ஹசரத்" போன்றவர்களுக்கும் இந்த குரல் எழுப்பை எற்று கொண்டு அதற்க்காக முயற்சி செய்யலாம்.

லுக்மான்:27ல் அல்லாகு கூறுகின்றான் பூமியில் உள்ள அனைத்து மரங்களை எழுதுகோலாகவும் கடலும் அதுபோன்றஏழு கடலும் கொன்டு வந்து மசியாகவும் பயன்படுத்தினால் கூட அல்லாகுவின் வசனங்கள் கலிமாத் எழுதிமுடிக்க இயலாது. குர் ஆனின்

உடலையும், பொருளையும் எழுதி முடித்துவிடலாம் என்றாலும் கருத்தை எழுதினாலும் பேசினாலும் முழுவடையாது என்று அல்லாகு கூறுகின்றான்.முக்கால ஞானமாகிய குர் ஆனின் கருத்தில் அனைத்து விவரங்களும் விளக்கியுள்ளது ஆனால் அவை பல நிலைகளாக தான் உலகில் வெளிவானது. முன்காலங்களில் வெளியாகதவை இக்கால அளவில் வெளிவாகியுள்ளது மீண்டும் பலவகைகள் வரும் ஆண்டுகளில் வெளிவாக இழுக்கின்றது ஃபுசிலத்:53ல் பார்வைகளிலும், அவர்களிலும் நம்முடைய வசனங்கள் நாம் அவர்களுக்கு தென்படவைப்போம் என கூறப்பட்டுள்ளது. உறுதியாக அது உண்மை என உணரும்வரை என்று கூறப்பட்டுள்ளது.

கடந்க காலங்களில் புரியாதவையும் ஆனால் இன்றய காலங்களில் வெளிவான சில நிகழ்ச்சிகள்:

